ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on : 24th June 2015
Posted on : 1st July 2015

Registrar of Newspapers for India No. 24495/74
"Registration" No. TN/CH©/219/2015-2017
WPP No.: TN/PMG (CCR)/WPP No.150/2015-2017


# Employment News
WEEKLY

**Looking for a good job in Govt./PSU/SSC/UPSC RRB/Armed Forces/Banks.**




Employment News is your best guide. We have remained the largest selling weekly on jobs for over 30 years. Be a part of the leader.

*Visit our website :*
*employmentnews.gov.in*

- Developed on latest technology
- Having an advanced search engine
- Specialists replying to readers' queries

**Contact nearest distributor for your copy of Employment News/Rozgar Samachar**

*For business enquiries please Contact :*
Employment News, East Block 4, Level 5, R.K. Puram, New Delhi.
Ph : 26182079, 26107405. Email : enabmsa@yahoo.com

**PUBLICATIONS DIVISION**
Ministry of Information & Broadcasting
Government of India

Cir./EN-SP-3/08


Printed & Published by Dr. Ms. Sadhana Rout Additional Director General & Head, on behalf of Publications Division, Ministry of Information and Broadcasting
and Printed at Yuvasakthi Prints Pvt. Ltd., No.2, 8th Street, Dr.Subbarayan Nagar, Kodambakkam, Chennai-600 024. Ph: 2372 4901
Published at 'A' wing Ground Floor, Shastri Bhavan, Chennai-600 006. Ph: 28272382



# திட்டம்

ஜுலை 2015 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 10/-

## பன்னாட்டு உறவில் புதிய காட்சிகள்

இந்தியாவும் அண்டை நாடுகளும் :
பலப்படும் உறவுகளும் புதிய போக்குகளும்
– அச்சல் மல்ஹோத்ரா

இந்திய அமெரிக்க உறவுகள்
– K.C. சிங்

நல்லாட்சி–நடைமுறைப்படுத்தப்படும்
விதமும், உள்ளடக்கமும்!
– முனைவர். ஏ. சூரியபிரகாஷ்

சிவில் சர்வீசஸ் தேர்வுகள் – 2015
– வை. பழனிச்சாமி, ஐ.ஐ.எஸ்.











# இந்தியாவும் அண்டை நாடுகளும் : பலப்படும் உறவுகளும் புதிய போக்குகளும்

– அச்சல் மல்ஹோத்ரா

2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இந்தியாவில் வலுவான நிலையான ஆட்சி ஏற்பட்டதும், இந்தியாவுடனான உறவு நிலையில் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்று நமது அண்டை நாடுகள் உள்ளிட்ட சர்வதேச சமூகம் அக்கறை காட்டத் தொடங்கிவிட்டது. உலக நாடுகளுடன் நல்லிணக்கத்தைப் பேணுவதில் தனிக் கவனம் செலுத்திய பிரதமர், கடந்த ஓராண்டில் பத்தொன்பது நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். நம் நாட்டிற்கு வருகை புரிந்த பல்வேறு வெளிநாட்டுத் தலைவர்களிடமும் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பிராந்திய அமைப்புகள், இருதரப்புக் கூட்டங்கள் போன்றவற்றில் பங்கெடுத்தபோது, உலகின் முக்கியத் தலைவர்கள் அனைவரிடமும் கலந்துரையாடியிருக்கிறார்.

தற்போதைய மத்திய அரசின் வெளி நாட்டுக் கொள்கையில் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்பது தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் நரேந்திரமோடி பதவி ஏற்பு விழாவிற்க சார்க் நாட்டுத் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். தெற்காசியாவில் உள்ள தனது அண்டை நாடுகளுக்கு இந்தியா பெரிதும் முக்கியத்துவம் அளிக்கிறது என்பதையே அந்த அழைப்புத் திட்டவட்டமாக எடுத்துரைத்தது. அதேபோல அந்த அழைப்பை ஏற்று வருகை புரிந்த அனைத்துத் தலைவர்களும், இந்தியாவின் ஒத்துழைப்புக் குரலுக்குத் தமது ஆதரவைத் தமது வருகையினாலேயே புலப்படுத்திவிட்டனர். தொடக்க நிலைத் தொடர்புகளுக்கு நல்வாய்ப்பாக அமைந்த அதற்குப் பின்னர், பரஸ்பர விஜயங்கள் நிகழ்ந்தன; சர்வதேச மாநாடுகள், மண்டல மாநாடுகள் போன்றவற்றில் தொடர் பேச்சுவார்த்தைகளும் நிகழ்ந்தன. சார்க் நாடுகள் ஏழில், கடந்த ஓராண்டில் பூடான், நேபாளம், இலங்கை, வங்கதேசம் ஆகிய நான்கு நாடுகளுக்கும் சீனாவுக்கும் சென்று வந்துள்ளார். அரசியல் மற்றும் பாதுகாபபுக் காரணங்களினால், எஞ்சியுள்ள சார்க் நாடுகளான, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலத்தீவுகள் ஆகியவற்றுக்கான பயணம் சில காலம் கழித்துத்தான் மேற்கொள்ளப்படும். எனினும் ஆட்கன் அதிபர் கடந்த ஏப்ரலில் இந்தியாவுக்கு வந்தார். தனது பதவியேற்பு விழாவின்போது பாகிஸ்தான் பிரதமரையும், மாலத்தீவு பிரதமரையும் புதுதில்லியில் நரேந்திர மோடி சந்தித்துப் பேசியுள்ளார். இவ்வாறாகக் கடந்த ஓராண்டில் அண்டை நாட்டுத் தலைவர்களை ஒருமுறையேனும் நமது பிரதமர் சந்தித்துள்ளார். சிலருடன் ஒன்றுக்கும் மேற்பட்ட தருணங்களில் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

தெற்காசிய மண்டலத்தில் உள்ள நாடுகளுடன் இந்தியாவின் உறவுநிலை பெறும் வடிவம் குறித்து விவாதிப்பதற்கு முன், இந்த மண்டலத்தைப் பற்றிப் புரிந்து கொள்வது அவசியம். சுருங்கச் சொல்வதானால் தெற்காசிய மண்டலம் மிகவும் குழப்பமான நிலையில் உள்ள பகுதியாகும். இப்பகுதியில் உள்ள நாடுகளுக்குப் பொதுவான சில மரபுகளும், வரலாற்றுத் தொடர்புகளும் உண்டு. எனினும் இந் நாடுகளிடையே சமய, இன, மொழி அரசியல் ரீதியான வேறுபாடுகளும் நிரம்ப உண்டு. இந்த நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்துள்ளன; விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ளன; அணு ஆயுதப் போட்டிகள் நிலவியுள்ளன; சர்வாதிகார

(தொடர்ச்சி 4–ம் பக்கம்)

**அச்சல் மல்ஹோத்ரா, அர்மேனியா மற்றும் ஜார்ஜியா நாடுகளின் இந்திய தூதுவராகப் பணியாற்றியவர்**



பாபு இயற்கை வைத்திய மருத்துவ மனை மற்றும் யோகாஸ்ரமத்தின் ஆராய்ச்சி மற்றும் விருப்பத்துறைகள்

பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமத்தின் ஆராய்ச்சிப் பிரிவு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தப் பிரிவின் சார்பில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவுடன் ரூமேட்டாய்ட் ஆர்த்ரைடிஸ் நோய்க்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆதரவுடன் முடிங்கால் மூட்டில் ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ், ஆயுஷ் அமைச்சகத்தின் ஆதரவுடன் நீரிழிவு நோய் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயுஷ் அமைச்சகத்துடன் இணைந்து ஹைப்போதைராய்செம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுவின் ஆதரவுடன் மூத்த குமேக்களின் வலி மேலாண்மை ஆகியவை குறித்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. புறநோயாளிகள் பிரிவு மற்றும் உள்நோயாளீகள் பிரிவுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளிடம் கண்டறியப்படும் பல்வேறு நோயகளுக்கான சிகிச்சை முறைகள் குறித்தும் இந்த மருத்துவமனை ஆராய்ச்சி செய்து வருகிறது.

இறுதி செய்யப்பட்ட மற்றும் செயலாக்கத்தில் உள்ள ஆராய்ச்சித் திட்டங்களின் முடிவுகள் வருமாறு:

* ரூமேட்டாய்டு ஆர்த்ரைடிஸ் குறித்த ஆராய்ச்சி முடிவில், யோகா, இயற்கை மருத்துவம் ஆகியவற்றுடன் நவீன மருத்துவத்தையும் சேர்க்கும்போது இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதலான உடல் மற்றும் மனம் சார்ந்த நன்மைகள் கிடைக்கின்றன. ரூமேட்டாய்டு ஆர்த்ரைடிஸ் நோயின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் திறன் இயற்கை மருத்துவம் மற்றும் யோகாவுக்கு இருப்பதால், இவற்றை வழக்கமான மருத்துவத்துடன் கூடுதல் மருத்துவமான பயன்படுத்தலாம்.

*அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் முடிங்கால் மூட்டு ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் குறித்த ஆய்வு முவெடையும் நிலையில் உள்ளது. 60 வயது மற்றும் அதற்கு அதிக வயதுடையவர்களுக்கு இந்த நோயால் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்படி இந்த நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இயற்கை மருத்துவம், யோகா மற்றும் இவற்றுக்கு உதவியாக உடல் இயக்கப் பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றால் குணப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய சிகிச்சைப் பெற்ற நோயாளிகளுக்கு வைட்டமின் டி3 அளவு அதிகரித்திருப்பதுடன் வலியின் அளவும் குறைந்திருப்பதை உணரமுடிகிறது.

**நிறைவுரை:**

இயற்கை மருத்துவமுறை ஒரு தலைசிறந்த மாற்று மருத்துவமுறை என்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மருத்துவமுறையை நாட்டின் தொலைதூரப்பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற துறைகள் மூலம் பெரிய அளவில் கொண்டு செல்ல மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நிதி ஆயோக் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய மருத்துவக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தான் இவ்வாறு செய்யப்படுகிறது. இந்தியாவில் சுகாதாரக் கட்டமைப்பு மற்றும் சேவைகளை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்தல், மேம்படுத்துதல், திறன் மேம்பாடு செய்தல், செயல்படுத்துதல் ஆகியவற்றில் தனக்குள்ள கட்டமைப்பு மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டு பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமம் முக்கிய பங்காற்ற முடியும்.●

# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 11

ஜூலை 2015
ஆஷாட – ஷ்ராவண் – 1937



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**



கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382



**இந்தியாவும் அண்டை நாடுகளும் : பலப்படும் உறவுகளும் புதிய போக்குகளும்**
– அச்சல் மல்ஹோத்ரா

**இந்திய அமெரிக்க உறவுகள்**
- K.C. சிங்

**நல்லாட்சி–நடைமுறைப்படுத்தப்படும் விதமும், உள்ளடக்கமும்!**
– முனைவர். ஏ. சூரியபிகாஷ்

**மோடி அரசின் முதல் ஆண்டு : பாதுகாப்புத்துறை உந்தும் வெளி உறவுகள்**
— அலோக் பன்சல்

**இந்திய சீன உறவு: மாறிவரும் பந்தம்**
— மணீஷ் சந்த்

**சிவில் சர்வீசஸ் தேர்வுகள் 2015 பூர்வாங்க தேர்வில் செய்யப்பட்டிருக்கும் மாற்றங்களின் சாதகங்களும் பாதகங்களும்**
– வை. பழனிச்சாமி

**இயற்கை மருத்துவம்: இந்தியாவின் மருத்துவ சவால்களுக்கான தீர்வு**
– மருத்துவர் ஆர்.எம். நாயர்

*(2ம் பக்க அட்டை தொடர்ச்சி.....)*

ஆட்சிகள் நடந்துள்ளன; பயங்கரவாதம், மதத் தீவிரவாதம், போதைப் பொருள் வாணிகம் எனப் பல பிரச்சினைகளும் காணப்படுகின்றன. சமயச் சகிப்புத் தன்மையைப் பொறுத்தவரையில், நெகிழ்வுப் போக்குடைய சமயச் சார்பின்மை முதல், இறுக்கமான மத அடிப்படைவாதப் போக்குகள் வரை பலவும் காணக்கிடைக்கின்றன. உலகிலேயே மிகவும் ஒருங்கிணைக்கப்படாத மண்டலமாக தெற்காசியா விளங்குகிறது. 'சார்க்' அமைப்புத் தோன்றி முப்பதாண்டுகள் ஆனபோதும். குறிப்பிடும்படியான முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. அண்டைக் காலமாகத்தான் இப்பகுதியில் சில ஜனநாயக அரசுகள் தோன்றியுள்ளன. சில நாடுகளில் பொருளாதார வளர்ச்சி அரும்பத் தொடங்கியுள்ளது.

இந்த மண்டலத்தில் இந்தியாவின் நிலை என்ன? பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பெரிய நாடான இந்தியாவில், ஜனநாயகம் துடிப்புடன் செயல்படுகிறது. அபார பொருளாதார ஆற்றலுடன் சர்வதேச அரங்கில் புதிய தோற்றத்தைப் பெற்றுள்ள இந்தியா, உலக விவகாரங்களில் முக்கியப் பங்கு வகிக்கும் சக்தியாக அனைவராலும் கருதப்படுகிறது. இதனால், தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளை விட இந்தியா கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. ஆனால் இந்த நிலையை அண்டையில் உள்ள சின்னஞ் சிறு நாடுகள், 'மேலாதிக்கப் போக்கு' எனத் தவறாக எண்ணுகின்றன. சில சமயங்களில், இந்தியாவிடம் இருந்து சலுகைகளைப் பெறுவதற்காகவே, தாம் சீனாவுக்கு நெருக்கமாகச் செல்வது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

2014 நவம்பர் 26ல் காத்மாண்டுவில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் உரையாற்றிய பாரத பிரதமர் நரேந்திர மோடி, இம் மண்டலம் பற்றிய இந்தியாவின் பார்வை என்னவென்று தெளிவுபடுத்தினார். "இந்த மண்டலத்தில் நமது நிலை ஐந்து தூண்களில் நிற்கிறது. அவை, வாணிகம், முதலீடு, உதவி, அனைத்துறையிலும் கூட்டுறவு, மக்களிடையே தொடர்பு ஆகியவை. இவையாவற்றுக்கும் தடையில்லாத தொடர்புகள்" என்று அவர் கூறினார். முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "புதிய விழிப்புணர்வு" ஏற்பட்டுள்ளது என்றும், சார்க் நாடுகளிடையே பிணைப்பு வலுப்பெறும் என்றும் கூறியதோடு, "சார்க் அமைப்பிற்கு உள்ளேயோ அன்றி புறத்தேயோ, அல்லது எல்லா சார்க் நாடுகளுக்கு இடையேயோ அன்றி ஒரு சில நாடுகளுக்கு இடையேயோ" நிச்சயம் பிணைப்பு வலுப்பட்டே தீரும் என்றார்.

இனி தெற்காசிய மண்டலத்தில் உள்ள முக்கியமான சில நாடுகளுடன் நமது உறவு எவ்வாறு புதிய உருக் கொள்கிறது என்று காண்போம்.

**பூடான்:** பூடானுடனான நமது உறவு மிகக் கவனமாக வளர்க்கப்பட்டு, மற்ற நாட்டின் உறவுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது எனலாம். பிரதமராகப் பதவி ஏற்றபின் நரேந்திர மோடி முதன் முதலாகச் சென்ற வெளிநாடு பூடான். நம்பகமான நல்ல நண்பனாக அந்நாடு திகழ்கிறது என்பதையும், அதற்கு இந்தியா மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது என்பதையும் அடுத்தப் பயணம் எடுத்துக்காட்டியது. பொருளாதார உறவும், வளர்ச்சியும் அப்போது வலியுறுத்தப்பட்டன. பூடான் அரசு 1961லிருந்து தொடங்கிய ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இந்தியா அளித்துவரும் உதவியை அந்நாடு நன்றிப் பெருக்கோடு பாராட்டியது. நீர் மின் திட்டங்களில் இந்தியாவும் பூடானும் இணைந்து செயல்படுவது இருநாடுகளுக்குமே மிக்கப் பயனுள்ளதாக உள்ளதுடன், மற்ற நாடுகளுக்கும், குறிப்பாக நேபாளத்திற்கு அதுபோன்ற ஒத்துழைப்பில் ஈடுபட முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பூடானில் உள்ள நீர்வள ஆதாரங்களில் மின் திட்டங்களைச் செயல்படுத்த இந்தியா

உதவியுள்ளது. பெருகிவரும் தனது மின் தேவைக்காக பூடானில் உள்ள இருந்து மின்சாரத்தை இந்தியா வாங்குகிறது; அதனால் அந்நாட்டுக்குப் பெருமளவு வருவாய் கிடைக்கிறது. 2003ஆம் ஆண்டில், இந்தியாவுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களைத் தன் மண்ணில் இருந்து பூடான் விரட்டி அடித்து; இந்தியாவின் நலனுக்கு எதிரான செயல்கள் தன்நாட்டில் நடைபெற ஒருபோதும் பூடான் அனுமதிக்காது என்று பிரதமரின் பயணத்தின்போது உறுதி அளிக்கப்பட்டது.

**வங்கதேசம்** : 1971ல் வங்கதேசம் விடுதலை பெறுவதற்காக நடந்த போரில் இந்தியாவின் பங்களிப்புப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பாராட்டப்பட்ட போதிலும், அந்நாட்டுடனான உறவு பல ஏற்ற இறக்கங்களை கண்டுள்ளது. ஷேக் ஸினா தலைமையிலான அவாமி லீக் கட்சி இந்தியாவுடன் மென்மையான போக்கையும், பேகம் கலிதா ஜியா தலைமையிலான பங்களாதேஷ் தேசிய கட்சியினரும் பங்களாதேஷ் ஜமாத் – இ – இஸ்லாமி அமைப்பினரும் கடுமையான போக்கையும் கொண்டுள்ளனர். அண்மைக்காலமாக இந்த இரண்டு கட்சிகளுமே மாறி மாறி அந்நாட்டில் ஆட்சி புரிவதால் அதற்கு ஏற்படவே இந்திய உறவு மாறுபட்டு வந்துள்ளது. வங்கதேச மண்ணில் இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகள், அந்நாட்டில் இருந்து சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் குடியேறுதல், அதனால் வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்ட அமைதியின்மை, தீர்மானிக்கப்படாத எல்லைகளின் வழியாக நடைபெற்ற கடத்தல் வேலைகள், நதிநீர்ப் பங்கீடு, போன்ற பலவற்றாலும் இரு தரப்பு உறவுகள் சீர்குலைந்துள்ளன. எனினும் கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய கவலைகளில் ஷேக் ஹஸினா தலைமையிலான அரசு போதிய அளவு கவனம் செலுத்தியுள்ளது. ஆனால் இதற்குப் பிரதிபலன் ஏதும் இந்தியாவிடம் இருந்து கிடைக்கவில்லை என்றும் அந்நாடு கருதியது. இந்தப் பின்னணியில் (2015 ஜூன் 6, 7) தனது ஓராண்டு ஆட்சி நிறைவுக்குப் பின்னர் நரேந்திர மோடி வங்கதேசத்திற்குச் சென்றார். 1974ஆம் ஆண்டு கையெழுத்தான போதிலும், பல்வேறு காரணங்களால் அடுத்தடுத்து இந்தியாவில் அமைந்த அரசுகளால் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் இருந்த நில எல்லை ஒப்பந்தம் இந்தப் பயணத்தின் மையப் புள்ளியாக விளங்கியது. 1974ஆம் ஆண்டு நில எல்லை ஒப்பந்தத்திற்கு100ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் இசைவைப் பெறுவதற்காக அசாம், மேற்குவங்க மாநிலங்கள் உள்பட அனைத்துத் தரப்பின் ஆதரவையும் பெறப் பிரதமர் துடிப்போடு செயல்பட்ட விதம் பாராட்டுக்குரியது. இந்த நடவடிக்கை மூலம் இருநாடுகளுக்கும் இடையேயான 4096 கி.மீ. நீள எல்லைப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. இருநாடுகளிலும் வசித்த ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் புதிய அடையாளம் கிடைத்திருக்கிறது. மேலும், கிளர்ச்சிக்காரர்கள் நடமாட்டம், சட்ட விரோத குடியேற்றம், கடத்தல் வேலை போன்றவற்றுக்கு முடிவு கட்டப்படும்.

பிரதமரின் இந்தப் பயணத்தின்போது நிகழ்ந்த மற்றுமொரு முக்கியப் பயன், இந்தியாவின் வாணிகத்திற்கும் பயணத்திற்கும் வங்கதேசம் தனது எல்லை வழியாக அனுமதி அளித்துள்ளதாகும். இதுநாள்வரை 'கோழிக் கழுத்து' (Chicken neck) என்று சொல்லப்பட்ட குறுகலான சிலகுரிபாதை வழியாக மட்டுமே இருந்த தொடர்பு இனி வேறு பல வழிகளிலும் உருவாகும். இதனால் வடகிழக்கு பிராந்தியத்திற்கும் இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும் இணைப்பு மேம்பாடும் டாக்கா – ஷில்லாங் – குவகாத்தி மற்றும் கொல்கத்தா – டாக்கா – அகர்தலா பேருந்து சேவைகள் தொடங்கியுள்ளன. இதுபோலவே கடற்கரையோர கப்பல் போக்குவரத்து உடன்படிக்கையும் சரக்குப் போக்குவரத்துத் தொலைவைச் சுருக்கிவிடும். இன்னும் முக்கியமானது, வங்கதேசத்தின் சிட்டகாங் மற்றும் மோங்கலா துறைமுகங்களை நம் நாடு

பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதாகும்.

வங்கதேசத்தில் அமைந்துள்ள இந்தியாவின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் நமது முதலீடு அதிகரிக்கும். இதனால் அந்நாட்டின் வாணிகப் பற்றாக்குறை சுருங்குவதுடன், வேலைவாய்ப்புகளும் பெருகும். மேலும் தற்போது இந்தியா அறிவித்துள்ள 200 கோடி டாலர் கடன் உதவியைக் கொண்டு அந்நாட்டின் சாலை, ரயில்பாதை, துறைமுகம், உள்நாட்டு நீர்வழி, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகள் மேம்படும். அத்தோடு, இந்தியாவில் இருந்து அந்நாட்டுக்கு ஏற்றுமதியாகும் பொருள்கள் மற்றும் சேவைகளின் அளவும் அதிகரிக்கும்.

இந்திய – வங்கதேச உறவு தற்போது புதிய, நல்ல கட்டத்தை எட்டியுள்ளது. மேலும் நதிநீர்ப்பகிர்மானம், அணுசக்தி உள்ளிட்ட மின்சக்தித் துறை, விண்வெளி, வாணிகம், முதலீடுகள் போன்றவற்றில் மேலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்களும் சமீபத்திய பிரதமரின் பயணத்தின்போது கையெழுத்தாகியுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பயணம் இந்தியாவின் செயலாண்மை மீது வங்கதேசத்திற்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**ஆப்கானிஸ்தான்** : பல ஆண்டுகளாகவே ஆப்கானிஸ்தான் மிகுந்த நெருக்கடியில் உள்ளது. அந்நாட்டின் இப்போதைய நிலை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே உள்ளதால் மிக்கக் கவலை தருகிறது. ஆப்கனில் இருந்து நேட்டோ படைகள் விலக உத்தேசித்துள்ளன. அண்மையில் அங்கு ஏற்பட்ட அரசியல் மாற்றமும் சுமுகமாக நடைபெறவில்லை. தாலிபன் கைகளில் ஆப்கன் அகப்பட்டுக் கொள்வதை இந்தியா அனுமதிக்க முடியாது. பாகிஸ்தானின் நிழலாக, அடிப்படைவாத சக்திகளின் ஆட்சி அங்கே ஏற்பட்டாலும் அது நமது நலனுக்கு உகந்தது அல்ல. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் பதவியேற்றதும் ஆப்கனின் புதிய அதிபர் முகமது அஷ்ரப் கனி, அந்நாட்டின் வெளியுறவு விவகாரங்களில் இந்தியா மிகவும் கீழ் வரிசையில்தான் இருக்கிறது என்று காட்டும்படியாகப் பல காரியங்களைச் செய்தார். பதவி ஏற்றுப் பல மாதங்கள் கழிந்த பின்னரே (2015 ஏப்ரல் 28–29) அவர் இந்தியா வந்தார். அதற்கு முன்பாகவே சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சென்று வந்தார். இந்தியப் பயணத்திற்கு முன்பாகவே இங்கிலாந்துக்கும் சவுதி அரேபியாவுக்கும் போய் வந்தார். இவற்றின் மூலம் இந்தியாவிற்குப் பாதகமாகவும் பாகிஸ்தானுக்கு அனுகூலமானதாகவும் ஆப்கானிஸ்தானின் கொள்கை மரிவிட்டதோ என்று கேள்விகள் எழும்பின. எனினும் அதிபர் புதுதில்லியில் இருந்தபோது இந்தக் கேள்விகளை மறுதலிக்க முயன்றார். "இன்னும் காலம் கடத்துவதைவிட இப்போதே இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டுவிட்டேன்" என்று செய்தியாளர் கேள்விக்கும் பதில் அளித்தார். மேலும் 2015 ஏப்ரல் 28ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்திய – இந்திய ஆப்கன் கூட்டறிக்கையில், "இந்த மண்டலத்தின் அமைதியும், வளமும், பாதுகாப்பும் பிரிக்க முடியாதவை; இரு நாடுகளின் பரஸ்பர உறவு, மற்ற நாடுகளுக்குப் பாகமானதாக அமையாது" என்று சொல்லப்பட்டது.

எனினும், ஆப்கானிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏற்படக் கூடிய மாற்றங்களை இந்தியா உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது. இரு தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் அந்நாட்டுக்கு 200 கோடி டாலர் கடன் உதவி வழங்கவும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது. இந்த உதவியினால், அந்நாட்டில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த அந்நாட்டு ராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கவும் இந்தியா முன்வந்துள்ளது.

**பாகிஸ்தான்** : 1947ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிவினையில் இருந்தே இருநாடுகளுக்குமான உறவு சுமுகமாகவே இல்லை. 1948, 1965, 1971 ஆண்டுகளில் போர்கள் நடைபெற்ற; 1999ல் கார்கில் யுத்தம் நடந்தது.

எல்லை தாண்டி வரும் பயங்கரவாதப் போர் தொடர்ந்து கொண்டே வருகிறது. இயல்பு நிலையை ஏற்படுத்த அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், மீண்டும் முதலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் புதிய அரசு அமைந்த போது பாகிஸ்தானுடன் உறவு மிகவும் கீழ்நிலையில்தான் இருத்து. பிரதமரின் பதவி ஏற்பு விழாவிற்கு சார்க் நாட்டுத் தலைவர்களை அழைத்தபோது பாகிஸ் தானுக்கும் அழைப்பு அனுப்பி சகஜ நிலையை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொடக்கத்தில் தயங்கிய நவாஸ் ஷெரீப், பின்னர் பதவி ஏற்பு விழாவிற்கு வந்தார். வெளியுறவுத் துறை செயலாளர்கள் நிலையில் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது என ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் சென்ற ஆகஸ்டில் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் பாகிஸ்தான் புறப்படும் முன்பாக, இந்தியாவில் இருந்த பாகிஸ்தான் ஹை கமிஷனர் கஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களை அழைத்துப் பேசியதால், இந்தியா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பேச்சுவார்த்தை முயற்சியை நிறுத்திவிட்டது. கஷ்மீர் பிரிவினை இயக்கத் தலவர்களிடம் பாகிஸ்தான் அதிகாரிகள் பேச்சு நடத்துவது வழக்கமானதுதான் என்றாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் மூலம் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திவிட்டது.

"ஹுரியத் அமைப்புத் தலைவர்கள் எனப் படுவோரை பாகிஸ்தான் ஹை கமிஷனர் அழைத்திருப்பது அந்நாட்டின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. பாகிஸ்தானின் எதிர்மறையான போக் கும், இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடும் போக்கும் தொடர்வதையே அது காட்டுகிறது..." என்று அரசின் அறிக்கை கூறியது. பின்னர் ஐ.நா. பேரவையில் கஷ்மீர் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு மீண்டும் கொண்டுவர பாகிஸ்தான் முயன்றபோது நிலைமை மேலும் சிக்கலாகியது. 1972ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தப்படி கஷ்மீர் பிரச்சினை இந்திய–பாகிஸ்தான் இருதரப்பு விஷயமாகவே கருதப்படும் என்று பாகிஸ்தான் ஒப்புக் கொண்டது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

சார்க் நாடுகளுக்கு இந்திய வெளி யுறவுத் துறை செயலாளர் சுற்றுப் பயணம் மேற்கொள்கின்ற திட்டப்படி பாகிஸ்தானுக்கும் அவர் செல்வதாக அறிவிக்கப்பட்டபோது, இந்திய–பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் தொடங்கக் கூடும் என்று ஊடகங்களில் செய்திகள் வந்தபோது, இந்தியாவின் பாகிஸ்தான் கொள்கைதான் என்ன?" என்று கேள்விகள் எழும்பின. 2015 மே 31ல் பத்திரிகையாளர்களிடம் பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், இவ் விஷயத்தில் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்றும், பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மூன்று அளவுகோள்களை அரசு நிர்ணயித்து அவற்றின்படியே தொடர்ந்து செயல்பட்டு வருவதாகக் கூறினார். முதலாவதாக, எல்லாப் பிரச்சினை களும் அமைதியான வழியில் பேசித் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இரண்டாவதாக இந்திய–பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் மூன்றாவதாக எந்த நாட்டையும் சேர்க்கக் கூடாது. மூன்றாவதாக சிம்லா உடன்படிக்கை மற்றும் லாகூர் பிரகடனங்களின்படி அமைதியான சூழலில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். இந்த அளவுகோல்கள் பற்றி பாகிஸ்தானுக்குத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டு, அவற்றின்படியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தியா–பாகிஸ்தான் பிரச்சினையின் மூல காரணம் கஷ்மீர் சம்பந்தப்பட்டது அல்ல. பிரச்சினையின் மூலவேர், பாகிஸ்தானில் உள்ள பல்வேறு அதிகார மையங்கள். அதிகாரமிக்க ராணுவம்,

செல்வாக்கு மிக்க உளவுத் துறை (ஐஎஸ்ஐ) தீவிர வாதக் குழுக்கள், ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பலவீனமான அரசு என்று பல அதிகார மையங்கள். இவற்றுக்கு இடையே இந்திய உறவை பற்றி ஒருமித்த கருத்து ஏற்படாதவரை, உறவில் முன்னேற்றம் என்பது வெறும் கனவே.

**இலங்கை** : எல்.டி.டி.இ. அமைப்பு 2009 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட பின்னர் இலங்கையில், இந்தியாவின் அணுகுமுறை பன்முக நோக்கிவானதாக மாறிவிட்டது. i) இலங்கைத் தமிழர்களுக்கு அந்நாட்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு அளிக்க இலங்கை அரசினை வலியுறுத்தல் ii)13ஆவது திருத்தத்தை நீர்த்துப் போகவிடாமல், தமிழ்ச் சமூகத்திற்கு சமத்துவமும், நீதியும் சுயமரியாதையும் கிடைப்பதை உறுதி செய்வது iii) நீண்ட காலம் நடைபெற்ற உள்நாட்டுப் போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்குப் பகுதியின் புனரமைப்பிற்குச் செலவிடுவது iv) இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைமைகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வழிகாணுகின்ற அதே வேளையில், குறுகிய வட்டார அளவிலான முன்னுரிமைகளை விட, பரந்துபட்ட தேசிய நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் அதிகாரத்தைச் செயல்படுத்துதல். v) இலங்கையைத் தன்பால் ஈர்க்க சீனா மேற்கொள்ளும் யுக்திகளை உன்னிப்பாகக் கவனித்து, இலங்கை சீனாவின் பக்கம் சாயாமல் பார்த்துக் கொள்வது vi) மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது.

இலங்கையின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ஷ, உறுதி அளித்தபடி இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வினை வழங்கவில்லை. சீனாவுடன் இயைந்து போகும் அவருடைய கொள்கையினால் இலங்கையில் கேந்திரமான பல பகுதிகள் தற்போது சீனாவின் வசமாகிவிட்டன. எல்.டி.டி.க்கு எதிரான போரில் இலங்கை அரசு செய்த மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக 2012லிலும், 2013லிலும், இந்தியா வாக்களித்ததை இலங்கை எளிதாக எடுத்துக் கொள்ளவில்லை. 2014 ஆம் ஆண்டில் இதே விஷயம் குறித்த வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளாமல் இருந்ததும் இலங்கைக்கு ஆறுதல் அளிப்பதாக இல்லை.

தற்போது இலங்கையிலும் இந்தியாவிலும் புதிய அரசுகள் பதவி ஏற்றுள்ளன. கடந்த ஜனவரியில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் குறுகிய காலத்திற்கள் உயர்நிலைப் பயணங்கள் நான்கு நிகழ்ந்துள்ளன. (இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சரின் இந்தியப் பயணம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் இலங்கை பயணம் இலங்கை அதிபரின் இந்தியப் பயணம்) இந்தியப் பிரதமரின் இலங்கை பயணம்) இவையே இருநாடுகளும் தமது உறவு நிலையை மேம்படுத்த பெரிதும் அக்கறை கொண்டுள்ளதைக் காட்டும். இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தல், இந்திய மீனவர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட விஷயங்களோடு, கடல் எல்லைப் பாதுகாப்பு, வாணிகப் பெருக்கம் போன்றவையும் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளன. மேலும் இருநாட்டு நல்லுறவையும் புதிய உச்சத்திற்கு எடுத்துச் செல்ல இருநாட்டுத் தலைமைகளும் கொண்டுள்ள உறுதியும் தெளிவாக இப்போது வெளிப்படுகிறது.

**நேபாளம்** : பல்வேறு காரணங்களால் நேபாளத்துடனான உறவில் பல ஆண்டு களாக ஓரளவு தேக்க நிலை ஏற்பட்டு விட்டது. இந்திய–நேபாள உறவுக்கு அடித்தளமாகத் திகழ்கிற 1950ஆம் ஆண்டில் கையெழுத்தான இந்திய–நேபாள அமைதி, நட்புறவு ஒப்பந்தத்தை முறித்துவிட வேண்டும் என்று நேபாளத்தில் தலை எடுத்துள்ள தேசியவாதச் சக்திகள் வலியுறுத்தி வருகின்றன. அந்த உடன்படிக்கையின்படி இந்தியக் குடிமக்களுக்குச் சமமாக நேபாள குடிமக்களும் பல வசதிகளையும் அனுகூலங்களையும்

பெற்று வருகின்றனர். இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் இடையேயான நீர் மின் திட்ட ஒத்துழைப்புக்குச் சில சுயநல சக்திகள் முட்டுக்கட்டை போட்டுவிட்டன. இதன் காரணமாக அபரிமிதமான நீர்வளம் இருந்தபோதும் நேபாளம் மின்சாரத்தை இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. நேபாளத்தில் வெள்ளப்பெருக்க ஏற்பட்டால் இந்தியாவின் எல்லையோர மாநிலங்கள் பாதிக்கப்படுவதும் தொடர்கிறது. அதே சமயத்தில் இந்தியா நிறைவேற்றித் தருவதாக வாக்களித்த திட்டங்கள் நிறைவேறுவதில் காலத் தாழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் புகார்கள் உள்ளன. மேலும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, சிக்கலான அரசியல் மாற்ற நிலையில் நேபாளம் இருந்து வருகிறது. முடியாட்சி முறை முடிவுக்கு வந்து, மாவோ தீவிரவாத இயக்கம் தலையெடுத்துப் பின் ஒடுங்கி, அவர்கள் மைய நீரோட்டத்திற்கு வந்து, ஜனநாயகம் தோன்றி எனப் பல கட்டங்களைக் கடந்து தற்போது புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியில் அந்நாடு ஈடுபட்டுள்ளது.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட நேபாளப் பயணம், 17 ஆண்டுகளுக்குப் பின்னர் ஓர் இந்தியப் பிரதமர் மேற்கொண்ட பயணமாகும். பதவி ஏற்று மூன்று மாதங்களுக்குள் அப்பயணம் நிகழ்ந்தது. அதற்கு முன்பாக, 23 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய–நேபாள கூட்டுக் குழு கூட்டம் நடைபெற்றிருந்தது. நேபாளத்தின் அரசியல் நிர்ணய சபையிலும், நாடாளுமன்றத்திலும் உரையாற்றும் வாய்ப்பைப் பெற்ற ஒரே வெளிநாட்டுத் தலைவர் நரேந்திர மோடி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேபாள மக்களின் கருத்தோட்டத்திற்கு ஏற்ப, 1950ஆம் ஆண்டின் அமைதி – நட்புறவு ஒப்பந்தத்தை மீள்பார்வையிட்டு, காலத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்வதென்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆழ வேரூன்றி யுள்ள நட்பை விரிவாக்கி, ஒருங்கிணைத்து தற்கால யதார்த்தத்தைப் பிரதிபலிக்குமாறு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் என இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளனர். நேபாளத்தின் உள்விவகாரங்களில் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்றும், மண்டல அளவிலும் அண்டை நாடு என்ற அளவிலும் ஒத்துழைப்பைப் பெருக்கவே விரும்புகிறது என்றும் பிரதமர் கூறியுள்ளார். பஞ்சேஸ்வர் வளர்ச்சித் திட்டம், மெல் கர்னாலி நீர் மின் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களில் ஒத்துழைப்பை நல்குவது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்திய–நேபாள நல்லுறவின் புதிய நிலைக்கான வேலைகள் தொடங்கிவிட்டன. இந்தியா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றிவிடும் என்பதில் தற்போது நேபாளிகள் மிகுந்த நம்பிக்கை கொண்டுவிட்டனர்.

நிறைவாக, தெற்காசிய மண்டலத்தில் கடந்த ஓராண்டாக இந்தியா மேற் கொண்ட ராஜ்ய நடவடிக்கைகள் பலவகைகளிலும் பயன்தந்துள்ளன. அவநம்பிக்கை குறைந்து, இந்தியாவின் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது. தற்போதைய உறவுகள்வலுப்பெற்றும்சிலவற்றில்மறுநிர்ணயம் செய்யப்பட்டும், நீண்ட கால நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பகுதியின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும், பிராந்திய ஒருங்கிணைப்பு, ஏற்படுவதுடன், நிலம், கடல், வான் வழியான தொடர்புகள் வலுப்பெற்றால் பொருளாதார வளர்ச்சி உறுதி என்ற எண்ணம் மேலோங்கி அமைதியான, சமாதான சகவாழ்வு அவசியம் என்ற கருத்து வலுவாக முன்மொழியப்பட்டுள்ளது. உலக நாடுகள் அனைத்தும் இணைந்து பணியாற்றுவதில் சிரமங்கள் இருந்தால், பரஸ்பரம் இருநாடுகளோ, அல்லது ஒரு மண்டலத்தில் உள்ள ஒரு சில நாடுகளோ மட்டும் கைகோர்த்துச் செயல்படலாம் என்ற செய்தியும் உலக அரங்கின் முன் வைக்கப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்துள்ள பலன்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒருங்கிணைத்து, வாக்குறுதிகளை நிறைவேற்றி, தீர்க்கப்படாது இருக்கும் விஷயங்களுக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுவதே அடுத்த கட்டப் பணியாகும். ●

# மக்கள் பாதுகாப்புத் திட்டங்கள் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்

மத்திய அரசு 2015ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி காப்பீடு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான பிரிவுகளில் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைத் தொடங்கி உள்ளது. அத்தியாவசியமான சமூகப் பாதுகாப்பை இயலக்கூடிய வகையில் அனைவரும் சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டு உள்ளன. இந்தத் திட்டத்தில் சேருபவரின் வங்கிக் கணக்கில் இருந்து "தானாகவேபிடித்தம்" செய்து கொள்ளும் வகையில் வசதியான முறையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

கடந்த மாதம் தொடங்கப்பட்ட மூன்று திட்டங்களில் இரண்டு திட்டங்கள் காப்பீடு தொடர்புடையவை ஆகும்.. பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) மற்றும் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) ஆகிய இரண்டு திட்டங்களும் எந்த ஒரு காரணத்தால் இறப்பு ஏற்பட்டிருந்தாலும் அதற்கான காப்பீட்டுத் தொகை, விபத்தால் இறப்பு அல்லது ஊனம் ஏற்பட்டிருந்தால் அதற்கான காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். அடல் பென்ஷன் யோஜனா(APY) வயதான காலத்தில் வருமானத்துக்கான பாதுகாப்பை அளிக்கின்றது.

**பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா** (PMSBY)

பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா திட்டம் (PMSBY) விபத்தில் மரணம் ஏற்பட்டால் அல்லது உடல் செயல் இழப்பு ஏற்பட்டால் ரூபாய் இரண்டு லட்சத்தை இவற்றுக்கான காப்பீடாக வழங்குகின்றது. இது ஒரு வருடகால காப்பீடாகும். ஆண்டுதோறும் இந்தக் காப்பீடு புதுப்பிக்கப்பட வேண்டும். வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கின்ற 18 முதல் 70 வரை வயதுள்ள யார் வேண்டுமேன்றாலும் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம். ஆண்டுப் பிரிமியம் வெறும் 12 ரூபாய் மட்டுமே. இதே வகையிலான நிபந்தனைகளுடன் காப்பிடு வழங்க முன்வரும் போதுத்துறையில் உள்ள போது இன்சூரன்ஸ் நிறுவனங்கள் அல்லது இதர போது இன்சூரன்ஸ் நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒரே வங்கியில் பல கணக்குகள் வைத்திருந்தாலும் அல்லது பல வங்கிகளில் பல கணக்கு வைத்திருந்தாலும் ஒருவர் ஒரே ஒரு வங்கிச் சேமிப்பு கணக்கு மூலம் ஒரு காப்பீடு மட்டுமே எடுக்க முடியும். திட்டத்தில் சேரும்போது தரப்படும் ஒப்புதல் மூலம் பிரீமியம் தொகையானது வங்கிக் கணக்கில் இருந்து தாமாகவே பிடித்தம் செய்யப்படும். தகுதி உள்ள நபர் ஒருவர் தொடக்க ஆண்டில் சேர இயலாமல் போனால் அவர் அடுத்து வரும் ஆண்டுகளில் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். இத்திட்டத்தில் இருந்து இடையில் நீங்கி விட்டாலும்கூட, பிறகு தேவைப்படும் போது நிபந்தனைகளுக்கு உட்பட்டு எந்த நேரத்திலும் ஆண்டு பிரீமியம் செலுத்தி மீண்டும் சேர்ந்துக் கொள்ளலாம்.

## பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY)

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டத்தில் (PMJJBY) வங்கிக் கணக்கு வைத்துள்ள 18 முதல் 50 வரை வயதுள்ள நபர்களுக்கு ஆயுள் காப்பீடு வழங்கப்படுகின்றது. இந்தக் காப்பீடு ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆண்டுப் பிரீமியக் கட்டணம் ரூபாய் 330 ஆகும். ஏதாவது ஒரு காரணத்தால் இறப்பு ஏற்பட்டால் ரூபாய் 2 இலட்சம் காப்பீடாக வழங்கப்படும். திட்டத்தை அறிமுகப்படுத்தும் வங்கிகளுடன் இணைந்து அதே நிபந்தனைகளுடன் காப்பீடு தர தேவையான அனுமதிகளுடன் முன்வரக்கூடிய எல்.ஐ.சி அல்லது அது போன்ற இதர ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். தொடக்க ஆண்டில் சேர இயலாமல் போனால் அத்தகையவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக சுய சான்றிதழ் கொடுத்து திட்டத்தில் சேர்ந்துக் கொள்ளலாம். சேருபவர் முன்பே பிற ஆயுள் காப்பீட்டை எடுத்திருந்தாலும் அவர்களுக்கு இந்த பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்ட (PMJJBY) காப்பீடு மற்றொரு கூடுதலான காப்பீடாக அமையும்.

## அடல் பென்ஷன் யோஜனா (APY)

இந்த ஓய்வூதியத் திட்டம் ஒருங்கிணைக்கப்படாத பிரிவில் உள்ள தொழிலாளர்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது. இந்தத் திட்டத்தில் சேருபவர்களுக்கு அவர்களின் 60 வயது தொடங்கும்போது ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் ரூ.1000, ரூ.2000, ரூ.3000, ரூ4000 அல்லது ரூ.5000 நிலையான ஓய்வூதியமாக வழங்கப்படும். இந்த முதிய வயதில் கிடைக்கும் ஓய்வூதியத் தொகையின் அளவு என்பது அவர்கள் தேர்ந்தெடுத்த பிரீமியத்தின் அடிப்படையில் கிடைப்பதாகும். இந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் அரசு குறைந்த முதலீட்டில் அதிகபட்ச பலன்களைத் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பலன் அடைய விரும்புபவர்கள் 18 முதல் 40 வயதுடையவர்களாக இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் சந்தாதாரர் 20 ஆண்டுகள் அல்லது அதற்கும் மெல் பிரீமியம் செலுத்த வேண்டும் என கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. தானாகவே பிடித்தம் செய்து கொள்ளும் வசதியுடன் மாதாமாதம் சந்தா செலுத்தப்பட வேண்டும். அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கணக்கு தொடங்க ஆதார் எண் கட்டாயத் தேவை இல்லை என்றாலும்கூட, உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் என்பதற்கான முதன்மை ஆவணமாக ஆதார் எண்ணே உள்ளது. ஆதார் எண்ணைக் கொடுப்பதன் மூலம் பயனாளிகளை அடையாளம் கண்டறிதல், துணைவர் மற்றும் வாரிசுகளை (நாமினி) அடையளாம் கண்டறிதல் போன்றவை எளிதாகும். இதனால் எதிர்காலத்தில் ஓய்வூதியத்துக்கு உரிமைகோரும் பிரச்சனைகளை தவிர்க்க முடியும். வாரிசுதாரர் விவரங்களைத் தர வேண்டியது இதில் கட்டாயமாகும். ஒரு சந்தாதாரர் ஒரே ஒரு அடல் ஓய்வூதியத் திட்ட கணக்கு மட்டுமே தொடங்க முடியும். அதுவே அவருக்குத் தனிப்பட்ட விசேஷ கணக்காக அமையும். பரிமாற்றம் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள கணக்கு தொடர்பான அறிக்கை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சந்தாதாரருக்கு வழங்கப்படும். ●

# இந்திய அமெரிக்க உறவுகள்

K.C. சிங்

*1947*ல் நாம் விடுதலை பெற்றபின் ஜனநாயக நாடுகளான இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான உறவுகள், உலகளவில் அடிக்கடி எதிரும் புதிருமாக செயல்பட்டாலும் அது இரு நாடுகளின் நிலைமைகளை ஒரு முகப்படுத்துவதற்கான தொடர் முயற்சியாகவே இருந்து வருகிறது. *1989*ல் சோவியத் யூனியன் பிளவுபட்டு அமெரிக்காவுக்கு எதிரான பனிப்போர் முடிவடைந்த பிறகுதான் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே உறவு மேம்பாடு துவங்கியது.

இதற்கு பிறகு திரு. P.V. நரசிம்ம ராவ் துவங்கி எல்லா பிரதமர்களும் இந்த முயற்சிக்கு பங்களித்திருக்கிறார்கள். இதற்கிடையே, சில தீவிர தடங்கல்களும் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, திரு. வாஜ்பாய் அரசு அமைந்தவுடன் மே *1998*ல் இந்தியா நடத்திய அணுகுண்டு சோதனைக்குப் பிறகு க்ளென் ரத்தின் அடிப்படையில் இந்தியாமீது அமெரிக்கா தடைகளை விதித்தது. ஆனாலும், திரு ஜஸ்வந்த் சிங் ஸ்ட்ரோப் டால்போட் இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் இந்த தடைகளைத் தகர்த்தி இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி அதன் அடிப்படையில் இந்தியாவின் பங்கும் அதற்கு உலகத்தில் உள்ள இடமும் புரியப்பட்டு இரு நாடுகளுக்கிடையே உண்மையான உறவு ஏற்பட்டது.

இந்தியா உண்மையாக வளர்ந்து வரும் ஒரு சக்தி என்று உணர்ந்து கொண்ட அமெரிக்கா அந்நாட்டை உலக பொருளாதார பாதுகாப்பு சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ள வேண்டும், அதற்காக மாற்றங்களை செய்ய வேண்டும் என்றும் ஆகவே இந்தியாவை இனிமேல் உலகளாவிய அணுசக்தி மற்றும் தொழிற்நுட்ப கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என்றும் உணர்ந்தது. பனிப்போர் காலங்களில் அணிசேரா நாடான இந்தியா அதிகபட்சமாக ஒரு நட்பு நாடாக கருதப்பட்டது, ஆனால் நம்ப முடியாத கூட்டாளி நாடாக *1971–72*ல் வங்கதேச விடுதலையின் போதும் அப்போது அமெரிக்கா, சீனாவுடன் உறவுக்கு கைகொடுத்த நேரத்திலும் இந்தியா சோவியத் யூனியனின் அறிவிக்கப்படாத கூட்டாளி நாடாக கருதப்பட்டது. மாறிவரும் உலக நிலையிலும் இந்திய பொருளாதாரம் மேம்பட்ட நிலையிலும் இந்தியாவை கூட்டாளி நாடாக ஏற்றுக்கொள்ள பலரும் முனைவது வெளிப்படையாகத் தெரிகிறது.

திரு. கிளிண்டன் அமெரிக்க அதிபராக இருந்தபோது இந்திய பொருளாதார சந்தையின் மதிப்பை கணக்கில் கொண்டு இந்தியாவோடு வலிமையான ஒத்துழைப்பை ஏற்படுத்த பொருளாதார உறவுகளை மேற்கொண்டது. அதனால், இந்தியாவிற்கு மீண்டும் மதிப்பு ஏற்பட்டது. இதன் அடிப்படையில் வளரும் பெரிய சந்தை பொருளாதாரங்களோடு அமெரிக்க வர்த்தக உறவு என்ற அமெரிக்க ஜனாதிபதியின் வர்த்தக மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் அமெரிக்க வர்த்தக அமைச்சர் ரான் ப்ரௌன் தலைமையில் *1995*ல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. *1999*க்கு பிறகு இந்திய அமெரிக்க உறவுகளின் தன்மையும் வேகமும் மாறியது. அதிபர் திரு. கிளிண்டன் *2000*ஆவது ஆண்டின் இந்திய வருகையாலும், செப்டம்பர் *11*ஆம் தேதி அமெரிக்கா மீது தாக்குதல் ஏற்பட்டதை அடுத்து இந்திய பிரதமர் திரு. அட்டல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் *2001*ஆம் ஆண்டின் அமெரிக்க வருகையாலும்

K.C. **சிங்,** வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலர் மற்றும் ஈரான், அரபு நாடுகளின் தூதுவர்

அமெரிக்காவுடனான உறவில் மாற்றம் ஏற்பட்டு அரசு அல்லாதவர்களால் உலகளவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க இந்தியாவின் தேவை புரியப்பட்டது. அதுமட்டுமல்லாமல், சீனாவின் வளர்ச்சிக்கு ஈடுகட்டவும், ஆசியாவில் ஒரு புதிய பாதுகாப்பு சூழ்நிலையை உருவாக்கவும் இந்தியா வலிமையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் உணர்ந்தார். இந்த இரு நிலைகளுமே இந்தியாவுடனான அமெரிக்க உறவுக் கொள்கைக்கு அடிப் படையாக அமைந்தது.

அதன் பிறகு படிப்படியாக இந்தியா வுக்கும், அமெரிக்காவுக்குமிடையே உறவு களை பலப்படுத்தும் வகையில் கூட்டு செயல் குழுக்களும், உயர்மட்ட பரிமாற் றங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பிண்ணனியில்தான் திரு.மோடி அரசு அமெரிக்காவோடு மேற்கொள்ளும் உறவு முயற்சிகளை நாம் காணவேண்டும். உதாரணமாக, இந்திய அமெரிக்க வளர்ச்சிக்கான அணு ஒப்பந்தம், அணு உற்பத்திக்கு மட்டும் என்று கொள்ளாமல், 1974ல் இந்தியா மேற்கொண்ட அமைதியான அணுகுண்டு சோதனைக்குப்பின் அமெரிக் காவும் அதன் தோழமை நாடுகளும் இந்தியா மீது விதித்திருந்த தொழில்நுட்ப பரிமாற்ற தடைகளை விலக்குவதற்காகவே என்று கருத வேண்டும். அணு தொழிற்நுட்ப விநியோகக் குழு, ஏவுகணை தொழிற்நுட்ப கட்டுப்பாடு அமைப்பு, வாஸநார் மற்றும் அமெரிக்க குழுக்கள் ஆகிய நான்கும் அதிநவீன மற்றும் ராணுவத்திற்கும் பிற உற்பத்திக்கும் தேவையான தொழிற் நுட்பங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. சீனா போன்ற வளர்ந்த நாடுகளைப் போல் இந்தியாவும் வளரவேண்டும் என்றால் பனிப்போர் காலங்களில் விதிக்கப்பட்ட தடைகளிலிருந்து அந்நாட்டிற்கு விடுதலை அளிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா உணர்ந்தது.

ஆனால், அமெரிக்காவின் பொருளா தாரம் மற்றும் வங்கித்துறையிலும் ஐரோப் பாவிலும் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக இந்திய அமெரிக்க உறவுகள் மெல்லவே நகர்ந்தது. இந்தியாவிலும் பொருளாதாரத் துறையில் தேவையான கொள்கை முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் உலகளாவிய நெருக்கடி சூழ்நிலையினாலும் இரு நாட்டு உறவு வளர்ச்சி தாமதமானது.

இந்திய அமெரிக்க உறவுகள் சிறப்பாக விளங்கக்கூடிய நிலைமை இருந்தாலும் பிரதமர் மோடி பதவியேற்றபோது அது மந்தமாகவே இருந்தது. இரு நாடுகளிலும் உண்மையான மொத்த நிலைமையை உணராமல் ஒவ்வொரு துறையும், அமைப்புகளும் தங்களுக்கு ஏற்றவாறு செயல்பட்டார்கள். இந்தியாவின் உணவு சார்ந்த தன்னிறைவுக்கான சேமிப்பு சம்மந்தப்பட்ட பிரச்சினைகளுக்காக தோஹா சுற்று வர்த்தக பேச்சு வார்த்தையில் இந்தியா தடையாக செயல்பட்டது. அணுமின் உற்பத்தி உடன்பாட்டில் இந்தத் துறைக்கு தேவையான இயந்திரங்களை விற்பவர்கள் அணு உற்பத்தியில் ஏற்படும் விபத்துக்களுக்கு பொறுப்பேற்று இழப்பு வழங்க வேண்டும் என்ற இந்தியாவின் புதிய சட்டத்தால் அமெரிக்கா தனக்கு பாதகம் ஏற்பட்டதாக கருதியது. இந்த நிலையில் இந்தியாவில் அறிவுசார் சொத்துரிமைகள் பெருமளவில் திருடப்படுவதாக அமெரிக்கா நடவடிக்கை எடுக்கத் துவங்கியது. அதே சமயம் இந்திய தகவல் தொழிற்நுட்ப பணியாளர்கள் அமெரிக்காவில் பணி செய்ய நுழைவு உரிமை சரியாக அளிக்கப்படவில்லை என்று இந்தியா வருத்தம் தெரிவித்தது. இந்த நிலைமையில் இரு நாட்டு தலைவர்களும் உச்சகட்ட பேச்சு நடத்தி சுமுக தீர்வு காணவேண்டிய ஒரு சூழ்நிலை நிலவியது.

2014 செப்டம்பரில் பிரதமர் மோடியின் அமெரிக்க பயணமும் அதைத் தொடர்ந்து ஜனவரி 2015ல் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் இந்தியாவிற்கான தன்னுடைய இரண்டாவது வருகையும், குடியரசு தின விழாவில் முதல்முறையாக முக்கிய விருந்தினராக கலந்து கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதியாக அவரின் வரவு அமைந்ததும்

இந்த உறவுக்கான ஒரு நல்ல சூழ்நிலையாக கருதப்படுகிறது. இந்தியாவின் உணவு சார்ந்த தன்னிறைவுக்கான சேமிப்பு பிரச்சினை உலக வர்த்தக நிறுவனத்தால் உடனடியாக கவனிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா ஏற்றுக் கொண்டதால் சுமூகமான நிலை ஏற்பட்டது. அணுமின் உற்பத்தியால் ஏற்படும் இழப்புகளுக்கான பிரச்சினை அதிபர் ஒபாமாவின் இந்திய வருகையின் போது அணுகப்பட்டு மறைமுகமாக தீர்வு ஏற்பட்டது. அதன்படி இப்படிப்பட்ட இழப்புக்களை ஈடுகட்டுவதில் அமெரிக்க அணுமின்சக்தி இயந்திரங்களை விற்பவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு தீர்வை இந்தியா முன் வைத்தது என்பதாகும். பிரதமர் மோடியின் அமெரிக்க பயணம் மற்றும் அதிபர் ஒபாமாவின் இந்திய பயணங்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைகளில் இரு நாடுகளுக்கிடையேயான புரிந்துணர்வு அதிகரித்திருப்பதாகவும் இரு நாடுகளுக் கிடையேயான ஒத்துழைப்பு சார்ந்த துறைகள் அதிகரித்திருப்பதாகவும் தெரிகிறது.

கடந்த ஒரு ஆண்டில் பிரதமர் மோடி அதிபர் ஒபாமாவுடன் இணைந்து செயலாற்றுவதில் காட்டிய உணர்வும் தனி கவனமும் இரு நாட்டின் உறவுகளில் மேம்பாட்டைக் கொண்டுவந்துள்ளது. செப்டம்பர் 2014ஆம் ஆண்டு வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் எல்லா பிரச்சினைகளும் ஆலோசிக்கப்பட்டு அவை கூட்டு அறிக்கையில் சேர்க்கப் பட்டிருந்தது. வர்த்தகத் துறையில் இரு நாடுகளுக்கிடையேயான $ 100 பில்லியன் என்று இருந்த இரு வழி பொருள்கள் மற்றும் சேவை வர்த்தகம் ஐந்து மடங்காக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் பரிந்துரைக்கப்பட்டன. அறிவுசார் சொத்துரிமை பிரச்சினையைத் தீர்க்க ஒரு உயர் மட்ட குழு அமைக்கப்பட்டது. குறுகிய கால பணிக்கான H-1 விசா சம்மந்தமாக ஒரு ஒப்புதல் தெளிவுபடுத்தப்படவில்லையானாலும் இந்தியாவின் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. திறன் மேம் பாட்டிலும் பொருள் உற்பத்தியில் புதியன கண்டுபிடிப்பதற்கும் பேச்சு வார்த்தை ஏற்படுத்தப்பட்டது.

எரி சக்தியும், பருவநிலை மாற்றமும் இணைந்து பரிசீலிக்கப்பட்டு பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ற சுத்தமான மற்றும் மீண்டும் உருவாகக்கூடிய எரி சக்தி மற்றும் மின் உற்பத்தி ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்தத் துறையில் ஒரு கூட்டு முயற்சியாக மேம்பட்ட சுத்தமான எரிசக்திக்கான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. க்யூட்டோ சுற்று மாசு வெளிப்பாட்டிற்கான தீர்வுகளுக்கான முயற்சியாக 2015 பாரிசில் நடந்த பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாட்டு அணுகுமுறையில் நல்ல தீர்வு கிடைப்பதற்கு இரு தரப்பினரும் தங்கள் ஒப்புதலை அளித்தனர். குறைந்த காரியம் சார்ந்த பொருளாதாரத்திற்கு இந்தியா மாறுவதற்கு ஏதுவாக அமெரிக்கா $ 1 பில்லியன் வர்த்தக கடனுக்கு ஒப்புதல் அளித்தது. பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்புத்துறைகளில் ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்பு அதிகமாக்கப்பட்டு இந்தத் துறையிலான தொழில் நுட்பங்கள் இந்தியாவிற்கு கிடைக்கும் வண்ணமும் மலபார் கடற்படை பயிற்சிகள் மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை ஒடுக்க இரண்டு நாடுகளும் தங்களுடைய உறுதிப்பாட்டை வெளிப்படுத்தின. குற்றங்கள் சார்ந்த தொடர் அமைப்புகளையும், தீவிரவாதிகளுக்கு தஞ்சம் அளிக்கும் உள் கட்டமைப்புகளையும் தகர்த்து எறியும் கூட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தானிலிருந்து செயல்படும் லஷ்கர் ஏ தொய்பா போன்ற இந்தியா சார்ந்த மற்றும் பிற தீவிரவாத அமைப்புகள் பட்டியலிடப்பட்டு அறிவிக்கப்பட்டன. நவம்பர் 26ஆம் தேதி மும்பை தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் சார்ந்த குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று உறுதி கூறப்பட்டது. இப்படி குறிப்பாக பாகிஸ்தான் சார்ந்த

குற்ற நிகழ்வுகளையும் அதை எதிர்கொள்ள இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டு முயற்சி செய்வார்கள் என்று கூறப்பட்டதால் இது பாகிஸ்தானுக்கு எதிரான தக்க எச்சரிக்கையாக அமைந்தது.

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில் தொழில் உற்பத்தியில் இந்தியா முன்னேறு வதற்கான வழிவகைகளை "உயர் தொழில் நுட்பம்", விண்வெளி மற்றும் நல்வாழ்வு சார்ந்த கூட்டு முயற்சி என்ற பகுதியில் வெளியிடப்பட்டது. எரிபொருள் விலைகள் மிகவும் குறைந்துள்ள நிலையில் அமெரிக்காவில் பொருள் உற்பத்தி மிகுந்து வேலை வாய்ப்பு அதிகரித்திருந்தாலும் "இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்" என்ற மோடி அரசின் கொள்கையின்படி இந்தியாவில் கூட்டு தொழில் உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. க்யான் என்று அழைக்கப்படும் கல்வி சார்ந்த அமைப்புக்களுக்கான உலக முயற்சியின் அடிப்படையில் 100 அமெரிக்க கல்வியாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவிற்கு வந்து கல்வி அளிப்பார்கள். ஆசிய அளவில்கூட இந்திய பல்கலைக் கழகங்கள் முன்னிலையில் இல்லாத நிலையில் இந்த முயற்சி இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கு வலுவூட்டும். மக்கள் நலத்துறையில் பழைய புதிய தொற்று நோய்களை எதிர்க்க தேவையான தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான இரு நாட்டு ஒத்துழைப்பு நிலைமைகள் காணப்பட்டன. உயர் சிகிச்சையில் இருக்கும் பெருமளவான பற்றாக்குறையை இந்தியா போக்க வேண்டிய நிலையில் உள்ளது. உலகத்தரம் வாய்ந்த தனியார் மருத்துவமனைகள் உருவாகியுள்ளதால் இந்தியாவில் வசதி படைத்தவர்களுக்கும் வசதியில்லாதவர்களுக்கும் இடையே ஒரு பிளவு காணப்படுகிறது.

திரு. மோடியின் கிழக்கு நோக்கிய பார்வை மற்றும் திரு. ஒபாமாவின் ஆசியாவில் சமநிலை என்ற இரண்டு கருத்துக்களும் இணைந்து ஒரு முக்கிய யுக்தியாக செயல்படுகின்றன. சீனாவின் நீண்ட மற்றும் ஒரு பகுதியை சார்ந்த சுற்று தொடர்பு இணைப்பு ஆகிய முயற்சிகளுக்கு இணையாக மத்திய தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளில் தொடர்புகளை ஏற்படுத்த இந்திய அமெரிக்க கண்ணோட்டம் முயற்சி செய்கிறது. சீனாவை கருத்தில் கொண்டும் குறிப்பாக தென் சீனக் கடலில் சுதந்திரமாக கப்பல் போக்குவரத்து நிகழவும் ஆசியா பசிபிக் பகுதி அமைதி மற்றும் பாதுகாப்பு அமைப்பு பரிந்துரைக்கப்பட்டது.

ஜனவரி 2015ல் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வருகைக்குப் பிறகு டெல்லியில் மூன்று அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 2014ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் அது விரிவாக்கப்பட்டதோடு இரு நாடு களின் இணைந்த மதிப்பீட்டின்படி சில நிலைமைகளைத் துல்லியமாக வெளிப் படுத்துகிறது. நட்பின் வெளிப்பாடு என்று ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. இதில் இரு நாடுகளும் இணைந்து உலகளாவிய பாதுகாப்பு பகுதிசார் மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் பல ஆண்டுகளுக்கான வளர்ச்சியும் ஸ்திரத்தன்மையும் என்பது பற்றி குறிப்பிடப்பட்டது. இவைகள் ஒரு பெரிய அளவிலான எண்ணங்கள், மிக அதிக அளவிலான பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கும். ஆகவே, இது போன்ற ஏற்பாடுகளை மேற்கொள்ள முன்பெல்லாம் இந்தியா அஞ்சியது. இந்த கூட்டறிக்கையில் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பருவநிலை மாற்றம் தழைத்து வரும் வளர்ச்சி ஆகிய துறைகளில் இரு நாடுகளுடைய கடமைகள் மற்றும் சட்டப்பூர்வமான வெளிப்படையான சந்தை நிலவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கிடையேயான பேச்சு வார்த்தைகளில் வணிகத்துறை சேர்க்கப்பட்டு இரு நாட்டு தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்களுக்கிடையேயான நேரடி உடனடி தொலைதொடர்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது அறிக்கையில் ஆசியா பசிபிக் பகுதிக்கான இரு நாடுகளின் தொலைநோக்கு அணுகுமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தியாவும் அமெரிக்காவும் ஜனநாயக முறையில்

இணைந்து ஆசிய பசிபிக் பகுதியில் சட்டம் சார்ந்த ஒழுங்குமுறையை ஏற்படுத்துவது. ஆனால் இதில் குறிப்பிடப்படாத விஷயம் என்பது இந்தப் பகுதியில் பெருமளவு வியாபித்து இருக்கும் மற்றும் அச்சுறுத்தும் சீனாவின் அணுகுமுறை. சிங்கப்பூரில் நடைபெற்ற 'லீங்கிரிலா பேச்சுவார்த்தைக்கு பாதுகாப்பு அமைச்சரை அனுப்பாமல் இந்தியா நழுவியபோதும் இந்தியாவோடு அமெரிக்கா இணைந்து செயலாற்றுவது இந்த அறிக்கையில் வெளிப்படுகிறது. 60 ஆண்டு காலமாக அணிசேரா நிலையிலிருந்து பல அணிகளுடன் இணைந்து செயலாற்றும் இந்தியாவின் தற்போதைய அணுகுமுறையை இது வெளிப்படுத்துகிறது.

பாதுகாப்புத் துறையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு.ஆங்டன் கார்டர் இந்தியாவிற்கு ஜூன் மாதம் இரண்டு, மூன்று தேதிகளில் வந்திருந்தார். அதில் ஏற்பட்ட பத்து வருட பாதுகாப்பு ஒப்பந்த அடிப்படையில் “இந்தியாவில் செய்வோம்” என்ற இந்தியாவின் முயற்சிக்கு அமெரிக்க தொழிற்நுட்பத்தை பயன்படுத்துவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. விமானம் தாங்கி கப்பல் வடிவமைப்பது மற்றும் ஜெட் இன்ஜின்களை தயாரிப்பது பற்றி பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. விமானம் தாங்கி கப்பல்களிலிருந்து ஏவப்படுவது போல் செயல்படும் விமானம் பறத்தல் முறை சார்ந்த தொழில் நுட்பம் அமெரிக்காவிடம் மட்டுமே உள்ளது. இந்த தொழில் நுட்பத்தினால் அதிக எடை கொண்ட விமானங்களையும், கண்காணிப்பு விமானங்களையும் இந்தியா செலுத்த முடியும்.

தென் சீன கடல்பகுதிகளில் பல நாடுகள் சொந்தம் கொண்டாடும் நிலையில் அங்கு பதட்டத்தை குறைக்க அமெரிக்காவுடன் நெருங்கி இணைந்து இந்தியா செயல்பட வேண்டிய நிலையில் பல பணிகள் செய்யப்பட வேண்டி உள்ளது. பிரிக்கஸ் கூட்டமைப்பு மூலம் இந்தியா, ரங்யா மற்றும் சீனாவிற்கு கதவை திறந்தே வைத்துள்ளது. மேலும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்புடன் இந்தியா செயல்படவும் வாய்ப்புள்ளது. இந்த ஒரே மாதிரியான, சில சமயம் ஒன்றோடொன்று போட்டியுள்ள அமைப்புகளோடு செயல் படுவது இந்தியாவிற்கு ஒரு பெரிய சவாலாகும். அணிசேரா நாடுகள் சார்பில் மற்ற பெரிய சக்திகளிடமிருந்து விலகி செயல்பட்ட இந்திய வெளியுறவு அதிகாரிகள் இந்திய அமெரிக்க உறவில் உருவாகி வரும் புதிய சூழ்நிலையில் நெருங்கி செயல்பட வேண்டிய மாற்று சூழ்நிலை உருவாகியுள்ளது.

இப்படி மற்ற நாடுகளுக்கு இணையாக இணைந்து செயல்பட்டதற்கு உதாரணமாக 1873–1890ஆம் ஆண்டுகளில் முதலாம் உலகப் போருக்கு முன்பாக ரஷ்யா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகளோடு ஜெர்மனி நாட்டின் அதிபர் சான்சிலர் ஓட்டோ வான் பிஸ்மார்க் அவர் செயல்பட்ட விதத்தை குறிப்பிடலாம். அவருடைய அறிவுரைகள் இந்தியாவிற்கு பெரும் பயனளிக்கும். அதாவது ஓரிரு நாடுகளுடன் அல்லாமல் மூன்று நான்கு நாடுகளுக்கு மேல் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வது. இதுவே இனி வரும் ஆண்டுகளில் இழந்த வாய்ப்புக்களை மீட்க இந்தியா அமெரிக்காவிற்கான மிக முக்கிய சவாலாகும். ஒவ்வொரு நாடும் தன்னுடைய நாட்டிற்கு பயனளிக்கும் உத்திகளை கையாண்டாலும் அமெரிக்கா தன்னுடைய சந்தையை சீனாவிற்கு திறந்து விட்டதாலும், முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றத்தாலும்தான் சீனா இந்த அளவுக்கு உயர்ந்துள்ளது. இது நடைபெற்ற அதே கால கட்டத்தில் இந்தியாவுக்கு பல ஆட்சியாளர்கள் தொழில் நுட்பத்தை மறுத்து வந்தார்கள். அடுத்தடுத்து ஆட்சி அமைத்த இந்திய அரசுகள் இந்தியாவிற்கு மற்ற நாடுகளைப் போல இணையான வாய்ப்புகளைப் பெற்று உயர முயற்சி செய்தன. ஆகவே, இந்தியாவின் வளர்ச்சியை இனிமேல் இந்தியாவால் மட்டுமே தடுக்க முடியும். ●

# *சிவில் சர்வீசஸ் தேர்வுகள் 2015*

# பூர்வாங்க தேர்வில் செய்யப்பட்டிருக்கும் மாற்றங்களின் சாதகங்களும் பாதகங்களும்

– வை. பழனிச்சாமி ஐ.ஐ.எஸ்.

2011ஆம் ஆண்டு கொண்டு வரப் பட்ட புதிய பூர்வாங்க தேர்வு முறை பெரும்பாலானோரால் வரவேற்கப் பட்டிருந்தாலும் சில பகுதி மக்கள் வேண்டாம் என்றே கருத்து தெரிவித்தது, அனைவருக்கும் நினைவு இருக்கலாம்.

இத்தேர்வு முறை முதல் 3 ஆண்டுகளில் எந்த சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் 2014ஆம் ஆண்டு மிகுந்த சர்ச்சையையும் போட்டித் தேர்வாளர்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியையும் உருவாக்கியது.

சிவில் சர்வீசஸ் பூர்வாங்க தேர்வின் 2ஆம் தாளாகிய CSAT தேர்வு தாள் சிலருக்கு சாதகமாகவும், பலருக்கு பாதகமாகவும் அமைந்தது 2013ஆம் ஆண்டின் சிவில் சர்வீசஸ் தேர்வின் இறுதித் தரவரிசைப் பட்டியல் வந்த பிறகு நிதர்சனம் ஆனது.

மேலும் மத்திய பணியாளர் தேர்வாணையம் சமீபத்தில் வெளியிட்ட ஆண்டறிக்கைகள் CSAT தேர்வுமுறை சிலருக்கு சாதகமாக அமைவதை தேர்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனிடையே 2014ஆம் ஆண்டில் மாணவர்களின் எதிர்ப்பு அதிகமானதால் மத்திய அரசு இத்தேர்வு முறை பற்றி ஆராய சிறப்புக் குழு ஒன்றை அமைத்தது.

CSAT எனப்படும் 2ஆம் தாளில் ஆங்கிலமும் கணிதமும் அதிகமாக இடம்பெற்றது சிலருக்கு பாதகமாகவும் சிலருக்கு சாதகமாகவும் இருந்தது.

இதனால் மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழு CSAT தேர்வுத்தாளில் கேட்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரைக் கேள்விகளை நீக்கியது.

இதனால் மொத்தம் உள்ள 80 கேள்விகளில் 7 கேள்விகள் தரவரிசைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் இந்த ஆண்டு மத்திய பணியாளர் நல அமைச்சகம் CSAT தாளில் 33 சதவிகிதம் ஒரு மாணவர் எடுத்தால் மட்டுமே போதும் என்ற அறிவிப்பை செய்தது. மேலும் பூர்வாங்க தேர்வின் தேர்ச்சிக்குரிய மதிப்பெண் பட்டியலில் இந்த மதிப்பெண்கள் கொடுக்கப்பட மாட்டாது என்றும் அறிவித்தது.

மேலும், கடந்த ஆண்டு அளித்த வாக் குறுதியைப் போல் ஆங்கில வினாக் களும், மதிப்பெண் பட்டியலில் சேர்க்கப் படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC) கொண்டு வந்த அறிக்கையில் இதனை உறுதி செய்தது.

இம்மாற்றம் யாருக்கு பாதகம்,

சிவில் சர்வீசஸ் தேர்வு முறையை பொறுத்த வரையில் நடத்தப்படும் 3 கட்டத் தேர்வில், முதலாவது கட்டமாகிய பூர்வாங்க தேர்வு (PRELIMINARY EXAMINATION) மிகவும் முக்கியமானதாகும்.

கடந்த 4 ஆண்டுகளில் நகர்ப்புறத்து மாணவர்களும், இந்திய தொழில்நுட்பக் கழகம் IIT- யில் படித்த மாணவர்களும்,

**வை. பழனிச்சாமி, ஐ.ஐ.எஸ்.,** இயக்குனர் (செய்தி), அகில இந்திய வானொலி நிலையம், சென்னை.

இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (IIM)-யில் படித்த மாணவர்களும், பொறியியல் படித்த மாணவர்களும் மட்டுமே இத்தேர்வில் சிறப்பான வெற்றிகளைக் குவித்தனர்.

காரணம், இவர்கள் சாதாரணமாகவே ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் பலமான அஸ்திவாரம் கொண்ட காரணத்தால் பூர்வாங்க தேர்வில் இவர்களுக்கு தேர்ச்சி பெறுவது மிகவும் எளிமையாகவே இருக்கும். எனவே, எளிதாக 2ஆம் தாளில் மட்டும் அதிக மதிப்பெண்களை வாங்கி, மிக கடினமான முதல் தாளில் குறைந்த மதிப்பெண்களை பெற்று, மொத்தத்தில் முதன்மை பெற்று விளங்கிய இவர்களுக்கு இந்த மாற்றம் பெருத்த அடியாகும்.

CSAT தேர்வு முறை வந்ததும் நாடு முழுவதும் புற்றீசல் போல் ஏராளமான பயிற்சி மையங்கள் முளைத்துவிட்டன.

இந்நிறுவனங்களுக்கும் இத்தேர்வு மாற்றம் பாதகமாக அமையும்.

CSAT தேர்வுக்கு குறுகிய காலத்தில் தயார் செய்து அதிக மதிப்பெண்களை பெற்று, மிக கடினமான முதல் தாளை கண்டுக்கொள்ளாமல் இருந்த சிலருக்கும், இது பாதகமாக அமையும்.

**இந்த மாற்றம் யாருக்கு ஆதாயம்?**

கிராமம் மற்றும் சிறு நகரங்களிலிருந்து வரும் மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக மேற்குறிப்பிட்ட ஐஐடி, இதர பொறியியல் மற்றும் ஐஐஎம் போட்டியாளர்களுடன் போட்டியிட முடியாமல் தொடர்ந்து தோல்வியைத் தழுவி வந்தனர் என்றால் அது மிகையல்ல.

மேலும், கிராமப்புற மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் பாடத் திட்டங்களைப் படித்த மாணவர்களாக இருந்ததால் ஐஐடி, இதர பொறியியல் மற்றும் ஐஐஎம் மாணவர்களோடு இவர்களால் போட்டியிட இயலாமல் போனது உண்மையாகும்.

மொத்தத்தில் இந்த தேர்வு மாற்றம் இந்த மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசதமாகும்.

பொது அறிவுத் தாள்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாணவர்களை ஊக்குவித்த பயிற்சி மையங்கள், இத்தேர்வு மாற்றம் மூலம் மீண்டும் புத்துயிர் பெறக் கூடும்.

ஆங்கிலம் மற்றும் கணிதத்தைப் புரிந்து கொள்வதில், சிரமப்பட்ட கிராமத்து, இந்திய மொழி வழியில் கல்வி பெற்ற முக்கியமாக தமிழ், ஹிந்தி வழியில் பயின்ற மாணவர்களுக்கு இது ஒரு இனிப்பான செய்தியாகும்.

**உண்மை நிலவரம் பற்றி ஒரு அலசல்**

கடந்த சில ஆண்டுகளாக இறுதிப் பட்டியலில் தேர்ச்சி பெற்று வரும் மாண வர்களைப் பார்த்தால், 90 சதவிகிதத்திற்கு மேலாக பொறியியல் பட்டம் வென்றவர் களாகவே உள்ளனர்.

மேலும், சாதாரணமாக 2011ஆம் ஆண்டிற்கு முன்னால், தேர்ச்சி பெறும் கலை அறிவியல் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை சொற்பமாகிப் போனது.

அண்ணா பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தனது முதல் முயற்சியிலேயே ஐ.ஏ.எஸ் வாங்கியுள்ளார். அவர் 2013 ஆம் ஆண்டில் பூர்வாங்க தேர்வில் முதல் தாளில் பெற்ற மதிப்பெண்கள் 200க்கு 126. அதேநேரம் 2வது தாளாகிய -CSATதேர்வில் பெற்ற மதிப்பெண்கள் 200க்கு 183. அந்த ஆண்டில் மொத்த மதிப்பெண் 400க்கு கட் ஆஃப் மதிப்பெண் 222 ஆகும். இவரை பொறுத்தவரை இத்தேர்வு மிகவும் எளிதாகிப் போனது. அதேநேரம் வேறொரு மாணவர் முதலாவது தாளில் 136 மதிப்பெண்கள் பெற்றும், 2வது தாளில் வெறும் 80 மதிப்பெண்கள் பெற்றதால் அவரால் பூர்வாங்க தேர்வை தாண்ட முடியவில்லை.

மேலும், பூர்வாங்க தேர்வில் 2012 வரை குறைந்தபட்ச மதிப்பெண்

கட்டாயம் ஒரு தாளில் பெற வேண்டும் என்ற நிபந்தனை இல்லை.

2013 முதல் ஒவ்வொரு தாளிலும் கட்டாயம் இத்தனை மதிப்பெண் பெற வேண்டும் என்ற நிபந்தனையை, மத்திய பணியாளர் தேர்வாணையம் கொண்டு வந்தது.

இந்த CSAT தேர்வு முறை சிவில் சர்வீசஸ் தவிர மற்ற போட்டித் தேர்வுகளை எழுதுபவர்களுக்கு பெரிய சாதகமாக கடந்த 4 ஆண்டுகளாக அமைந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. காரணம், 2010ஆம் ஆண்டு வரை சிவில் சர்வீசஸ் தேர்வு முறையும் மற்ற போட்டித் தேர்வு முறைகளும் இரு வேறு துருவங்களாக அமைந்திருந்தன. சிவில் சர்வீஸில்தான் சேர வேண்டும் என்ற மாணவன் இறுதியாக வெற்றி பெறாமல் வெளியே செல்லும்போது வெறும் கையோடுதான் செல்ல வேண்டியிருந்தது.

ஏனெனில், சிவில் சர்வீசஸ் தேர்வு பொது அறிவு சம்பந்தப்பட்ட கேள்விகளை மட்டுமே உள்ளடக்கியதாக இருந்தது. ஆனால், வங்கி, காப்பீடு, ரயில்வே பணியாளர் ஆணையம் போன்ற அமைப்புகள் நடத்திய தேர்வு முறையில் ஆங்கிலமும், கணிதமும் பெரும் பகுதியை கொண்டதாக அமைந்தது.

இந்நிலையில் சிவில் சர்வீசஸ் தேர்வுக்கு தயாராகும் மாணவன் மேற்கண்ட தேர்வுகளுக்கும் சேர்த்து தயாராவதில் பிரச்சனை இருந்தது என்றால் சந்தேகம் இல்லை.

இந்த CSAT தேர்வு முறை போட்டித் தேர்வு எழுதுபவர்களை அனைத்து வகையான போட்டித் தேர்வுகளுக்கும் தங்களை தயார் செய்து கொள்ள வழிவகை செய்தது என்றால் மிகையல்ல. இதனால் கடந்த 4 ஆண்டுகளில் சிவில் சர்வீசஸ் தேர்வு எழுதும் காலங்களிலேயே வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ரயில்வே போன்றவற்றில் எளிதான முறையில் இவர்களால் வெற்றி பெற முடிந்தது.

எனவே, இந்த மாற்றத்தை அனைத்துத் தரப்பு போட்டித் தேர்வாளர்களும், ஒருமனதாக ஏற்றுக் கொண்டால் எல்லோருக்கும் நன்மை பயக்கும் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை.

## சிவில் சர்வீசஸ் தேர்வு முறை

உயர்பதவிகளுக்கான சிவில் சர்வீசஸ் தேர்வுகளை மத்திய பணியாளர் தேர்வாணையம் ஆண்டு தோறும் நடத்தி வருகிறது. இந்த தேர்வுகள் மூன்று கட்டங்களாக நடைபெறும்.

1. சிவில் சர்வீஸ் பூர்வாங்க தேர்வுகள் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதம் நடத்தப்படுகிறது.

2. சிவில் சர்வீஸ் பிரதான தேர்வுகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடத்தப்படும். பூர்வாங்க தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே பிரதான தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

3. பிரதான தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் புதுதில்லியில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பங்கேற்க முடியும்.

மேற்கண்ட தேர்வுகளை நடத்தும் மத்திய பணியாளர் தேர்வாணையம் என்கிற யுபிஎஸ்சி (UPSC), முதற்கட்டத் தேர்வாகிய பூர்வாங்க தேர்வுகளில் மேற்சொன்ன புதிய தேர்வு முறையை 2011ம் ஆண்டு முதல் கொண்டு வந்துள்ளது.

சிவில் சர்வீஸ் திறன் தேர்வு CSAT (Civil Services Aptitude Test) எனப்படுவதே அந்த புதிய தேர்வு முறை.

பாடப்புத்தகங்களை வெறுமனே மனப்பாடம் செய்து தேர்வு எழுதி வெற்றி பெறுவதைக் காட்டிலும், பொது அறிவிலும், ஒட்டுமொத்த திறனிலும் வல்லமை மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்பதை தேர்வாணையத்தின் நோக்கமாக எடுத்துக்கொள்ளலாம்.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகும் மெக்காலே பிரபு கொண்டு வந்த பாடத் திட்டத்தின் அடிப்படையில் இந்திய குடிமைப்பணி தேர்வுகள், அதாவது சிவில் சர்வீசஸ் தேர்வுகள் நடைபெற்று வந்தன. பின்பு, 1976ம் ஆண்டு அமைக்கப்பட்ட கோத்தாரி குழு பரிந்துரையின்கீழ் இத்தேர்வு மூன்று கட்டமாக நடத்தப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து, 1979ஆம் ஆண்டு வரை எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு என இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட சிவில் சர்வீசஸ் தேர்வு முறை மாற்றப்பட்டு புதிய மூன்றுகட்ட தேர்வுகள் அமலுக்கு வந்தன.

மேலும், நேரடியாக நடத்தப்பட்ட எழுத்துத்தேர்வு நிலையில் அதிகமான விண்ணப்பங்கள் வந்ததால் எழுத்துத்தேர்வு எழுதுவோர் எண்ணிக்கையை குறைக்கவே 1979 ஆம் ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வில் பூர்வாங்க தேர்வு முறை அறிமுகம் செய்யப் பட்டது என்றும், சில கருத்துக்கள் உண்டு.

புதிய பூர்வாங்கத் தேர்வுகளில் கேள்வித் தாள், சரியான விடையை தேர்வு செய்து எழுதும் முறையில் அமைக்கப்பட்டது.

கலை அறிவியல் தொடங்கி மருத்துவ அறிவியல் வரையிலான 23 விருப்பப் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தை விருப்பப்பாடமாக தெரிவு செய்து கொள்ளலாம் என்ற நடைமுறை 2010ம் ஆண்டு வரை இருந்தது.

1989ம் ஆண்டு அமைக்கப்பட்ட சதீஷ் சந்த்ரா குழு சிவில் சர்வீசஸ் தேர்வில் பெரிய மாற்றம் ஏதும் கொண்டுவரவில்லை. ஆனால், ஒரு கட்டுரை மட்டும் அதிகமாக சேர்த்தும் நேர்முகத் தேர்வுக்கு கூடுதலாக மதிப்பெண்கள் கொடுத்தும், தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இதனைத் தொடர்ந்து பூர்வாங்கத் தேர்வில் 1993 ஆம் ஆண்டில் முதன்மைத் தேர்வுகளில் கட்டுரைத்தாள் புதிதாக சேர்க்கப்பட்டது.

அறிவியல் மற்றும் சமூக பாடங் களைப் படித்த மாணவர்கள் சிவில் சர்வீசஸ் தேர்வில் அதிக மதிப்பெண்களை பெற முடியாததால் அவர்களை, ஐ ஐ டி போன்ற கல்வி நிறுவனங்களில் பயின்ற மற்றும் கணிதப் பாடத்தை பின்னணியாகக் கொண்டு படித்தவர்களுக்கு இணையாக மதிப்பெண்களைப் பெறச் செய்ய தேர்வாணையம் இந்த புதிய முறையை அறிமுகப்படுத்தியது எனலாம்.

2000–மாவது ஆண்டில் ஐ ஐ டி மற்றும் கணித பாடப் பின்னணி கொண்ட மாணவர்களை சற்றே பின்னுக்கு இழுத்துப்பிடிக்கும் விதமாக தேர்வு பாடத் திட்டங்களில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

மாணவர்கள் தாம் பயின்ற பாடங்கள் மூலம் பெறும் அறிவுக்கு தரப்படும் முக்கியத்துவத்தைக் காட்டிலும், அவர்களின் அறிவுத்திறனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என அரசு சார்பிலான கல்வி நிபுணர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்ததையடுத்து சிவில் சர்விஸ் பூர்வாங்கத் தேர்வு முறையில் மாற்றம் செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டு 2011ம் ஆண்டு முதல் இந்த CSAT தேர்வு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

புதிய பூர்வாங்க தேர்வு முறை அந்த தேர்வை எதிர்கொள்வதில் அனைத்துதரப்பு மாணவர்களிடம் சமமான ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் அமல்படுத்தப்பட்டது.

யு பி எஸ் சி தேர்வு எழுதும் லட்சக் கணக்கான விண்ணப்பத்தாரர்கள் பயன் பெறும் வகையில் விரிவான பாடத் திட்டத்தை விரைவில் அறிவித்தது. இந்த மாற்றம் 2014ம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது.

2011 ஆம் ஆண்டு அறிவித்த புதிய தேர்வு முறைப்படி சிவில் சர்வீசஸ் தேர்வுகளின் பூர்வாங்க தேர்வில், தேர்வு இரண்டு தாள்களைக் கொண்டதாக இருந்தது. இந்த ஆண்டு அறிவித்த அறிக்கையிலும் இரண்டு தாள்களே உள்ளன.

மாற்றம் செய்யப்பட்ட பூர்வாங்க தேர்வு அதில் பங்கேற்பவர்களின் ஆங்கில மொழித் திறனையும் பரிசோதித்துப்பார்க்கும் வகையில் இருந்தது. அந்த ஆங்கில மொழித்திறன் இந்த ஆண்டும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழித் திறன் கொண்டவர்கள் பூர்வாங்கத் தேர்வுகளைக் கடந்து முதன்மை தேர்வுக்குத் தங்களை எளிதில் தகுதி உடையவர்களாக ஆக்கிக் கொள்ள முடிந்தது என்பது உண்மை.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட பூர்வாங்க தேர்வு முறை மற்றும் கேள்வி பாடத்திட்ட விவரங்கள் பின்வருமாறு

a) (தாள் - 1 ) (200 மதிப்பெண்கள்) தேர்வு நேரம் 2 மணி

தேசிய மற்றும் சர்வதேச முக்கியத் துவம் வாய்ந்த முக்கிய நிகழ்வுகள்.

இந்திய சரித்திரம் மற்றும் இந்திய தேசிய இயக்கம்.

இந்திய மற்றும் உலக புவியியல் - இந்தியா மற்றும் உலக பௌதீக, சமூக, பொருளாதாரம்

இந்திய அரசியலமைப்பு மற்றும் ஆளுமை - அரசியல் சாசனம், அரசியல் முறைகள், பஞ்சாயத்து ராஜ், பொது மக்கள் குறித்த கொள்கை, உரிமை பிரச்சினைகள் முதலியன.

பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு நீடித்த வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, மக்கள் தொகையியல், சமூக துறைகளில் முனைப்பான நடவடிக்கைகள் போன்றவை

சுற்றுச்சூழல் மற்றும் உயிரினங்கள் குறித்த பொதுவான பிரச்சினைகள் உயிரினப் பெருக்கம், பருவநிலை மாற்றம்

பொது அறிவியல்

b) (தாள் II) (200 மதிப்பெண்கள்) தேர்வு நேரம் 2 மணி நேரம்.

கட்டுரைகள் - தகவல் தொடர்புதிறன் உள்ளிட்ட தகவல் பரிமாற்ற ஆற்றல், logical reasoning and analytical ability, முடிவுகள் எடுப்பதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும், பொதுவான மனவளத் திறன் போன்றவை.

10ஆம் வகுப்பு நிலையிலான அடிப்படை எண் குறியீடு (எண்கள் மற்றும் அதன் தொடர்புகள், எண் பெருக்க முறைமை போன்றவை )

Data interpretation அட்டவணைகள், வரைபடங்கள், பட்டியல்கள் உள்ளிட்டவை

10ஆம் வகுப்பு நிலையிலான ஆங்கில மொழித் திறன்.

இதில் ஆங்கில கட்டுரை படித்து பதில் எழுதும் ஏழு முதல் எட்டு கேள்விகள் மொத்த மதிப்பெண் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

எனினும், CSAT தேர்வுதாள் மதிப் பெண்கள் பூர்வாங்க தேர்வின் தரவரிசையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. அதே நேரம், இத்தாளில் ஒருவர் 33 சதவிகித மதிப்பெண்கள் மட்டும் எடுத்தால் போதுமானது. அதற்கும் குறைந்தால், பூர்வாங்க தேர்வின் முதல்தாளில் அதாவது, பொது அறிவுத் தாளில் 200க்கு 200 எடுத்தால்கூட, அவர் பூர்வாங்க தேர்வில் தேர்ச்சி பெறமுடியாது. அதே நேரம் தவறான கேள்விகளுக்கு மூன்றில் ஒரு பகுதி மதிப்பெண்கள் இரண்டு தாள்களிலும் குறைக்கப்படும். ஆனால் தெரியாத கேள்விகளை விட்டுவிட்டால் மதிப்பெண்கள் எதுவும் குறைக்கப்பட மாட்டாது என்பதை தேர்வாளர்கள் கவனத்தில் கொள்வது அவசியம் ஆகும்.

## தேர்வுக்கு தயாராகும் வழி முறைகள்

தேர்வுக்குப் படிப்பது என்பது திட்டமிட்ட வகையில் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் படிக்கும் நேரத்தை தங்களுக்கு ஏற்றவாறு வகுத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

முக்கிய நாளேடுகளையும் சஞ் சிகைகளையும் தவறாமல் படிப்பது, தேர்வு எழுதும் திறனை அளிப்பதோடு, தகவல்களையும், செய்திகளையும் தெளிவாக அறிந்து கொள்ள உதவிடும்.

தொலைக்காட்சி செய்திகளையும், முக்கியமாக வானொலி செய்திகளைக் கேட்பதும் அவசியமானதாகும்.

தேர்வுக்கான அனைத்து பாடத்திட்டங்களையும் படித்து முடித்த பிறகு பிரதான தேர்வுகள் தொடங்குவதற்கு ஒருமாதம் முன்னதாக முந்தைய ஆண்டுகளில் கேள்வித் தாள்களின் உதவியுடன் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

முதன் முதலாக இந்த CSAT தேர்வு முறை 2011ல் அறிவிக்கப்பட்டபோது மாதிரி வினாத்தாள்கள் தெரியாமல் போட்டியாளர்கள் திணறிப்போனார்கள். ஆனால்,இப்போது இந்நிலை மாறிவிட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் கேட்கப்பட்ட வினாத்தாள்களும், அதற்கான பதில்களும் இணையத்தில் இலவசமாகக் கிடைக்கிறது. அதற்கும் மேலாக, மத்திய பணியாளர் தேர்வாணையம் பூர்வாங்க தேர்வு மற்றும் பிரதானத் தேர்வுகளின் இறுதி கட் ஆஃப் மதிப்பெண்களையும் வெளியிட்டு, மாணவர்கள் தங்களை எப்படி தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கு வழிவகை செய்துள்ளது.

இதன்மூலம் எந்த மாதிரியான கேள்விகள் மீண்டும் மீண்டும் கேட்கப்படுள்ளன என்பதை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

முந்தைய ஆண்டுகளில் கேட்கப் பட்ட விருப்பப்பாட கேள்விகளுக்கும், பொது அறிவுப் பாட கேள்விகளுக்கும் பதில் எழுதிப் பார்க்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இதனால் விண்ணப்பதாரர்கள் தாங்கள் எதில் பலவீனமாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

## பிரதான தேர்வை சந்திக்கும் வழிமுறைகள்

பூர்வாங்கத் தேர்வுகள் முடிந்தவுடன், முடிவுகளுக்காகக் காத்திராமல், பிரதான தேர்வுகளுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கிவிட வேண்டும்.

பூர்வாங்கத் தேர்வுகளுக்கு முன்னதாகவே பிரதான தேர்வுகளுக்கான அனைத்து பாடங்களையும் படித்து முடித்துவிட வேண்டும் என்பது பொது வாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு அணுகுமுறையாகும்.

### பூர்வாங்க தேர்வின் கட் ஆஹப் மதிப்பெண்கள்

| பிரிவு | பொது | இ.பி | எஸ்சி | எஸ்டி | மாதி1 | மாதி2 | மாதி3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 209 | 190 | 185 | 181 | 160 | 164 | 111 | 400 |
| 2013 | 241 | 222 | 207 | 200 | 199 | 184 | 163 | 400 |

இ.பி – இதர பிற்படுத்தப்பட்டோர்

(மாதி1) மாற்றுதிறனாளி -1 - பார்வை குறைபாடு உள்ளவர்

(மாதி2) மாற்றுதிறனாளி-2 - காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதவர்

(மாதி3) மாற்றுதிறனாளி3 - உடல் ஊனமுற்றோர்.

தேர்வு முடிவுகள் வெளியான பிறகு வெற்றி பெற்றவர்கள் பிரதான தேர்வுகளுக்கான விருப்பப்பாடத்தையும் பொது அறிவுப்பாடத்தையும் மீண்டும் திரும்ப படிக்க வேண்டும். தேர்வுக்கு மீண்டும், மீண்டும் படித்து தங்களைத் தயார்படுத்திக்கொள்வது என்பது ஒரு தொடர் நிகழ்வாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் ஒரு நாளைக்கு 10 லிருந்து 12 மணி நேரம் படிக்கலாம். சிலர் 18லிருந்து 20 மணி நேரம் படிப்பதாக கூறுவார்கள். இது சாத்தியமானது அல்ல.

தம்மிடம் எவ்வளவு திறமை உள்ளது என்பதை உணர்ந்து அதற்கேற்ப ஒரு கால அட்டவணையை வகுத்து, அதன்படி படித்து தங்களை தேர்வுக்கு தயார்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

எண்ணிய இலக்கை எட்ட முடியாமல் போனால், மனம் சோர்ந்துவிடக்கூடாது, மற்ற எவர் ஒருவரைக் காட்டிலும், விண்ணப்பதாரரின் திறமை பற்றி அவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.

தேர்வுகள் சமயத்தின்போது சரி விகிதத்தில் உணவு உட்கொள்ளவேண்டும். தேர்வுகளுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும்போது நல்ல உடல் ஆரோக் கியத்தைப் பராமரிக்க வேண்டியது அவசியம்.

உடலும், உள்ளமும் ஓய்வு எடுக்கும் வகையில் போதுமான அளவுக்குத் தூங்க வேண்டும் என்பது ஒரு கட்டாய தேவையாகும்.

தூங்கி எழுந்தபிறகு உடலும், உள்ளமும் புத்துணர்ச்சியோடு இருக்கும் போது படித்தல் மிகவும் நல்லது. அப்படி செய்வதால் படித்தவற்றை எளிதில் கிரகித்து மனதில் இருத்திக்கொள்ள முடியும்.

படித்த பாடங்களை மீண்டும் திரும்பப் படிக்கும்போது முக்கியமான குறிப்புகளைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். முதலாவது முறை படிக்கும்போது தேவையில்லாதவற்றை நீக்கிவிட்டு படிக்க வேண்டியதைப் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது முறை படிக்கும்போது மீண்டும் அதைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் தேர்வுக்குச் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அனைத்தையும் முழுமையாக படித்து முடிப்பது எளிதாக இருக்கும்.

அகல உழுவதைவிட ஆழமாக உழு என்ற சொல் வழக்கு இதற்கு சாலப் பொருந்தும்.

படித்த பாடங்களைத் திரும்ப திரும்ப படிப்பது மிக மிக முக்கியமானது. அப்படி படிக்காவிட்டால், கஷ்டப்பட்டு மரம் ஏறி கையை விட்டவன் கதைபோல ஆகிவிடும்.

ஒரு கேள்விக்கு எத்தனை வார்த்தை களில் பதில் எழுத வேண்டும் என கேள்வித்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அவ்வாறே பதில் அமைந்திட வேண்டும். குறிப்பிட்ட வார்த்தைகளுக்கு மேல் அதிகமாக எழுதினால் மதிப்பெண்களைக் கூடுதலாகப் பெற்றுவிட முடியாது. எழுதும் நேரமும் விரயமாகிவிடும்.

ஒவ்வொரு கேள்விக்குமான பதிலை எழுதிவிட்டு வார்த்தைகளை எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. சரியான முயற்சியில் பயிற்சி மேற்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் ஒரு வரியில் எத்தனை வார்த்தைகள் இடம்பெறும், ஒரு பக்கத்திற்கு எத்தனை வரிகள் பிடிக்கும் என்பதை எளிதாகக் கணக்கிட்டு, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஏற்ப பதில் எழுத முடியும்.

மதிப்பீடு செய்பவர் எளிதில் படித்துப் பார்க்கும் வகையில் பதில்கள் தெளிவாக இருக்க வேண்டும். முக்கியமான பதில்களை அடிக்கோடிட்டுக் காட்டுவது நல்லது.

கட்டுரை என்றால் ஒவ்வொரு பத்தியாக எழுத வேண்டும். ஒவ்வொரு பத்தியும் ஒரு புதிய பதிலுடன் தொடங்கப்பட வேண்டும்.

ஒரு வரிக்கும், மற்றொரு வரிக்கும் இடையே போதுமான இடைவெளி இருக்க வேண்டும். எழுதும் எழுத்துக்கள் ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரே சீராக இருக்கவேண்டும். சிலர் தொடக்கத்தில் நன்றாக எழுதிவிட்டு பின்னர் நேரம் ஆகிவிட்டதே என்ற நெருக்குதலுக்கு உள்ளாகி அவசர கதியில் எழுதும்போது எழுத்துக்கள் கிறுக்கலாகி மோசமாகிவிடும். மோசமான கையெழுத்து, மதிப்பீட்டாளர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்திவிடும்.

'அடுத்தவர் எரிச்சல் ஆகாது' என்பது போல, மதிப்பீட்டாளர் எரிச்சல்பட்டால், விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் காணாது.

தேர்வு எழுதும் ஒவ்வொருவரும் தாங்கள் மதிப்பீட்டாளர்கள் நிலையிலிருந்து யோசித்து பார்த்து தேர்வு எழுதினால் நல்ல முடிவு கிடைக்கும்.

சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்கள் தயார்படுத்திக் கொள்வதற்கான சில யோசனைகள் :

விண்ணப்பதாரர்கள், தங்களது பள்ளிப்பாடப் புத்தகங்களை முழுவதுமாக படிக்க வேண்டும். இது பொது அறிவு என்ற அடித்தளத்தை வலுவாக அமைத்திட உதவும்.

நாள்தோறும் ஏதாவது ஒரு தேசிய நாளேட்டைத் தொடர்ந்து படிக்கவேண்டும், போட்டித்தேர்வுக்கு பிரத்யேகமாக வெளியிடப்படும் மாத இதழ்களையும் படிப்பது அவசியம்.

தொலைக்காட்சிகளில், செய்திகள், விவாதங்கள், உரையாடல்கள் ஆகியவற்றை பார்த்து வர வேண்டும்.

படித்த செய்திகள், தொலைக்காட்சிகளில் பார்த்த செய்திகள், விவாதங்கள், உரையாடல்கள் ஆகியன குறித்த கருத்துக்களை நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இது விண்ணப்பதாரர்களின் நம்பிக்கையை வலுப்பெறச் செய்யும்.

அகில இந்திய வானொலியின் காலை, மாலை செய்தி அறிக்கைகளை கேட்பது மிக மிக அவசியம். இந்த செய்தி அறிக்கைகள் தேசிய மற்றும் உலக அளவிலான அன்றாட நிகழ்வுகளை தெரிவிக்கக்கூடியது என்பதை மறுக்கக் கூடாது.

முக்கியமாக அகில இந்திய வானொலியின் இரவு 9 மணி செய்தியைத் தொடர்ந்து 9.16க்கு ஒலிபரப்பாகும் spot light என்ற நிகழ்ச்சியை கண்டிப்பாக கேட்க வேண்டும். சில வேளைகளில் வானொலி செய்திகளை நேரலையில் கேட்க முடியவில்லை என்றால், அகில இந்திய வானொலியின் இணையம் www.newsonair.comல் கேட்கலாம்.

NCERT புத்தகங்கள் சிறிய கலைக் களஞ்சியம் போன்றது என்பதால், அந்தப் புத்தகங்களை மிகக் கவனமாக படிக்க வேண்டியது அவசியம்.

மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் புத்தக வெளியீட்டுப்பிரிவு வெளியிடும் இந்தியா இயர்புக், யோஜனா, குருக்ஷேத்திராவும் படிக்க வேண்டும். இந்தப் புத்தகம் இந்தியா பற்றிய அனைத்து விவரங்களையும் முழுமையாக அறிந்து கொள்ள உதவிடும்.

## பொது அறிவு பாடம் தொடர்பாக சில யோசனைகள்

பொது அறிவு பாடக் கேள்வித் தாளில் நடப்பு நிகழ்வுகள் மற்றும் பள்ளிப் பாடத்திட்டங்கள் தொடர்பான கேள்விகள் இடம்பெறும். 12ஆம் வகுப்பு வரை படித்த பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்படும்.

பள்ளிப்படிப்பின்போது புத்திகூர்மை உடையவர்களாக இருந்த மாண வர்கள் பொது அறிவுப் பாடத்தை எதிர்கொள்வதில் வலுவாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பொது அறிவுப் பாடக் கேள்வித் தாளில் திட்டமிடுதல், பட்ஜெட் தயாரிப்பு, வளர்ச்சித் திட்டங்கள், சமீபத்திய அரசியல் சர்ச்சைகள், அரசியல் சாசன முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள், பஞ் சாயத்ராஜின் தேர்தல் சீர்திருத்தங்கள், நாட்டின் இயற்கை வளங்கள், கலாச்சாரம், மத்திய அரசால் அமைக்கப்படும் குழுக்கள், ஆணையகங்கள் ஆகியன குறித்து ஒவ்வொரு ஆண்டும் கேள்விகள் கேட்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான தேர்வுகளில் பங்கேற்கும் பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் பரந்த அறிவுத்திறன் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களின் எழுதும் திறமை குறைவாகவே இருக்கும். மதிப்பீட்டாளர் எதிர்பார்ப்பதற்கு ஏற்ப அவர்களின் பதில் அமைந்திருக்காது.

என்ன எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். எழுதும் திறமையை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்றால், பிரதான தேர்வுகளுக்கான பதில்களை எழுதிப் பார்க்க வேண்டும்.

பாடங்களை படித்துவிட்டு தேர்வுகளை நேரடியாக எழுத முடியும் என்ற எண்ணம் விண்ணப்பதாரரிடம் குடியிருக்கக்கூடாது. வைரம் தீட்டத் தீட்ட அதிக ஒளிதருவது போல ஒவ்வொரு போட்டியாளரும் தொடர் எழுத்துப் பயிற்சி மூலம் தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 23 வயது முடிவதற்கு முதல் முயற்சியிலேயே சிவில் சர்வீஸ் தேர்வுகளில் வெற்றி பெற்றுவிட்டால், அவர்கள் மத்திய அரசின் செயலர், ஒரு மாநிலத்தின் தலைமைச் செயலர், மத்திய அமைச்சரவையின் செயலர் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கு செல்ல முடியும்.

முக்கனிகள் என வரிசைப்படுத் தும்பொழுது மா, பலா, வாழை வரிந்து கட்டி வரும்.

மத்திய அரசின் சிவில் சர்வீஸ் பணிகளைக் குறிப்பிடும்போது ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் பதவிகள் மற்ற எல்லா பதவிகளைக் காட்டிலும் சிறப்பு அங்கீகாரத்தைக் கொண்டவை என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

முக்கனிகளைப் பொறுத்தவரை அவை எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியவை. ஆனால் ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் பதவிகள் அப்படியல்ல.

விக்கிரமாதித்தன் – வேதாளம் செவிவழிக் கதைகள் சமஸ்கிருதத்திலும் பிராந்திய மொழிகளிலும் பிரபலமானவை.

உஜ்ஜயினி மன்னன் விக்கிரமாதித்தன் ஒரு சாதுவின் வேண்டுகோளின்படி முருங்கை மரம் ஏறி அதில் தொங்கிக் கொண்டிருக்கும் வேதாளத்தை வீழ்த்தி பின்னர் முதுகில் சுமந்து செல்லும்போது அந்த வேதாளம் ஒவ்வொரு புதிர் கதை சொல்லும் கதை முடிவில் அது கேட்கும் கேள்விகளுக்கு விக்கிரமாதித்தன் சரியான பதில் சொல்லிய பிறகு வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிக்கொள்ளும்.

25வது கதையின் முடிவில்தான் விக்கிரமாதித்தன் தனது காரியத்தில் வெற்றி பெறுவான்.

விடாமுயற்சியும், விவேகமும் விக்கிர மாதித்தன் கதைகளின் மையக்கருத்து என்பதை மறுப்பதற்கில்லை.

சிவில் சர்வீஸ் தேர்வுகளிலும் விக்கிர மாதித்தன் அணுகுமுறைதான் வெற்றியைத் தேடித்தரும். ●

# இந்திய சீன உறவு: மாறிவரும் பந்தம்

*மணீஷ் சந்த் **

*இந்திய சீன உறவுகளின் வரலாற்றில் இது மாற்றங்களுக்கான தருணமாக இருக்கிறது. இந்த இரண்டு அண்டை நாடுகளும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று வெளிப்படுத்தும் புதிய ஆற்றல், செயல்துடிப்பு, புத்தாக்கம் ஆகிய வற்றால் இந்த மாற்றங்கள் அடையா ளப்படுத்தப்படுகின்றது. ஒன்பது மாத இடைவெளியில் இரண்டு பெரிய ஆசிய நாடுகளின் தலைவர்கள் ஒருவர் நாட்டுக்கு மற்றொருவர் விஜயம் செய்வது என்பது இதுவே முதல் முறையாகும். மலர்ந்து வரும் ஆசிய நூற்றாண்டை வடிவமைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை தாமாகவே முன்வந்து வழங்கும் செயலை இது சுட்டிக்காட்டுகின்றது. பிரதம மந்திரி நரேந்திர மோடி சீனாவின் மூன்று நகரங்களுக்கு அதாவது ஜியான், ஷாங்காய் மற்றும் பீஜிங் ஆகிய நகரங்களுக்கு மே மாதம் 14, 15, 16 ஆகிய நாட்களில் விஜயம் செய்தது என்பது பலவகைகளில் விசேஷமான செயலாகும். உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்ட மற்றும் மொத்தமாக $12 டிரில்லியன் ஜிடிபி கொண்ட இந்த இரண்டு ஆசிய தீவிர சக்திகளுக்கு இடையில் உள்ள பலவித வேறுபாடுகளுக்கு இணைவு காண முயல்வதால் இது விசேஷமான செயலாக உள்ளது.*

*செப்டம்பர் 2014ல் இந்தியாவிற்கு முதன்முதலாக விஜயம் செய்த சீன குடியரசுத் தலைவர் ஜி ஜின்பிங் உருவாக் கிய உந்துதல் பிரதம மந்திரியின் சீன விஜயத்தில் செயல்களாக வெளிப்படத் தொடங்கி உள்ளது. இந்த இரண்டு விஜயங்களையும் மற்றும் தில்லியில் முந்தைய அரசு ஆட்சிக் காலத்தில் எடுத்த தொடக்க நடவடிக்கைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் இந்தியசீன உறவின் அகரவரிசை ஏ ஃபார் ஆசியா, பி ஃபார் பிசினஸ், சி ஃபார் கல்ச்சர், டி ஃபார் டிப்ளமசி மற்றும் டெவலப்மெண்ட் என வெளிப்பட்டு நிஜமாகி வருவது புலப்படும்: அதாவது ஆசியா, வர்த்தகம், கலாச்சாரம், ரா ஜாங்க உறவு, வளர்ச்சி என்ற புதிய சொற்களஞ்சியம் மற்றும் பொருண்மையியல் ஆகியன இரண்டு நாடுகளுக்கு இடையிலான நட்புறவின் புதிய பாதைகளை புத்தம் புதிதாக எழுதிப்பார்க்க வழி வகுத்துள்ளன. ஏனெனில் இதற்கு முன் ஆசியக் கண்டத்தில் எதிரிகள், போட்டியாளர்கள் என்றே இவை சித்தரிக்கப்பட்டு வந்துள்ளன. பல்வேறு தளங்களில் ஒத்துழைப்பான பங்குதாரர்களாக, குறிக்கோள் உள்ளவர்களாக இரு நாடுகளும் தம்மை சிறிது சிறிதாக வெளிப்படுத்தி வருகின்றன.*

## *பிறந்த இட ராஜதந்திரம்*

*ராஜதந்திரம், கலாச்சாரம், வர்த்தகம், புவிசார் அரசியல் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்த பிரதம மந்திரி மோடியின் விஜயம் குறியீட்டு ரீதியிலான மற்றும் வெளிப்படையான விளைவுகளை அதிக அளவு ஏற்படுத்தி உள்ளது. இது முக்கியமான மரிவரும் உறவுகளில் புதிய போக்குகளையும் கருத்தாக்கங்களையும் ஜாடையாக வெளிப்படுத்துகிறது. இதுவரை யாருக்கும் எந்த நாட்டு தலைவர்களுக்கும் செய்யாத வகையில் முதன் முதலாக சீன அதிபர் பிரதம மந்திரி மோடியை ஜியான் நகரில் உள்ள பெருமை மிகுந்த அரசு விருந்தினர்*

*மணீஷ் சந்த் "இந்தியா ரைட்ஸ் நெட்ஒர்க்" என்ற அமைப்பின் நிறுவுனர் தலைமைச் செயல் அலுவலராகவும், தலைமை ஆசிரியராகவும் உள்ளார். இது ஒரு ஆன்லைன் பத்திரிகையாகும் (www.indiawrites.org <http://www.indiawrites.org>)

இல்லத்தில் வரவேற்றார். சீன அதிபர் குடும்பம் வசிக்கும் ஷாங்க்கி மாகாணத்தின் தலைநகரம்தான் இந்த ஜியான் ஆகும். தனது தொடக்கநிலை சந்திப்பில் அதிபர் ஜி இந்தியசீன உறவுகளுக்கான உறுதியான உற்சாகமான சித்திரத்தை வெளிப்படுத்திக் காட்டினார். சீன அதிபர் இந்திய பிரதம மந்திரியிடம் சீனஇந்திய உறவுகள் "நிலைத்த மேம்பாட்டைக் காட்டுவதோடு விரிவான எதிர்கால வாய்ப்புகளையும்" சுட்டுகின்றன என்றார். சுதை மண் வடிவ போர்வீரர்கள் அருங்காட்சியகம் சமஸ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட விஷயங்களைக் கொண்டுள்ள புத்தமதக் கோயில் ஆகியவற்றுக்கு பிரதம மந்திரி சென்று பார்வையிட்டது என்பது ஆசிய நாடுகளின் இரண்டு மாபெரும் அண்டை நாடுகளுக்கு இடையில் பல நூற்றாண்டுகளாக உள்ள கலாச்சார தொடர்பை உறுதிபடுத்துவது போல் அமைந்தது. விஜயும் புரியும் ஒரு அயல் நாட்டு தலைவருக்கு தனது முன்னோர்களின் இல்லத்தில் வரவேற்பு அளிப்பது அதிபர் ஜியைப் பொறுத்த அளவில் இதுவே முதல் முறை ஆகும். இந்தியசீன உறவுகளை மேலும் மேம்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர் தனது தனிப்பட்ட பாரம்பரிய இல்லத்தில் பிரதமர் மோடியை வரவேற்று உள்ளார். இந்தியத் தலைவருக்கு அதிபர் ஜி அளித்த சிறப்பான மற்றும் விசேஷமான வரவேற்பு என்பது அகமதாபாத்தில் பிரதமர் மோடி சீன தலைவருக்கு அளித்த வரவேற்புக்கு பிரதியுபகாரம் செய்வது போல் அமைந்திருந்தது. இந்திய மற்றும் சீன தலைவர்கள் பிறநாட்டு தலைவரின் பயணத்தை அந்தந்த நாட்டின் தலைநகரங்களில் தொடங்காமல் மாநிலத் தலைநகரங்களில் தொடங்கியது இதுவே முதல் முறையாகும்.

இது இந்தியசீன நட்புறவை வளர்ப்பதில் பிறந்த இட ராஜதந்திர புதிய உத்தியாக மலர்ந்துள்ளது. நீடித்து இருக்கும் தனிப்பட்ட உறவுகள் மற்றும் இதயமன நெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் வழக்கமான ராஜாங்க நடவடிக்கைகளில் சிக்கிக் கொள்ளாமல் இரு தரப்பு உறவுகளையும் மேம்படுத்துவதற்கு புதியதாக முக்கியத்துவம் தரப்படுவதை இது எடுத்துக்காட்டுகின்றது. "சீனாவின் மக்கள் காட்டும் உற்சாகத்தைப் பார்க்கும் போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இரு நாட்டு மக்களுக்கும் இடையில் ஏற்படும் உறவு எப்போதும் விசேஷமானதுதான்" என பிரதமர் டிவீட் செய்து உள்ளார். ஜியானில் கூடிய அளவு கடந்த மக்கள் திரள் அவருக்கு வாழ்த்து தெரிவித்த பிறகு அவர் இவ்வாறு டிவீட் செய்திருந்தார்.

## சக்திமிக்க முதன்மை நாடுகளின் புதிய கதையாடல்: ஆசிய நூற்றாண்டு

ராஜதந்திரத்தில் அடையாளக் குறிப்புகள் மிக முக்கியமானவை. ஆனால் அவை உண்மையான பொருளுக்கு பதிலீடாக ஆகாது. ஆகையால் இந்திய சீன உறவுகள் குறித்து உருவாகி வரும் கதையாடல் குறியீட்டியல், அடையாளக் குறிப்பு, பொருள் ஆகியவற்றின் கலவையாக இருக்கிறது. இரண்டு நாடுகளின் 2.6 பில்லியன் மக்களின் வாழ்விலும் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இந்த சிக்கலான உறவு பற்றிய நீண்ட கால பார்வையுடன் கதையாடல் எழுகின்றது. முக்கியமான கோட்பாட்டு உருவாக்கத்தில் மே15 அன்று விடுக்கப்பட்ட கூட்டறிக்கையானது இந்தியாவையும் சீனாவையும் "பிராந்தியத்தின் இரண்டு மாபெரும் சக்திகள்" என்று குறிப்பிடுவதோடு இவை ஆசிய நூற்றாண்டையும் 21ஆம் நூற்றாண்டின் புவி அரசியல்பொருளாதார பரப்பையும் வடிவமைக்கும் என்றும் குறிப்பிடுகின்றது. "இந்தப் பிராந்தியத்தில் ஒரே நேரத்தில் இந்தியாவும் சீனாவும் மாபெரும் சக்திகளாக உருப்பெற்று

வருவதை இரண்டு தலைவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆசிய நூற்றாண்டு என்பதை உண்மையாக்குவதற்கான முக்கியமான வாய்ப்பையும் உலகம் வழங்கி உள்ளது என்பதையும் அவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர்" என்று அந்தக் கூட்டறிக்கை தெரிவிக்கின்றது. இந்தியசீன இருதரப்பு உறவுகள் ஆசியாவில் 21ஆம் நூற்றாண்டில் முக்கிய பங்கை வகிக்க உள்ளன. அந்தக் கூட்டறிக்கையானது இருநாட்டு உறவை பரந்துபட்ட உலகளாவிய பின்னணியில் பொருத்திப் பார்த்து "இரண்டு மாபெரும் வளரும் நாடுகளுக்கு இடையில் உருவாகி வரும் மிகப்பெரும் பொருளாதாரங்களுக்கு இடையிலான, உலகளாவிய கட்டமைப்பில் மிகப்பெரிய இரண்டு துருவங்களுக்கு இடையிலான வளர்ச்சிப் பாதையை நோக்கிய இந்த உறவு சர்வதேச அமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் புதிய அடிப்படையைத் தருகின்றது" என்று கூறுகின்றது.

## சிவப்பு கோடுகள்

இந்த மாபெரும் கட்டுமானம் என்பது அனைத்து முக்கியமான எச்சரிக்கைகளை வரிசையாகக் கொண்டு உள்ளது. இந்தியசீன உறவுகளின் உள்ளுறைந்து உள்ள பலன்கள், ஒத்திசைவான ஆசிய நூற்றாண்டு பற்றிய உறுதி ஆகியன இரண்டு பக்கமும் "பரஸ்பர மரியாதை மற்றும் அடுத்தவரின் கவலை, நலன்கள், விருப்பங்கள் மீது காட்டும் அக்கறை" ஆகியவற்றைப் பொருத்தே அமையும். இவை முக்கியமான சிவப்புக் கோடுகள் ஆகும். சர்வதேச அரங்கில் உருவாகி வரும் முக்கியத்துவத்தை இரண்டு நாடுகளும் உணர்ந்து எந்தவிதமான பாசாங்கு அவநம்பிக்கையும் இல்லாமல் எதிரி நாடு எனப் பார்க்காமல் அங்கீகரித்து நடந்தால்தான் கட்டுப்பாட்டை மீறாமல் கோட்டுக்குள் இருக்க முடியும். மே மாதம் மேற்கொண்ட சீனா விஜயத்தின் போது திரு.மோடி தன்னை வரவேற்ற சீன விருந்தினர்களுக்கு இந்தச் சிவப்புக் கோடுகள் குறித்து நினைவூட்டினார். மேலும் இந்த உறவின் முழு உள்ளுரை ஆற்றலையும் உண்மையாக்குவதில் இருந்து இரண்டு நாடுகளையும் பின்னிழுக்கக் கூடிய அவர்களது நிலைப்பாடு குறித்து மீண்டும் பரிசீலித்து பார்க்குமாறு அவர்களை திரு.மோடி கேட்டுக் கொண்டார். சீனப் பிரதமர் லியுடன் சேர்ந்து கூட்டாக ஊடகத்துக்கு விடுத்த அறிக்கையின் போது "நாம் பங்குதாரர்களாக இருப்பதன் முழுமையான பலன்களை அடைவதில் இருந்து நம்மை பின்னிழுக்கக்கூடிய இப்பிரச்சனைகள் மீதான அணுகுமுறையை சீனா மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்தினேன்" என்று திரு.மோடி கூறினார்: உண்மை என்னவென்றால் சீனப் பிரதமருடன் பீஜிங்கில் நடைபெற்ற கூட்டு ஊடகக் கருத்தரங்கில் திரு.மோடி இவ்வாறு பேசினார் என்பதே ஆகும். பீஜிங்கின் சில செயல்கள் மற்றும் நடைமுறைகள்

அதாவது புதுதில்லி ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருதுபவை மீதான இந்தியாவின் மறுப்பின் தீவிரத்தை இந்த வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. ஜம்முகாஷ்மீர் மற்றும் அருணாசலப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு சீனா ஸ்டேப்பிள்டு விசாக்கள் வழங்குவது, இந்திய எல்லைப்புறத்தில் சீன துருப்புகள் மீண்டும் மீண்டும் தாக்குதலை மேற் கொள்வது, விவாதத்துக்குரிய காஷ்மீர் பகுதியின் ஊடாக சீனாபாகிஸ்தான் பொருளாதார இடைவழி காட்டும் முன்மொழிவு ஆகியன இதில் உள்ளடங்கும். இந்தப் பிரச்சனைகள் இந்தியசீன உறவில் நீண்டகால உறுத்தல்களாக இருந்து வரு கின்றன. இவை சீனாவைப் பற்றிய இந்திய மக்களின் மனச்சித்தரிப்பில் பாதகமான விளைவை ஏற்படுத்துகின்றன. மேலும் பீஜிங்கின் உள்நோக்கம் மற்றும் தீர்மானம் குறித்து புதுதில்லியில் ராஜாங்க ரீதியிலான அவநம்பிக்கையும் வலுப்பெறுகின்றது.

## பொருளாதாரம் முதல் அணுகுமுறை

இத்தகைய பிரச்சனைகள் மீதான மாற்றுக்கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்வது என்பது இரு நாடுகளின் உறவுக்கு பாதிப்பாக இருப்பதோடு உறவை முறிக்கவும் செய்துவிடலாம். முரண்பாடின் ஊற்றுக் கண்களாக இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும் இந்திய சீன ஈடுபாட்டில் புதிய பக்கபலமும் நடுநிலைமையும் வெளிப்படுகின்றன. இரு நாடுகளும் நேர்மறை அம்சங்களில் கவனம் செலுத்துகின்றன. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு தருவதன் மூலம் வெற்றி பெறக்கூடிய வளையத்தின் பரப்பை அதிகரிக்கும் பொருளாதார வாய்ப்பையும் இரு நாடுகளும் உணர்ந்துள்ளன. பல்வேறு விதமான 24 ஒப்பந்தங்கள் கையெழுத்தான நிகழ்வு இதனை பிரதிபலிக்கிறது. உள்கட்டமைப்பு வசதி, ஸ்மார்ட் நகரங்கள், ரெயில்வே, கலாச்சாரம், திறன் மேம்பாடு, விண்வெளி மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற துறைகளில்தான் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களது ராஜாங்க உறவுகளை பலப்படுத்திக் கொள்ள இரு தரப்பும் முடிவு செய்துள்ளன. தொடர்ச்சியாக உயர்நிலை சந்திப்புக் கூட்டங்களை நடத்துவது, செங்டு??? மற்றும் சென்னையில் புதிதாக தூதரகங்களை ஏற்படுத்துவது போன்ற செயல்களும் இதில் அடங்கும். முதல் கட்டமாக, வெளிப்படையாக இரு நாடுகளும் இந்த வகையில் முதன் முதலாக மாநில/மாகாணத் தலைவர்கள் மன்றம் ஒன்றை நிறுவி உள்ளன. இந்த மன்றத்தின் முதல் கூட்டம் பீஜிங்கில் மே 15, 2015 அன்று பிரதம மந்திரி மோடியின் முன்னிலையில் நடைபெற்றது. மகாராஷ்டிர மாநில முதல் அமைச்சர் தேவேந்திர ஃபட்நாவிஸ், குஜராத் மாநில முதல்அமைச்சர் ஆனந்திபென் பட்டேல் ஆகியோர் இந்தியத் தரப்பில் இருந்து கலந்து கொண்டவர்களில் இடம் பெற்றிருந்தனர். இதற்கெல்லாம் மேலாக, மே 2015 அன்று நடந்த இந்திய, சீன தலைவர்களின் சந்திப்புக் கூட்டம் இரு நாடுகளின் நட்புறவுக்கு பொருளாதாரத்தை முதலாவதாகக் கைக்கொள்ளும் அணுகுமுறையை அடிக்கோடிட்டு வலியுறுத்தியது. வரும் மாதங்களில் மற்றும் வரும் புத்தாண்டுகளில் இந்திய சீன உறவின் வடிவமைப்பை புவிஅரசியல் மற்றும் புவிபொருளாதாரம் இரண்டும் நிர்ணயிக்கும். ஆனால் இப்போது ஆசியாவின் முன்னணி பொருளாதாரங்களை முடுக்கிவிடுவது பொருளாதாரச் சார்புதான். தீவிரமான வர்த்தகம் மற்றும் முதலீடு மூலமாக இரு நாடுகளும் வளம் பெறுவதற்கு ஏற்ப அவை நெருக்கமாகின்றன. இப்போது உள்ளுறைந்த வாய்ப்பு அதிகமாக உள்ளது. உண்மையில் வானமே எல்லை. ஆனால் இதற்கு ஒருவரின் முதன்மை நலன்கள் மீது அடுத்தவர் பரஸ்பர நம்பிக்கையையும் உணர்வையும் உறுதிப்படுத்தியாக வேண்டும்.

## இந்தியாவில் தயாரியுங்கள்

இந்த நோக்கத்தில்தான் பிரதம மந்திரி திரு.மோடி "நமது பொருளாதார கூட்டு பங்கேற்புக்கான உயர்நிலை குறிக்கோளை நாம் நிர்ணயிக்கின்றோம். எண்ணற்ற இரு தரப்பு வாய்ப்புகளை நாம் பார்க்கிறோம். அதேபோல் நகர மயமாதல் போன்ற பல சவால்களையும் பார்க்கிறோம்" என்று பீஜிங்கில் தெரிவித்தார். சீன அதிபர் ஜி மற்றும் பிரதமர் லி ஆகியோருடனான பேச்சைச் சுட்டிக்காட்டி பிரதமர் திரு. மோடி "நமது இந்தியாவில் தயாரியுங்கள் என்ற இயக்கத்திலும் உள்கட்டமைப்பு வசதித் துறையிலும் சீனாவின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு இரு தலைவர்களும் மிகுந்த ஆதரவு தருகின்றார்கள்" என்று சொல்கின்றார்.

பொருளாதாரத் தளத்தில் விளைவுகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. மேலும் முன்னேற்றம் நடந்துகொண்டே இருக்கின்றது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் $20 பில்லியன்

முதலீடு செய்யப்படும் என்ற சீனாவின் உறுதிமொழியை செப்டம்பர் 2014ல் இந்தியாவுக்கு விஜயம் செய்த சீன அதிபர் தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையில் ஷாங்காயில் மே16 அன்று $22 பில்லியன் மதிப்புக்கு இரு தரப்பு வர்த்தகப் பிரதிநிதிகளும் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்தியசீன முதன்மைச் செயல் அலுவலர்கள் குழுமியிருந்த கூட்டத்தில் உரையாற்றிய போது திரு.மோடி இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகப்படுத்தப்படும் எனக் குறிப்பால் உணர்த்தினார். சீன வர்த்தகச் சமுதாயம் சாதகமான பதில்வினைகளை வெளிப்படுத்தினர். சீனாவில் இந்தியக் கதையின் கதையாடல் மாற்றப்படுகின்றது என்பதை இது பிரதி பலித்தது. திரு.மோடியின் விஜயத் துக்குப் பிறகு சில வாரங்கள் கழித்து இந்தியாவுக்கான சீன தூதர் லெ யூச் செங் "இந்தியாவில் தயாரியுங்கள்" மற்றும் "சீனாவில் தயாரிக்கப்பட்டவை" என்பதற்கும் இடையில் உருவாகி வரும் ஒருங்கிணைப்பைக் கோடிட்டு காட்டினார். மேலும் அவர் சிந்தியாவில் தயாரியுங்கள் (MAKE IN CHINDIA) என்ற புதிய கருத்தாக்கத்தை முன் வைத்தார். இந்த இரண்டு பெரிய ஆசிய நாடுகளுக்கு இடையில் உற்பத்தி மற்றும் வர்த்தகம் தொடர்பாக நெருங்கிய ஒத்துழைப்பை இந்தக் கருத்தாக்கம் கோருகின்றது.

புதுதில்லியில் ஜுன்10 அன்று இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சபைகளின் கூட்டமைப்பு (எஃப்.ஐ.சி.சி.ஐ) ஏற்பாடு செய்து நடத்திய சீனஇந்திய தொழில் கூட்டுறவு செமினாரில் பேசிய தி லெ "சீனாவில் தயாரிக்கப்பட்டது 2025" என்ற பிரச்சார இயக்கம் சீனாவில் அண்மையில் தொடங்கப்பட்டு உள்ளது எனக் குறிப்பிட்டார். பிற அம்சங்களோடு புத்தாக்கம், உயர்நவீன தயாரிப்பு ஆகியனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் அவர் இது பிரதம மந்திரி முன்னெடுத்து நடத்தும் "இந்தியாவில் தயாரியுங்கள்" என்ற உத்திக்கு இசைந்ததாகவும் இணையாகவும் இருக்கும் என தெரிவித்தார். இந்தியாவில் வர்த்தகம் மேற்கொள்வதை எளிதாக்குவதற்கு இந்தியாவின் புதிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை சீன வர்த்தக சமுதாயம் பாராட்டுவதை சீன தூதர் வலியுறுத்திக் குறிப்பிட்டார். உற்பத்தித் துறை, மனிதவளம், ரியல் எஸ்டேட்,உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு, ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள், ரயில்வே போன்ற பரந்துபட்ட வித்தியாசமான திட்டங்களில் இந்தியாவில் முதலீடு செய்ய சீன நிறுவனங்கள் விரும்புகின்றன என்று சீன தூதர் தெரிவித்தார்.

இரு தரப்பு உறவுகளில் விரிசலோ அல்லது நம்பிக்கைக் குறைவோ ஏற்படாது என மேம்படுத்தப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகள் உறுதியளிக்க முடியாது. சீனாஜப்பான உறவு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். பொருளாதார தூண்டுதல் முரண் ஏற்படுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கலாம். இதனால் கிடைக்கக் கூடிய பலன்கள் குறித்து இரு நாடுகளும் கூடுதல் கவனம் செலுத்தலாம். இது நட்புறவின் பொருளாதாரப் பக்கத்தை ஆழப்படுத்துவதன் மூலம் அடையப்படலாம். அதனால்தான் இந்தியா வுக்கும் சீனாவுக்கும் இடையில் நட்புறவில் மாற்றங்கள் பற்றிய கதை என்பது பொருளாதார துவக்க நடவடிக்கைகளால் அழுத்தம் தரப்படுவதாக அமைகின்றது. பரந்துபட்ட பல பிரிவுகளில் பொருளா தார ஈடுபாட்டை முடுக்கிவிடுவதன் மூலம் பொருத்தமான நீண்டகால அஸ்திவாரத்தை உறுதியாக அமைக்கும் முயற்சிகளும் அழுத்தம் தருகின்றன. இதனைப் பொறுத்து எடுக்கப்பட்ட அண்மைக்கால முடிவுகள் மற்றும் தொடக்க நடவடிக்கைகளில்

கீழ்வருவனவும் அடங்கும். 1). இந்தியாவில் 2015ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உத்திசார் பொருளாதாரக் கலந்துரையாடலை நடத்துதல். இதற்கு இந்தியாவின் நிதி ஆயோக் துணைத் தலைவரும் சீனாவின் என்.டி.ஆர்.சி தலைவரும் கூட்டாகத் தலைமை வகிப்பார்கள். 2). இரு நாடுகளின் வர்த்தக அமைச்சகங்களுக்கு இடையில் ஐந்தாண்டு வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுச் செயல்திட்டத்தை வகுத்தல்.

## அபிவிருத்தி சார்ந்த பங்குதாரர் நிலை

அபிவிருத்தி சார்ந்த பங்குதாரர் நிலையை நெருக்கமாக ஏற்படுத்துவது என்பதும் கட்டவிழும் மற்றொரு கதையாடலாகும். இரண்டு ஆசிய நாடுகளுக்கு இடையில் நட்புறவின் புதிய பாதைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக இது அமையும். இந்தப் பின்னணியில் முந்தைய அரசின் செயல்பாடுகளின் மீது மோடி அரசாங்கம் சில நல்ல பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது. மே மாத சந்திப்புக் கூட்டம் சில முக்கிய நடவடிக்கைகளுக்கு வழி வகுத்துள்ளது. அவை:

I. குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் இரண்டு தொழில் பூங்காக்களை சீனா அமைத்துத் தருதல்

II. சென்னை பெங்களூரு மைசூர் பாதையில் ரெயிலின் வேகத்தை அதிகப்படுத்துதல், தில்லி நாக்பூர் பகுதியில் அதி விரைவு ரெயில் இணைப்புக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல் உள்ளிட்ட ரெயில்வே திட்டங்களில் கூட்டாகச் செயல்படுதல் மற்றும் ரெயில்வே பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்தல்

III. குவாங்டாங் மாகாணம் மற்றும் குஜராத் ஆகியவற்றுக்கு இடையில் சீனாவின் நட்பார்ந்த உறவை ஏற்படுத்துதல். அதேபோல் குவாங்ஸ் நகரம் மற்றும் அகமதாபாத் இரண்டையும் சகோதரி உறவு நகரங்களாக்குதல்.

IV. இந்தியாவின் கிஃப்ட் சிட்டி மற்றும் சீனாவின் ஷென்ஜென் நகரத்துக்கும் முன்னோடி ஸ்மார்ட் சிட்டி திட்டம்

V. மும்பை மற்றும் ஷாங்காய், அகமதாபாத் மற்றம் குவாங்ஸ்ஹௌ, ஹைதராபாத் மற்றும் கிங்டாவோ, அவுரங்காபாத் மற்றும் துன்ஹுவாங், சென்னை மற்றும் சோங்கிங் ஆகியவற்றை சகோதரி உறவுள்ள நகரங்களாக அமைத்தல். குஜராத் குவாங்டாங் மற்றும் கர்நாடகம் சிச்சுவான் ஆகியவற்றுக்கு இடையில் சகோதரி மாநில / மாகாண உறவுகளை உருவாக்குதல்.

## நெடுங்காலப் பார்வை: சர்வதேச ஒத்துழைப்பு

தங்களது உறவை சர்வதேசப் பார்வையில் எடுத்துக்கொண்டு இந்தியாவும் சீனாவும் தாங்கள் ஈடுபடவேண்டிய தளங்களை விரிவுபடுத்தி உள்ளன. பருவநிலை மாறுதல், பயங்கரவாதம், ஆப்பானிஸ்தானில் பிராந்திய ஒத்துழைப்பை தீவிரப்படுத்துதல் மற்றும் மேற்கு ஆசிய நெருக்கடிகளைத் தீர்த்து வைத்தல் ஆகியவற்றுக்கான பலதரப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் போன்ற பல வகையான சர்வதேச மற்றும் பலதுறை சார்ந்த பிரச்சனைகளை இவை கவனத்தில் கொண்டுள்ளன. பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான பல்வேறு நோக்குநிலைகள் ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சர்வதேச பயங்கரவாதம் குறித்த விரிவான மாநாடு பற்றிய பேச்சு வார்த்தைகளை விரைவில் முடிக்க வேண்டும் என்ற இந்தியாவின் நெடுநாளைய கோரிக்கையை சீனா ஆதரிக்கின்றது. மன்மோகன்சிங் அரசின் காலகட்டத்தில் துவங்கப்பட்ட ஆஃப்கானிஸ்தான் ஒத்துழைப்பு என்பதை பிராந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். இந்த இரண்டு ஆசிய பெரும் சக்திகள்

ஐ.நா.சபை, பிரிக்ஸ், ஜி20, எஸ்.சி.ஓ போன்ற பன்னாட்டு மற்றும் பல தரப்பு அமைப்புகளில் தங்களது நட்புறவை பலப்படுத்தி வருகின்றன.

சீனாவுக்கு மோடி விஜயம் செய்த போது பருவநிலை மாறுதலை எதிர்கொள்வதற்கான நெருங்கிய நட்புறவு குறித்த தனித்த கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. டிசம்பர் 2015ல் பாரீஸ் நகரில் நடைபெற உள்ள சி.ஓ.பி 21ல் பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேச உச்சி மாநாட்டில் தங்களது இருதரப்பு வித்தியாசங்களையும் சமாளித்து அதே சமயம் சர்வதேச அளவில் நிகழ்ந்து வரும் பிரச்சனைகளையும் முயற்சிகளையும் ஒரு சட்டகத்துக்குள் கொண்டு வருவது எப்படி என இருநாடுகளும் முயன்று வருவதை இக்கூட்டறிக்கை வெளிப்படுத்துகின்றது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட செயலானது நீடித்த வளர்ச்சியில் நட்புறவு தேவை என்ற இரு நாடுகளின் அக்கறையை வெளிப்படுத்துகின்றது. இந்த வருடத்தின் பிற்பகுதியில் பாரீஸ் நகரில் நடைபெற உள்ள யு.என்.எஃப்.சி.சி.சிக்கான சி.ஓ.பி 21 உச்சி மாநாட்டில் குறிக்கோளுடன் கூடிய விரிவான, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய, நடுநிலையான பருவநிலை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதில் ஒன்றாக இணைந்தும் பிற நாடுகளுடன் சேர்ந்தும் செயலாற்றுவதன் முக்கியத்துவத்தை அவர்கள் அடிக்கோடிட்டு காட்டி உள்ளனர். இந்த உலகப் பொதுவான சவாலை எதிர்கொள்வதில் சிறந்த தொழில் நுட்பத்தைப் பரிமரிக் கொள்ளுதல், ஏற்பு மற்றும் துயர் தணிப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றல்,நிதிசார் ஆதரவு ஆகியவற்றையும் இம்மாநாடு ஊக்கப்படுத்தும்" என இக்கூட்டறிக்கை எடுத்துரைக்கிறது.

2015–20 விண்வெளி ஒத்துழைப்பு திட்டத்தில் கையெழுத்திட்டது மாபெரும் இரு ஆசிய நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்புக்கான புதிய பகுதிகளை திறந்துவிட்டிருக்கிறது. குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக சீனா நியூக்ளியர் சப்ளையர்ஸ் குரூப்பில் சேர வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை முதன்முதலாக கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்தியாவின் சர்வதேசரீதியிலான விருப்பங்களுக்கு தனது ஆதரவை சீனா உறுதிப்படுத்தினாலும்கூட, ஐ.நா.சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பதற்கான தனது ஆதரவை வெளிப்படையாக சீனா இதுவரை அறிவிக்கவில்லை. யு.என். எஸ்.சி.யில் இந்தியாவுக்கான நிரந்தர இடத்துக்கு ஆதரவு என சீனா அறிவித்தால் அது மிகப்பெரிய மாற்றமாக அமையும். இரு தரப்பு உறவிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும். இரு நாடுகளுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்கு இடைவெளி இல்லாமல் நம்பிக்கை பாலம் அமைக்க ஏதுவாகும்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பார்க்கும்போது இரண்டு ஆசிய சக்திமிக்க நாடுகள் இருதரப்பு ஒத்துழைப்பின் பரிமாணத்தையும் தாண்டி நிற்கும் என ஒருவர் எதிர்பார்க்கலாம். பிராந்திய மற்றும் சர்வதேச செயல்திட்டத்தை வடிவமைக்க அவை ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டிய வட்டம் பெரிதாகும் என்றும் எதிர்பார்க்கலாம். சர்வதேச அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் மீது தாக்கம் ஏற்படுத்தும் மேம்பாட்டு விஷயங்கள் குறித்து தாமே முன்வந்து ஆலோசிப்பதன் மூலம் இது சாத்தியமாகும். "மாபெரும் சக்திகளின்" ஈடுபாடு என்ற புதிய கதையாடல் பிரதம மந்திரி மோடியின் சீன விஜயத்தின் போது உருவாக்கப்பட்டது. இந்தக் கதையாடல் சிக்கலான நட்புறவுக்கான சட்டகத்தை வடிவமைக்கும்.

இரண்டு நாடுகளும் தங்களது வளரும் பொருளாதாரத்தின் வலிமையை நெம்புகோலாகப் பயன்படுத்தியும் சர்வதேச அரங்கின் நிலைமையைப் பயன்படுத்தியும் பிராந்தியம் முழுமைக்கும் ஆசிய நூற்றாண்டை உருவாக்கும் உறுதி மொழியை உண்மையாக்கும். எனினும் இந்தப் பயணத்தில் பல தடைகளும் உள்ளன. தீர்க்கப்படாத எல்லைப்புற பிரச்சனை இன்னமும் பரஸ்பர நம்பிக்கைக் குறைவுக்கும் நெருக்கடி ஏற்படமறையவும் ஆதாரப் புள்ளியாக இருந்து வருகின்றது. சிக்கலான இந்த நட்புறவு குறித்து நீண்ட பார்வையை கைக்கொண்டு இது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இதே வேகத்தில் பரஸ்பர நம்பிக்கையின்மை அதிகமானால் விரிவடைந்து வரும் பொருளாதார ஒத்துழைப்பு தடம் மரிவிடும். இந்திய நிறுவனங்களுக்கு குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், மருந்து, உணவுத் துறைசார்ந்த நிறுவனங்களுக்கு தங்களது சந்தையை அனுமதிக்கும் தனது நீண்டகால உறுதிமொழியை சீனா நிறைவேற்ற வேண்டிய தேவை உள்ளது. நீண்டகால முதலீடுகள் மற்றும் தொழில்பூங்காக்களை அமைத்தல் என்ற சீனாவின் திட்டம் நிஜமாவது என்பது பொருளாதார ஒத்துழைப்பு நீண்டகாலம் தொடர்வதற்கு இன்றியமையாத செயலாகும். இந்த இரு பெரும் சக்திமிக்க நாடுகள் மூன்றாம் உலக நாடுகளுடனான தங்களது உறவு குறித்த கரிசனத்தை அதிகமாக்க வேண்டும். ஆகையால் மரிவரும் இந்தியசீன உறவுகள் இத்தகைய பிரச்சனைகளை எதிர்கொள்ள புதிது புதிதான வழிமுறைகளையும் மரபை மீறிய தீர்வுகளையும் மேற்கொள்ள வேண்டும். ”ஆயிரம் மைல்களுக்கான பயணம் என்பது ஒரு சிறிய அடியில் இருந்துதான் தொடங்குகின்றது” என சீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது. ஏற்கனவே சிற்றடிகள் பல எடுத்து வைக்கப்பட்டு விட்டன. இரண்டு நாடுகளின் தலைவர்களும் விரைவாக நடைபோட இதுவே சரியான தருணமாகும். இந்தியசீன உறவினை அடுத்த பரிமாணத்துக்கு எடுத்துச் செல்ல நெகிழ்ச்சியான, புதுமையான நீண்ட அடிகளை எடுத்து வைக்க வேண்டும். போட்டியான குறிக்கோள்கள் மற்றும் புவிஅரசியலின் நெருக்கடிகளின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்.

## கலாச்சாரம் சார்ந்த ராஜாங்க உறவு: மனங்களையும் இதயங்களையும் இணைத்தல்

வளர்ச்சியை புதிய அம்சங்களுடன் அணுகுவதில் கலாச்சார ராஜாங்க உறவும் மக்களை நேருக்கு நேர் சந்தித்தலும் வரும் ஆண்டுகளில் இந்தியசீன உறவின் நெருக்கத்தை அதிகப்படுத்த உதவும். இந்த அம்சத்தில் இந்தியப் பிரதமர் மோடியின் அண்மைக்கால சீன விஜயம் விரிவடைந்து வரும் இந்தியசீன நட்புறவின் மையமாக மக்களை நேருக்கு நேர் சந்திக்கும் அம்சத்தை நிலைநிறுத்த விரும்பி உள்ளது. யோகா தாய் சீ கலை ஒருங்கிணைப்பு நிகழ்வை மேடையில் நிகழ்த்தியது என்பது கலாச்சார பிணைப்புகள் பகிர்ந்துக் கொள்ளப்பட்டால் இரு தரப்பு உறவுகள் மேம்படும் என்பதையும் இதனால் இந்தியா சீனா உறவு மேம்படும் என்பதும் நிரூபணமாக்கி உள்ளது. மே 15ஆம் தேதி பீஜிங்கின் சொர்க்கத்தின் கோயிலில் மின்சார அதிர்வலை சூழந்தது போன்ற நிலைமை இருந்தது. இந்தியக் குழந்தைகள் தாய்க்கு சீ கலையை நிகழ்த்த சீனக் குழந்தைகள் யோகாவை செய்து காட்டினர். இந்த நிகழ்வு இந்தியப் பிரதமர் மோடி மற்றும் சீனப் பிரதமர் முன்னிலையில் நடந்தது. ”இந்த நிகழ்வை தேர்ந்தெடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன். ஏனெனில் இது நிகழ்ந்த இடம் சொர்க்கத்தின் கோயில். நீங்கள் சொர்க்கத்தை அடைய வேண்டுமென்றால் மனதும் உடலும் சமநிலையில்

இருக்க வேண்டும். யோகா என்பது மனதையும் உடலையும் சமநிலையில் வைத்திருக்கும் ஒரு கலையாகும். இன்று உலகில் ஒவ்வொரு பகுதியிலும் விரக்தி அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. இந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வழிதான் யோகா என்றார் திரு.மோடி. சீனக் குடிந்தைகள் யோகாவை செய்துக் காட்டியதும் இந்தியக் குடிந்தைகள் தாய் சீ நிகழ்த்திக் காட்டியதும் ஆச்சரியமூட்டும் தற்செயல் இணைவாகும். நமது கலாச்சார பாரம்பரியத்தை இணைக்கக்கூடிய அற்புதமான ஊடகமாக இது இருக்கிறது. இதனை நாம் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; என பிரதமர் மோடி மேலும் கூறினார். பல்வேறு தொடக்க முயற்சிகள் மூலம் கலாச்சார தொடர்புகள் மீண்டும் வலுப்படுத்தப்பட உள்ளன. ஷாங்காயில் உள்ள ஃபூடன் பல்கலைக்கழகத்தில் காந்திய மற்றும் இந்தயப் படிப்புக்கான மையம் ஒன்றை நிறுவுதல், இரு தரப்பு சிந்தனையாளர் மன்றம் அமைத்தல், உயர்நிலை இந்திய சீன ஊடக மன்ற நிலையம் அமைத்தல், குன்மிங்க் என்ற இடத்தில் யோகா கல்லூரி அமைத்தல், யோகா கல்லூரியை நிறுவுவதற்காக கலாச்சார உறவுகளுக்கான இந்தியக் கவுன்சில் மற்றும் யுன்னான்?? தேசிய பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையில் ஒப்பந்த உறவு ஆகிய கலாச்சார நடவடிக்கைகள் தொடங்கப்பட உள்ளன.

புனிதமான கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொள்ளும் இந்திய யாத்ரீகர்களுக்கு ஒரு நல்ல செய்தி இப்பொழுது ஒப்பந்தமாகி உள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் மானசரோவர் யாத்திரை இப்போது உத்ரகண்ட மாநிலத்தில் உள்ள லிபுலேக் பாஸ் வழியாகவே நடக்கிறது. இந்த யாத்திரையை கூடுதலாக சிக்கிமில் உள்ள நாது லா பாஸ் வழியாகவும் மேற்கொள்ள இரு தரப்பும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த நாதுலா பாஸ் வழியானது முதியவர்கள் பயணம் செய்ய ஏற்றது. இந்தப் புதிய பாதையில் சிரமங்கள் குறைவு என்பதோடு பயண நேரமும் குறையும்.

சுற்றுலாவை மேம்படுத்தவும் நேருக்கு நேர் மக்கள் சந்திப்பை அதிகப்படுத்தவும் உதவக்கூடிய ஒரு தனித்துவமான செயலாக பிரதம மந்திரி மோடி சீன சுற்றுலா பயணிகளுக்கு இவிசா வசதியை அறிவித்து உள்ளார். பீஜிங்கில் முதன்மைக் கல்வி நிறுவனமான ட்சிங்குவா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இந்த அறிவிப்பை ஆரவராமாகக் கைதட்டி வரவேற்றனர். சீன வெளியுறவு அமைச்சர் வாங்க் யீ இதை ”பரிசு” என அறிவித்தார். ”இது ஒரு பெரிய செய்தி, இந்தப் பரிசுக்காக இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வோம்” என்றார் திரு வாங்க். நடப்பில் உள்ள சீனாவில் “இந்தியாவுக்குப் பயணம் செல்லும் ஆண்டு“ 2015 மற்றும் “சீனாவுக்கு பயணம் செல்லும் ஆண்டு“ 2016 ஆகியன இருநாட்டு மக்கள் ஒருவருக்கு ஒருவர் சந்தித்து உறவை மேம்படுத்திக் கொள்ள உதவும். கூட்டாக திரைப்படம் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் என்பதும் இரு நாட்னெரும் மற்ற நாட்னெரைப் பாரக்கும் பொதுப் பார்வையை மாற்றும். திரீ இடியட்ஸ் மற்றும் பிகே ஆகிய இந்தியத் திரைப்படங்களின் பிரபல்யம் இந்தத் தளத்தில் உள்ள வாய்ப்புகளை எடுத்துக் காட்டுகின்றது. பிறப்பால் உண்டாகும் மதிப்பீடுகள், குடும்ப மரபுகளுக்கான மரியாதை, கல்விக்கான முக்கியத்துவம், மனதைப் பண்படுத்துதல் ஆகியவை மூலம் உள்உறவு கொள்ளும் ஆசியாவின் வளர்ந்து வரும் இரு வல்லரசு நாடுகளுக்கு இடையில் உள்ள பொது கலாச்சாரம் சக்திமிக்க இணைப்பாக உள்ளது. ●

# மோடி அரசின் முதல் ஆண்டு : பாதுகாப்புத்துறை உந்தும் வெளி உறவுகள்

— அலோக் பன்சல்

கடந்த ஒரு ஆண்டில் பன்னாட்டு உறவுகளில் இந்தியா ஒரு புதிய உச்சத்தைக் கண்டுள்ளது. இந்த காலகட்டத்தில் எல்லாத் துறைகளிலும் இந்தியாவின் செயல் திறன் மேம்பட்டிருந்தாலும் அரசின் மிகப்பெரிய வெற்றி பன்னாட்டு உறவுகளில் ஏற்பட்டுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் உலக நாடுகளிடைய இந்தியாவினுடைய மதிப்பு மிகவும் உயர்ந்துள்ளது. ஒரு நாட்டின் பாதுகாப்பும் வெளியுறவுக் கொள்கையும் ஒன்றோடொன்று இணைந்தது. ஆகவே, ஒரு நாட்டின் பாதுகாப்பு அம்சங்கள் அந்நாட்டின் வெளியுறவு கொள்கையை நிர்ணயிக்கும். ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு அந்நாட்டின் தற்காப்பு நிலைமை மிகவும் முக்கியமானது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பன்னாட்டு உறவுகள் எந்த அளவுக்கு அதனுடைய பாதுகாப்பு கவலைகளின் அடிப்படையிலும் நாட்டின் தற்காப்பு நிலைமையை உயர்த்துவது சார்ந்ததாகவும் இருந்தது என்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

கடந்த காலங்களில் நம் நாட்டில் போர் சார்ந்த சூழ்நிலை இருந்தபோதும், மற்ற நேரங்களிலும் இந்திய அரசை கட்டாயப்படுத்தி அதன் கொள்கைகளை மாற்றுவிக்க முயன்றும், நாம் பெருமளவு இராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் கட்டாயத்தில் இருக்கும் கட்டத்தில் மற்ற நாடுகள் நமக்குத் தேவையான இராணுவ தளவாடங்களை அளிப்பதில் தடைகளை மேற்கொண்டன. மேற்கூறப்பட்ட இரண்டாவது நிலைமைக்கு போக்ரானில் இரண்டாவது முறையாக அணுகுண்டு சோதனை நடத்தியபின் இந்தியாவின் மீது விதிக்கப்பட்ட தடைகளை கூறலாம். இம்மாதிரியான தடைகளால் நம்முடைய எதிரிகளை சமாளிக்கத் தேவையான பாதுகாப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தியா இராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் பெரிய நாடு என்பதை பயன்படுத்தி "இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்" என்ற வகையில் அந்நிய நிறுவனங்களை ஈர்க்க இந்த அரசு முயற்சி செய்கிறது. இங்கு வரும் பிறநாட்டு நிறுவனங்களுக்கு பெரிய அளவு வியாபாரமும், மலிவான தொழிலாளர்களும் கிடைப்பார்கள். இந்திய பாதுகாப்புக்குத் தேவையான தளவாடங்கள் கிடைக்கும். அதே சமயம் வேலை வாய்ப்பு பெருகி, அதிக தொழிற்நுட்பங்கள் இந்தியாவிற்கு கிடைக்கும். ஆனாலும், பாதுகாப்பு துறைசார் தொழிற் நுட்பங்கள் பல அரசுகளின் கடும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், இந்திய அரசு மற்ற நாட்டு அரசுகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு இது போன்ற அரிய தொழிற்நுட்பங்கள் இந்தியாவிற்கு வழங்குவதில் உள்ள தடைகளை நீக்க வேண்டும். புதிய அரசு பதவி ஏற்கும் போது அண்டை நாடுகளை அழைத்து, இந்தியாவின் பெரிய படைத்திறன் அவர்களை அச்சுறுத்துவதற்காக அல்ல, ஆனால் இயற்கை பேரிடர்கள் நேரும் போதும் மற்ற பன்னாட்டு பேரிடர் ஏற்படும் போதும் உதவுவதற்காகவே என்று உறுதி அளிக்க முயற்சித்தது. அதன் அடிப்படையிலேயே நேபாளத்தில் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டபோது அங்கு நம் இராணுவ வீரர்கள் முன் நின்று நிவாரணம் அளித்தார்கள். அதுபோலவே, ஈராக் மற்றும் ஏமன் நாடுகளில் கலவர சூழல் இருந்த இடங்களில் இருந்தும், அதை ஒட்டிய பகுதிகளிலிருந்தும் இந்திய மக்களை பாதுகாப்பாக நம் இராணுவம் வெளிக்கொண்டு வந்தது. இந்த ஆண்டு இந்திய பாதுகாப்பை வலுப்படுத்தும் வண்ணம் இந்தியா சில நாடுகளுடன் மிக முக்கிய கூட்டு முயற்சிகளை மேற்கொண்டது. தெற்காசியாவுக்கு வெளியே இரு தரப்பு பயணத்தின் அடிப்படையில் ஜப்பான் சென்ற பிரதமர் தங்கள் இரு நாட்டு உறவை ஒரு சிறப்பு உலகளாவிய கூட்டுறவாக உயர்த்தினார். கூடவே, பாதுகாப்புத்துறையில் சில ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இரு நாடுகளும், தங்களுடைய பாதுகாப்பு துறைசார் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யவதில் கூட்டு முயற்சி எடுக்கவும், ஜப்பானின் US-II என்ற வான் மற்றும் கடல் மீது செல்லும் விமானத்தை இந்தியாவிற்கு விற்பது பற்றிய பேச்சுகளில் ஈடுபட்டன. இந்த பயணத்திற்குப்

• **அலோக் பன்சல்** இந்தியா ஃபவுண்டே‘னின் பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை மையத்தின் இயக்குனர்.

பின் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் இரு நாடுகளும் பாதுகாப்புத்துறை சார்ந்த ஒத்துழைப்புக்கு என்ன வகையான வழியை மேற்கொள்வார்கள் என்றும், புதிய உந்துதலை அளிப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்பு தொழில் நுட்பம் மற்றும் தளவாடங்கள் சார்ந்த நிலைகளும் இருந்தன. இரு நாடுகளும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கும், கடல் வழி பாதுகாப்புக்கும் இரு நாடுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையான கருத்தை வலியுறுத்தின. மேலும், 1998ல் இந்தியா மேற்கொண்ட அணுகுண்டு சோதனைக்குப் பிறகு ஹிந்துஸ்தான் விமான தயாரிப்பு நிறுவனம் மற்றும் ஐந்து பிற நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை ஜப்பான் நீக்கியது. இரு நாடுகளும் கடல் போக்குவரத்துசார் கூட்டு ஒத்திகைகளையும், இந்திய அமெரிக்க மலபார் போர்க்கப்பல் ஒத்திகைகளிலும் ஜப்பான் தொடர்ந்து பங்குபெறுவதுபற்றி வலியுறுத்தப்பட்டது. இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் கீழ் நம் நாட்டில் முதலீடு செய்ய ஜப்பானிய தொழிற் துறையினருக்கு அழைப்பு விடுத்த பிரதமர் அவர்களுக்கு எல்லா வகையான உதவிகளையும் செய்வதாக வாக்குறுதியளித்தார்.

இந்த பயணத்திற்கு பிறகு பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர், வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் ஆகியோர் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களும், பிறநாட்டு முக்கியஸ்தர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்ததன் மூலமும் பாதுகாப்புத் துறைசார் ஒப்பந்தங்களில் முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டது. பாதுகாப்புத்துறையில் ஏற்பட்ட சில பெரிய நிகழ்வுகளை இனி பார்க்கலாம்.

## இந்திய அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு

அமெரிக்கா உலகளவிலான ஒரு வலிமைமிக்க நாடு. உலகளவில் செய்யப்படும் பாதுகாப்பு சார்ந்த செலவினங்களில் மூன்றில் ஒரு பங்கு அமெரிக்காவைச் சேரும். இதோடு, அதன் தொழிற்நுட்ப முதன்மை நிலையால், பாதுகாப்புத்துறையில் அந்த நாட்டுடன் ஒத்துழைப்பு செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். இந்த ஒரு ஆண்டில் பாதுகாப்புத் துறையில் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழிசெய்யும் நடைமுறை ஒப்பந்தம் ஒன்றை இந்தியா, அமெரிக்கா கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியாவில் பாதுகாப்புத் திறமையை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் பற்றி ஒப்பந்தம் ஏற்பட்டது. இரு நாட்டிற்கான பத்து வருட பாதுகாப்பு சார்ந்த ஒப்பந்தம், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வந்த போது புதுபிக்கப்பட்டு, அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆஷ் கார்டர் இந்தியா வந்த போது கையெழுத்திடப்பட்டது. அந்த பயணத்தின் போது உயிரி மற்றும் இராசயன பொருள்கள் சார்ந்த போரின் போது இராணுவ வீரர்கள் அணிந்து கொள்ளும் கவச உடையை இருவரும் இணைந்து உருவாக்குவது பற்றியும், மின் உற்பத்தி சாதனங்களை தயாரிப்பதை பற்றியும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இரு நாடுகளுக் கிடையே, பாதுகாப்பு உறவை மேம்படுத்தவும், பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. சமீப காலங்களில், ரஷ்யாவை விட அதிகமாக அமெரிக்கா, இந்தியாவுக்கு இராணுவத் தளவாடங்களை அளித்து வருகிறது. ஆகவே இந்த தளவாடங்களை கூட்டாக தயாரிக்கவும் அதற்கான தொழிற்நுட்பத்தை வழங்கவும் முன் வந்துள்ளது. இராணுவ வீரர்களின் பாதுகாப்பு ஆடைகளுக்கும், போர்க் களத்தில் பயன்படுத்தப்படும் அடுத்த தலைமுறை ஜெனரேட்டர்களையும் உருவாக்குவதற்கும் தலா $ ஒரு மில்லியனை இரு நாடுகளும் ஒதுக்க ஏற்றுக்கொண்டன. தான் பாதுகாப்புத்துறை அமைச்சராக பதவி உயர்வு பெறுவதற்கு முன் Dr. கார்டர் மேற்கொண்ட பாதுகாப்பு தொழிற்நுட்பம் அதன்சார் வர்த்தகம் பற்றிய இரண்டு திட்டங்கள், ரேவண் மினி ஆளில்லா விமான கலங்கள் மற்றும் C-130J இராணுவ போக்குவரத்து விமானங்களை கண்காணிக்கும் கருவிகள் சார்ந்ததாகும். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனிடமிருந்து இந்தியா வாங்கிய விமானம் தாங்கிய கப்பலுக்கு பதிலாக புதிய ஒன்றை உருவாக்குவதற்கான விமானங்களை ஏவும் தொழிற்நுட்பங்களையும் அமெரிக்கா விடமிருந்து பெற இந்தியா விரும்புகிறது. இந்தத் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த ஒரு செயற்குழுவை இந்நாடுகளும் உருவாக்கியுள்ளன. அது அமெரிக்காவில் கூடும். இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்வோம் என்ற திட்டத்தில் பங்குகொண்டு இந்தியாவில் தொழில் கூடங்களை அமைத்து தேவையான தொழிற் நுட்பத்தை வழங்கி உலகளாவிய பொருள் வழங்கு தொடரை அமைப்பார்கள் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## இந்தியா பிரான்ஸ் பாதுகாப்பு ஒத்துழைப்பும் ராஃபேல் பேரமும்

பாதுகாப்பு துறையை பொறுத்த மட்டில் பிரதமர் பிரான்ஸூக்கு பயணம் செய்தது மிகவும் முக்கியமானதாகும். பிரெஞ் அதிபர் பிராங்கோ கொலாண்டே பிரதமர் மோடியுடன் மேற்கொண்ட பலதரப்பட்ட பேச்சுக்குப் பிறகு இராணுவம், பாதுகாப்பு மற்றும் ஜெய்தாபூரில் நின்று போன மின் உற்பத்தி திட்டம் போன்ற ஒப்பந்தங்களில் இந்தியாவும், பிரான்சும் கையெழுத்திட்டன. ஜெய்தாபூர் அணுமின் திட்டத்தின் நிதி நிலையை சீர் செய்ய உள்ளூரிலேயே உதிரி பாகங்களை தயாரித்து அதன் செலவினங்களை குறைக்க லார்சன் அண்ட் ட்யூப்ரோ மற்றும் அரிவா நிறுவனங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா தானே அமைக்கும் மின் அணு நிலையங்களுக்கு வேண்டிய தொழிற்நுட்பத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஜெய்தாப்பூர் திட்டத்திற்கான இந்திய மின்னணு உற்பத்தி நிறுவனத்துக்கும் அரிவாவுக்கும் இடையே பொறியியல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பிரச்சினைகள் சார்ந்த தெளிவான விளக்கங்கள் உருவாக்கப்பட்டன. அதன்படி அரிவா, ஆல்ஸ்டம் மற்றும் இந்திய மின்னணு உற்பத்தி நிறுவனம் ஆகிய மூன்று கூட்டாளிகளும் தங்களுடைய விலை மற்ற விவரங்களை உறுதி செய்தது இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக இருக்கும். இந்த ஒப்பந்தங்கள் பொது மக்களுக்குப் பயன்படும் அணுமின் உற்பத்திக்காக என்று இருந்தாலும் இவை சார்ந்த தொழிற்நுட்பங்கள் இராணுத்திற்கும் பயன்படும் என்பதால் இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம் என்ற பிரதமர் மோடியின் திட்டம் வெற்றி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விண்வெளி துறையிலும் ஒத்துழைப்பு பற்றி இரு தலைவர்களும் விரிவான பேச்சு வார்த்தை நடத்தினார்கள். 2011ல் பிஎஸ்எல்வி மூலம் செலுத்தப்பட்ட இந்திய பிரெஞ்ச் செயற்கைக்கோளிலிருந்து பெறப்படும் தகவல்களை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு பகிர்ந்துகொள்ள வழிவகை செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமும் பிரெஞ்ச் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமும் கையெழுத்திட்டன. இரண்டு நிறுவனங்களும் இன்னொரு ஒப்பந்தத்தின் மூலம் இரு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் செயற்கை கோளின் மூலம் தொலைதூர ஆய்வு செய்தல், செயற்கை கோளோடு தொடர்பு மேற்கொள்ளுதல், செயற்கை கோள்சார் வானிலை ஆய்வு போன்றவற்றில் ஒத்துழைப்பை மேற்கொள்வார்கள்.

ஆனால், ஒரு மிகப்பெரிய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒப்பந்தத்தையும் இருநாடுகள் மேற்கொண்டன. அதன்படி இந்தியாவிற்கு பிரான்சு 36 ரஃபேல் போர் விமானங்களை உடனடியாக பயன்படுத்தும் விதத்தில் மிக விரைவாக விற்க இரண்டு நாட்டு அரசுகளும் முடிவு செய்தன. பல ஆண்டுகளுக்கு முன்பே, இந்திய விமானப்படை தனக்கு வேண்டிய 126 பல செயல்களைப் புரியும் போர் விமானத்திற்காக ரஃபேலை தேர்ந்தெடுத்தது. முதல் 18 விமானங்கள் இறக்குமதிக்குப்பின் மற்றவை இந்தியாவிலேயே ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்பட இருந்தது. ஆனால், இந்த பேரத்தில் பிரச்சினை ஏற்பட்டு ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறிய பிரெஞ்ச் நிறுவனம் அங்கு தயாரிக்கப்படும் விமானங்களுக்கு உத்திரவாதம் கொடுக்கமுடியாது என்று கூறியது. இந்தப் பிரச்சினை காரணமாக இந்த பேரம் செயல்படவில்லை. இதற்கிடையே, இந்திய விமானப்படையின் போர் விமானப் பற்றாக்குறை பெருகியது. இப்போது வாங்கப்படும் 36 போர் விமானங்கள் இந்தியா சோதனை செய்து ஒப்புதல் அளித்த வண்ணமே ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், இந்திய விமானப்படைக்குத்தேவையான பல ஆண்டுகளுக்கு இவ்விமானங்களை பிரான்சு பழுது பார்த்து பராமரிக்கும். மீதமுள்ள விமானங்களுக்கான முடிவு பிறகு மேற்கொள்ளப்படும். இந்தியாவில் உற்பத்தி செய்ய நினைக்கும் நிறுவனங்களுக்கு இது அளிக்கப்படலாம்.

## இந்திய ரஷ்ய பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு

கடந்த 50 ஆண்டுகளில் முதலில் சோவியத் யூனியனும் பிறகு அது கலைந்தவுடன் ரஷ்யாவும் இந்தியாவிற்கு இராணுவத் தளவாடங்களை அளிக்கும் முக்கிய நாடாக இருந்தது. பலவகையான கால கட்டங்களையும், நெருக்கடிகளின் போதும் உறுதியாக செயல்பட்டதால் ரஷ்யாவுடனான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு இந்தியாவுக்கு

மிகவும் முக்கியமானதாகும். டிசம்பர் 11, 2014ல் ரஷ்ய அதிபர் புதின் புதுடெல்லி வந்தார். இது பிரதமர் மோடி பதவியேற்றபின் முதல் வருகையாகும். இந்த உச்சக்கட்ட பேச்சு வார்த்தையின் போது, ரஷ்யாவின் தயாரிப்பான ஐஎன்எஸ் விக்ரமாதித்யா என்ற விமானம் தாங்கி போர்க்கப்பலைப் பற்றி பிரதமர் மோடி குறிப்பிட்டு இந்திய ரஷ்ய இராணுவ ஒத்துழைப்பு விரிவடைந்து வருவதாக கூறினார். இந்தத் துறையில் இந்தியாவில் வாய்ப்புகள் பரவலாக இருந்தாலும் ரஷ்யா இந்தியாவின் முதன்மையான பாதுகாப்புத்துறை கூட்டாளியாக இருக்கும் என்று கூறி இரு நாட்டு பாதுகாப்புத்துறைசார் உறவு நீண்ட காலம் தொடரும் என்ற உணர்வை வெளிப்படுத்தினார்.

இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம் என்ற அடிப்படையில் இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டாக எம்.ஐ 17 மற்றும் கமோவ் கா–226 ரக ஹெலிகாப்டர்களை ரஷ்ய தொழிற்நுட்ப உதவியுடன் இந்தியாவில் தயாரிக்க இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. இது மட்டுமல்லாமல், இலேசான சரக்கு விமானங்கள் உள்ளிட்ட மற்ற பெரிய தாமதப்பட்ட திட்டங்களை துரிதமாக செயல்படுத்தவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. அது போலவே, சுகோய் மற்றும் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் கூட்டாக இணைந்து உருவாக்கிய ஐந்தாவது தலைமுறை போர் விமானங்களை தயாரிக்கவும், பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இறுதியான வடிவமைப்பு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்பட உள்ளது. இந்தியாவின் பயன்பாட்டில் உள்ள ரஷ்யாவின் ஐ.என்.எஸ் சக்ரா நீர்மூழ்கி கப்பலைப் போலவே மற்றொரு அணுமின் அகுலா தர நீர்மூழ்கி கப்பலை இந்தியாவிற்கு வாடகைக்கு கொடுக்க ரஷ்யா ஒத்துக்கொண்டது.

சமீபத்தில் பாகிஸ்தானுக்கும் ரஷ்யாவிற்கும் ஏற்பட்ட பாதுகாப்புத் துறைசார் ஒப்பந்தங்களும், குறிப்பாக பாகிஸ்தானுக்கு ரஷ்யா Mi 35 ரக போர் ஹெலிகாப்டர்களை வழங்க வாய்ப்புள்ளது என்ற தகவல்களால் இந்தியாவிற்கு சில கவலைகள் இருந்தன. இந்த கவலைகளை போக்கும் வண்ணம் பேசிய இந்தியாவிற்கான ரஷ்ய தூதர், இந்தியாவின் பாதுகாப்பிற்கு எதிராக, ரஷ்யா எதையும் செய்யாது என்று உறுதி கூறினார். பிறகு, PTI செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் ரஷ்ய பாகிஸ்தான் உறவுகள் இந்தியாவுடனான தொலைக் கால கட்ட நன்மைகளுக்கு ஏற்றது என்று புதின் கூறினார்.

## இந்திய ஆஸ்திரேலிய பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு

கடந்த ஒரு ஆண்டில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் தங்களுடைய பரஸ்பர பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக ஒரு செயல் அமைப்பை ஏற்படுத்தினார்கள். அவர்களுடைய பகுதியில் அமைதியை மேம்படுத்தவும், தீவிரவாதத்துக்கு எதிராக போராடவும் மற்ற பிரச்சினைகளை சமாளிக்கவும் தங்களுடைய பாதுகாப்புத்துறைசார் கூட்டு முயற்சிகளை அதிகரிக்க இது உதவும். பிரதமர் திரு.நரேந்திர மோடியும், ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட்டும் பேச்சு வார்த்தை நடத்தி இரு நாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒரு செயல் அமைப்பை ஏற்படுத்த ஒப்புக்கொண்டார்கள். இது இரு நாடுகளுக்கிடையேயான வளர்ந்துவரும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத்துறைசார் ஒத்துழைப்பை மேம்படுத்தும். இரு நாடுகளுக்கும் இடையேயான பரஸ்பர முக்கிய நிலைகளில் ஒத்துழைப்பை தீவிரமாக்கவும் இந்த செயல் அமைப்பு உதவும். இந்த ஒத்துழைப்பின் முக்கிய அம்சம், கடல்சார் பாதுகாப்பாகும். இதனை, ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பேசும்போது வலியுறுத்திய பிரதமர் மோடி "நாம் கடல்சார் பாதுகாப்பை நிலைநிறுத்த ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். கடல் போக்குவரத்திலும், உலக சபைகளிலும் நாம் இணைந்து செயலாற்றவேண்டும். உலகளாவிய சட்டங்களுக்கும், நியதிகளுக்கும் உலகளாவிய மதிப்பு ஏற்படுவதற்கு நாம் பாடுபட வேண்டும்" என்று கூறினார்.

இதற்கு முன்பாக பிரதமர் மோடி கிழக்காசிய மற்றும் ஆசியா நாடுகளின் உச்சகட்ட மாநாடு மியன்மரில் நடைபெற்றபோது கடல்சார் பாதுகாப்பு பற்றி பேசினார். இரு நாட்டு பிரதமர்களின் பேச்சுக்குப் பிறகு ஒரு செயல் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த செயல் திட்டத்தின்படி ஆண்டுதோறும் உச்ச கட்ட சந்திப்பும், பேச்சு வார்த்தையும் நடைபெறும். வெளியுறவுத் துறைசார்ந்த பரிமாற்றங்களும், ஒருங்கிணைப்பும் ஏற்படும். இதன்படி, இரு நாட்டு பிரதமர்களும் ஆண்டுக்கு ஒரு முறை சந்திப்பார்கள். இது அல்லாமல், பன்னாட்டு கூட்டங்கள் நடைத்தும் போதும் சந்திப்பார்கள். இது அல்லாமல், ஆண்டுதோறும் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் கூடி இராணுவக்

கொள்கைகள் பற்றி பேசுவார்கள். உயர் இராணுவத் துறை அதிகாரிகள் பரஸ்பர பயணம் செய்து பேச்சு வார்த்தை நடத்துவார்கள். கூட்டு பயிற்சியும், கூட்டு ஒத்திகைகளும் கடல்சார் இரு நாட்டு ஒத்திகைகளும் நடைபெறும். இது அல்லாமல், பாதுகாப்புத்துறைசார் ஆய்வு மற்றும் முன்னேற்றம் சார்ந்த ஒத்துழைப்புக்கு முயற்சிகள் செய்யப்படும். இதற்காக இரு நாட்டு இராணுவ அதிகாரிகள், தொழிலதிபர்களோடு சேர்ந்து பேசுவார்கள். இதில் குறிப்பாக, தீவிரவாதம் மற்றும் பன்னாட்டு குற்றங்களை எதிர்கொள்ளவும், தீவிரவாதத்துக்கு எதிரான பயிற்சிகளை அளிக்கவும், நவீன வெடி குண்டுகள், அவை சார்ந்த தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள வல்லுனர்கள் கூடிப் பேசுவது ஆகியவைகள் அடங்கும். நிலை நிறுத்தப்பட்ட நிர்வாக ஏற்பாடுகள் மூலம் இந்த செயல்திட்ட செயல்பாடு கண்காணிக்கப்படும். இதற்காக, இருநாட்டு வெளியுறவு மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டங்கள் நடைபெறும்.

## மற்ற நாடுகளோடு பாதுகாப்புத் துறைசார் ஒத்துழைப்பு

கடந்த ஆண்டில், இந்தியாவும், தென் கொரியாவும் தங்களுடைய பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக்கொண்டன. தென் கொரியாவுக்கு பிரதமர் மோடி பயணம் செய்தபின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இருந்த பத்து அம்சங்களில் ஏழு பாதுகாப்புத் துறைசார் ஒத்துழைப்பாகும். இதில் முக்கியமாக இருநாட்டு கப்பல் கட்டுமானங்களுக்கிடையே மற்றும் கடற்படைகளுக்கிடையே ஏற்படும் உறவுகளாகும். இதன்படி இந்திய கடற்படைக்கு தேவையான போர்க்கப்பல்கள் முதலில் தென் கொரியாவில் தயாரிக்கப்பட்டு, பிறகு அவர்களோடு கூட்டாக இந்தியாவில் தயாரிக்கப்படும்.

இதைப்போலவே, இந்தியா மற்றும் கனடா நாட்டு நிறுவனங்களுக்கிடையே வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்பட்டு அணுமின் உற்பத்தி, விண்வெளிப்பயணம் மற்றும் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்புகள் அறிவிக்கப்பட்டன. இப்படி ஏற்பட்ட வணிக ஒப்பந்தங்களில் ஒன்றில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கனடாவின் சாஸ்கச்சேவனிலுள்ள கேமிக்கோ நிறுவனத்தின் மூலம் ஏழு மில்லியன் பவுண்டுக்கு மேல் யுரேனியம் கிடைக்கும். இந்த பேரம் நிறைவு பெறுவதற்கு ஏதுவாக இந்திய அரசு மேற்கொண்ட கனடா, இந்தியா அணு ஒத்துழைப்பு ஒப்பந்தம் அமைந்தது.

இந்தியா, மொரிஷியாவுக்குமிடையே நீண்ட காலமாக பாதுகாப்புத்துறைசார் ஒத்துழைப்பு நிலவி வருகிறது. கடந்த ஓராண்டில் அது மேலும் மேம்படுத்தப்பட்டது. நவம்பர் 2, 2014 அன்று மொரிஷியசில் நடைபெற்ற இந்திய வம்சாவளியினர் கூட்டத்தில் பங்குகொள்ள முதன் முறையாக வெளியுறவுத்துறை அமைச்சராக அங்கு சென்ற அமைச்சர் திருமதி. சுஷ்மா ஸ்வராஜ் இந்தியாவுக்கும், மொரிஷியஸூக்கும் அத்தியாவசியமான இந்துமகாசமுத்திர பகுதியில் கடல் போக்குவரத்து பாதுகாப்புப் பற்றி பேசினார்கள். இந்திய மற்றும் மொரிஷியஸ் கடலோர காவல் படை மற்றும் கடற்படைக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்த இந்த நிகழ்ச்சிகளின் போது மொரிஷியஸ் துறைமுகங்களில் மூன்று பெரிய போர்க்கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.

இந்தியா, நெருங்கிய பாதுகாப்புத் துறைசார் ஒத்துழைப்பு மேற்கொண்ட மற்றொரு நாடு இஸ்ரேல் ஆகும். இரு நாடுகளும், தீவிரவாதத்துக்கு எதிரான பணிகளில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்துள்ளன. இந்தியாவிற்கு தேவையான ஏவுகணைகள் மற்றும் மனிதர் அல்லாத விண்கலங்கள் உள்ளிட்ட அதிநவீன இராணுவத் தளவாடங்களையும் இஸ்ரேல் அளித்துள்ளது. இந்த கூட்டு முயற்சி இந்த ஒரு ஆண்டில் வலுப்பெற்றது. அடுத்த ஒரு ஆண்டுக்குள் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேல் செல்வார். அது அந்நாட்டிற்கு இந்திய பிரதமர் ஒருவர் செல்லும் முதல் பயணமாகும்.

## முடிவுரை

பல நாடுகளுடன் இந்தியாவின் பாதுகாப் புத்துறை சார்ந்த ஒத்துழைப்பு பெருமளவு உயர்ந்துள்ளது. இது இந்தியாவிற்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்பதையும் இந்தியாவின் பாதுகாப்புப் படைகளின் மீது உலக நாடுகளுக்கு இருக்கும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. தங்களுடைய நாட்டு பாதுகாப்பை மேம்படுத்திக்கொள்ள பல நாடுகள் இந்திய உறவை விரும்புகின்றன. இது வரும் ஆண்டுகளில் மேலும் வளர்ந்து இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம் என்ற திட்டத்திற்கு அடித்தளமாக அமைந்து இந்தியாவை பெருமளவு முன்னேற்ற உதவும். ●

# நல்லாட்சி–நடைமுறைப்படுத்தப்படும் விதமும், உள்ளடக்கமும்!

*– முனைவர். ஏ. சூரியபிகாஷ்*

இந்தியாவில் 1989 ஆம் ஆண்டில் கூட்டணி ஆட்சி கலாச்சாரம் தோன்றிய பிறகு, பயனுள்ள நல்லாட்சி என்ற தத்துவம் சிதைந்துவிட்டதாகவும், நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதில் போதிய அளவு கவனம் செலுத்தப்படவில்லை என்றும் மக்களிடையே ஒரு எண்ணம் உருவாகியுள்ளது. அனைத்துத்தரப்பு மக்களிடமும் இந்த எண்ணம் பரவியது மட்டுமின்றி, சமூக பிரச்சனையாக இருந்தாலும், பொருளாதாரப் பிரச்சனை யாக இருந்தாலும் அரசு நிர்வாகத்திலும் இது எதிரொளிக்கத் தொடங்கியது. அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை காரணமாக, அரசு நிர்வாகத்தில் திறமையின்மையும், வெளிப் படைத் தன்மையின்மையும் அதிகரிக்கத் தொடங்கின. மற்ற பிரச்சனைகளைக் கையாளுவதைக் காட்டிலும், உலக நாடுகளுடனான பிரச்சனைகளை எதிர்கொள்வதில், இந்தியாவின் குழப்பமும், உறுதியற்ற நிலைப்பாடும் அப்பட்டமாக தெரிந்தன. சர்வதேச அளவில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து துல்லியமாக கருத்து தெரிவிக்காமல், உத்தேசமாகவும், குழப்பமாகவும் கருத்துத் தெரிவிப்பது அண்டை நாடுகள் ஆத்திரமூட்டும் வகையில் செயல்படும்போது, அவற்றுக்கு சரியான பதிலடி தராமல் உத்தேசமாக கருத்துத் தெரிவிப்பது ஆகியவற்றால் இந்தியாவின் சுயமரியாதை பாதிக்கப் பட்டது மட்டுமின்றி, ஒரு காலத்தில் உலக நாடுகளின் தலைவராக கருதப்பட்ட இந்தியா, இப்போது தலைமையில்லாத நாடாக மாறிவிட்டதோ என்று கருதும் அளவுக்கு நிலைமை மோசமானது. ஆனால், 2014 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை இந்திய மக்கள் தெளிவான பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்த்தியதைத் தொடர்ந்து, அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டன. இந்தியாவின் பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்ற பிறகு கடந்த 12 மாத கால ஆட்சியைப் பார்த்தவர்கள் ஒரு விஷயத்தை வெளிப்படையாக ஒத்துக்கொள்வார்கள். பிரதமர் நரேந்திர மோடி உண்மையாகவே உறுதிப்பாட்டுடன் செயல்படுகிறார் என்பதும், இந்தியாவை தலைமையேற்று நடத்திச் செல்வது மட்டுமின்றி, நவீன இந்தியாவைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட விருப்பம் உள்ள கோடிக்கணக்கான மக்களை அப்பணிக்கு தயார்படுத்துகிறார் என்பதும்தான் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படும் விஷயமாகும்.

நாடாளுமன்ற தேர்தலின்போது, பாரதிய ஜனதா கட்சி அளித்த வாக் குறுதிக்கும், நரேந்திர மோடி தலைமை யிலான இப்போதைய அரசின் செயல்பாட்டுக்கும் இடையே பெரும்

**முனைவர். ஏ. சூரியபிகாஷ்,** தலைவர். பிரசார் பாரதி, இந்திய அரசு, புதுதில்லி

இடைவெளி இருப்பதாக சிலர் வாதிடலாம். மக்களவைத் தேர்தலுக்கு முன்பு பாரதிய ஜனதா கட்சியால் உருவாக்கப்பட்ட எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதில் நரேந் திர மோடி தலைமையிலான அரசு தோல்வியடைந்துவிட்டதாக சிலர் குற்றம்சாட்டலாம். ஆனால், இந்தியாவின் எதிர்காலம் குறித்து நம்பிக்கையில்லாமல் இருந்தநிலை மாறிவிட்டது என்பதை நாட்டில் உள்ள எவரும் மறுக்க முடியாது. தேர்தலையொட்டி முன்வைக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஒன்றன்பின் ஒன்றாக அதிவேகத்தில் நிறைவேற்றி வருகிறது என்பதையும், அதனால் நாட்டுக்கு பயன்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

இவைதவிர மேலும் பல சாதனைகளையும் நரேந்திர மோடி தலைமையிலான அரசு படைத்திருக்கிறது. பல்வேறு துறைகளில் நரேந்திர மோடி அரசு வெற்றிகளையும், தோல்விகளையும் அறிந்துகொள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் ஒட்டுமொத்த செயல்பாட்டையும் ஆராய்ந்து, அதன் அடிப்படையில், அரசின் சாதனைகள் குறித்த நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். நரேந்திர மோடி தலைமையிலான அரசின் முதல் ஆண்டு ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த ஒன்றாகவே இருந்தது. இந்தக் காலத்தில் இதுவரை எதிர்கொள்ளாத அரசு நிர்வாகத்தில் பல விஷயங்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு மோடி அரசு தள்ளப் பட்டது. அதே நேரத்தில் காலம் காலமாக நீடித்து வரும் பிரச்சனைகளான பாலின சமத்துவமின்மை, துப்புரவு மற்றும் தூய்மை, வங்கித் துறையிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தது போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டது; மின் உற்பத்தி, தொடர் வண்டித்துறை, சாலைகளை உருவாக்குதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இலக்கு நிர்ணயித்து சாதனை படைத்தது; வெளியுறவுத் துறையில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டதுடன்,பேரிடர் மேலாண்மை மற்றும் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க இதுவரை இல்லாத அணுகுமுறையை அமைச்சர்களின் நேரடி கண்காணிப்பில் செயல்படுத்தியது போன்றவை நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சிறப்பான செயல்பாடுகளுக்கு சில உதாரணங்களாகும். இந்தத் துறைகள் ஒவ்வொன்றிலும் எத்தகைய மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதை பார்க்கும் போது, மற்றவர்களால் உணரக்கூடிய அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அறிய முடியும். ஏழைகள், விவசாயிகள் ஆகியோருக்கு சாதகமான திட்டங்களும், முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கக் கூடிய வகையில் புதுமையான திட்டங்களும், ஓராண்டு காலத்திற்குள் தொடங்கப்பட்டிருப்பது சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் ஒரு மகிழ்ச்சியான ஆச்சரியமாகும்.

**வெளியுறவு கொள்கை அதிரடிகள்**

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற நாளிலேயே வெளியுறவுத் துறையில் அதிரடிகள் தொடங்கிவிட்டன. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பதவியேற்பு விழாவிற்கு அனைத்து சார்க் நாடுகளின் தலைவர்களும் வரவழைக்கப்பட்டனர். அதன் பின்னர் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், சீன அதிபர் ஜி ஜிங்பிங், ஜெர்மன் சான்ஸ்லர் ஏஞ் சலா மெர்க்கல், பிரான்ஸ் அதிபர் பிராங்க்காய்ஸ் ஹாலன், ஜப்பான் பிரதமர்

ஷின்சோ அபே, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் என பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்தது, அவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்தியது என வெளியுறவுக் கொள்கை அதிரடிகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. மற்றொருபுறம் பிரதமராக பதவியேற்ற பின்னர் தமது முதல் சுற்றுப் பயணத்திற்காக பூடான் நாட்டை தேர்ந்தெடுத்ததன் மூலம், அண்டை நாடுகளின் உறவை மேம்படுத்திக் கொள்வதற்கு தான் ஆர்வத்துடன் இருப்பதை பிரதமர் நரேந்திர மோடி வெளிப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, நேபாளத்திற்கு இருமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஓராண்டிற்குள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 19 நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். உலகத் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொண்டது மட்டுமின்றி, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள மேடிசன் சதுக்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம், பிரான்ஸ் ஜெர்மனி, கனடா ஆகிய நாடுகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் மோடி கவர்ந்தார். இந்திய பிரதமர் என்ற முறையில் நரேந்திர மோடி வெளிநாடுகளுக்குச் சென்றபோது, அங்குள்ள இந்திய வம்சாவழியினரிடையே அவருக்குக் கிடைத்த வரவேற்பு என்பது, இதற்கு முன் வேறு எந்த இந்தியப் பிரதமருக்கும் கிடைக்காத ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

**வித்தியாசமான நிர்வாகம்**

நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசின் குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம் என்னவென்றால், நெருக்கடி மேலாண்மை மற்றும் மனிதாபிமான பிரச்சனைகளில் அந்த அரசு கடைபிடித்து வரும் வித்தியாசமான அணுகுமுறை ஆகும். ஈராக் உள்நாட்டுப் போரில் சிக்கித்தவித்த இந்திய செவிலியர்களை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்து வருவதில்தான் இந்த அணுகுமுறை முதன்முதலில் தொடங்கியது. அதன் பின்னர், ஏமன் நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், சிக்கித்தவித்த இந்தியர்கள் மற்றும் பல்வேறு வெளிநாட்டினரை மிகவும் ஆபத்தான சூழலில் மீட்டு, பத்திரமாக அழைத்து வருவதற்காக, இந்திய வெளியுறவுத்துறை அலுவலகம், இந்திய வான்படை, இந்திய கடற்படை ஆகியவை இணைந்து மேற்கொண்ட முயற்சிகள், உலகம் முழுவதும் பாராட்டுக் களைப் பெற்றன. உள்நாட்டுப் போர் ஆபத்தில் சிக்கித் தவித்த அனைத்து இந்தியர்களும் பாதுகாப்பாக அழைத்து வரப்படவேண்டும் என்பதற்காக, வெளி யுறவுத்துறை இணையமைச்சர் வி.கே. சிங்கை, பிஜிபோட்டி நகரிலேயே தங்கியிருந்து மீட்பு நடவடிக்கைகளை கண்காணிக்கும்படி பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டிருந்தார். இந்தியர்கள் மட்டுமின்றி, 41 நாடுகளைச் சேர்ந்த 960 பேர் உட்பட மொத்தம் 5,600 பேரை உள்நாட்டுப் போர் நடைபெற்ற பகுதியில் இருந்து மிகவும் பாதுகாப்பான முறையில் இந்திய மீட்புக் குழுவினர் அழைத்து வந்ததை உலகம் முழுவதும் உள்ள நாடுகள் வெகுவாக பாராட்டின.

நேபாளத்தில் மிகப்பெரிய அளவில் நிலநடுக்கம் தாக்கியதை அறிந்ததும், இந்திய மீட்புக் குழுவினர் மின்னல் வேகத்தில் விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். இத்தகைய வேகத்தையும், உறுதிப்பாட்டையும் இந்தியர்களோ அல்லது உலகின் மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களோ இதுவரை

கண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிலநடுக்கம் ஏற்பட்ட ஒரு சில மணிநேரங்களில் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடி உத்தரவின் பேரில், தேசிய பேரிடர் நடவடிக்கைக் குழுவினர் நேபாளத்திற்கு விரைந்து சென்று, இரவு – பகல் பாராமல் 24 மணிநேரமும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஜம்மு – காஷ்மீரில் வெள்ளம் ஏற்பட்டபோதும், பீகாரில் நிலநடுக்கம் ஏற்பட்டபோதும் இத்தகைய அணுகுமுறை கடைபிடிக்கப்பட்டது. உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பருவம் தவறிப் பெய்த மழையால், பயிர்கள் சேதமடைந்ததை அறிந்ததும், ஏராளமான மத்திய அமைச் சர்கள் அந்த மாநிலங்களுக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏராளமான உதவிகளைச் செய்தனர்.

எப்போதும் புதுமையாக சிந்திக்கும் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், நாட்டு மக்களிடம் தமது கருத்தை நேரடியாகக் கொண்டுசெல்லும் நோக்குடன் மன் கி பாத் என்ற பெயரில் வானொலியில் உரையாற்றத் தொடங்கினார். மாதம் ஒருமுறை அகில இந்திய வானொலி மூலம் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றும் மன் கி பாத் நிகழ்ச்சி தற்போது நாடு முழுவதும் பிரபலமடைந்திருக்கிறது. பல்வேறு தனியார் தொலைக்காட்சிகள், இந்த நிகழ்ச்சியை நேரலையாக ஒளிபரப்பு கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய நிர்வாக முறைக்கு சிறந்த உதாரணங்களில் ஒன்றாக பார்க்கப்படுவது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அறிமுகப்படுத்தியுள்ள நிர்வாக முறையாகும். இந்தியா சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய குடிமக்களும், வெளிநாடு வாழ் இந்தியர்களும் சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள இந்திய தூதரகத்தின் செயல்பாடுகள் குறித்தும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பொறுப்பற்ற தன்மை குறித்தும் புகார் கூறுவது வாடிக்கையான ஒன்றாக இருந்தது. ஆனால், அந்த நிலை இப்போது மாறிவிட்டது. உலகின் எந்த மூலையில் இருந்தும் இந்தியர்கள் உதவிகேட்டு டுவிட்டர் செய்தி அனுப்பினால், அதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் உடனடியாக பதிலளிப்பதும், அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதும் வாடிக்கையாகிவிட்டது. சில நேரங்களில் இந்திய நேரப்படி அதிகாலை 2 மணிக்கு வந்த டுவிட்டர் தகவல்களின் அடிப்படையில்கூட வெளியுறவுத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். உதவிகேட்டு டுவிட்டர் மூலம் வேண்டுகோள்கள் வரும்போது, அவற்றை சம்பந்தப்பட்ட தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவி கிடைத்ததை உறுதி செய்யும்வரை தொடர்ந்து கண்காணிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். வெளிநாடுகளில் வேலைக்குச் சென்று சிக்கிக் கொண்ட தொழிலாளர்களை அங்கிருந்து பத்திரமாக மீட்பதாக இருந்தாலும், குடும்ப வன்முறைக்கு இலக்காக்கப்பட்ட மகளிரை மீட்பதாக இருந்தாலும், இந்திய கடவுச்சீட்டை தொலைத்துவிட்டு தவிக்கும் குடிமக்களை மீட்பதாக இருந்தாலும் அதற்கான நடவடிக்கைகளை வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மேற்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உதவி தேவைப்படுபவர்கள் பெரிதாக எதையும் செய்யத் தேவையில்லை. தங்களின்

பிரச்சனை குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜுக்கு தகவல் தெரிவித்தால் போதுமானதாகும். அதன் அடிப்படையில், அவர்களுக்கு உதவி வழங்கப்படும். இவ்வளவு சிறப்பாக செயல்படும் வெளியுறவுத்துறை அமைச்சரோ அல்லது வெளியுறவுத்துறை அமைச்சகமோ இதுவரை இந்தியாவில் இருந்தது கிடையாது. வெளியுறவுத்துறை அமைச்சராக இருப்பவர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை மற்ற நாடுகளின் அமைச்சர்களுக்கு விளக்கும் முன்உதாரணமாக சுஷ்மா ஸ்வராஜ் திகழ்கிறார்.

### பொருளாதார ஊக்குவிப்பு

மத்திய அரசுக்கு கவலையளிக்கும் மற்றொரு பிரச்சனை என்னவெனில், இந்தியாவின் பொருளாதார நிலைமை ஆகும். தொடர்ச்சியாக நடைபெற்ற ஊழல்கள், நிர்வாக எந்திரம் செயலிழந்தது, இந்தியாவின் வளர்ச்சியில் நம்பிக்கை இழந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள், தங்களின் முதலீடுகளை திரும்பப் பெறத் தொடங்கியது ஆகியவற்றால் இந்தியப் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இந்தியப் பொருளாதாரம் உடனடியாக அதிவேக வளர்ச்சிப் பாதையில் பயணிக்குமா? பயணிக்காதா? என்பதைப் பொறுத்துதான் மத்திய அரசின் வெற்றி, தோல்வி அமையும் என்ற நிலை காணப்பட்டது. இதனால், உலகம் முழுவதும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அவர்களிடம் இந்தியா முதலீட்டுக்கு ஏற்ற நாடு என்பதை நிரூபிக்க வேண்டிய அவசரமும், பதற்றமும் நிலவியது.

அதன் பயனாக, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நரேந்திர மோடி அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு ஏராளமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, நிதியமைச்சர் அருண்ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளன. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் தொழில் மற்றும் வணிகத் துறையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதன் பயனாக அவர்கள், மீண்டும் இந்தியாவில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளனர். இதனால் இந்தியப் பொருளாதாரம் அதிவேக வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. மற்றொருபுறம், முதலீட்டாளர்களை அச்சுறுத்தக்கூடிய சில பிரச்சனைகளை தீர்க்கும் முயற்சிகளில் மத்திய நிதியமைச்சகம் ஈடுபட்டுள்ளது. இந்தியா, எளிதாக வணிகம் செய்ய ஏற்றநாடு என்ற தோற்றத்தை பெரிதுபடுத்தும் முயற்சிகளும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதற்கு முட்டுக்கட்டையாக இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையை 3 விழுக்காட்டிற்கும் கீழ் குறைப்பதற்கான செயல்திட்டத்தை நிதியமைச்சர் அருண்ஜெட்லி உருவாக்கியிருக்கிறார்.

இந்த நடவடிக்கையின் பயனாக, இந்தியாவின் முதலீட்டுச் சூழல் மேம்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் சீனாவை விஞ்சி, 9 விழுக்காடு என்ற இலக்கை எட்டும் என புள்ளி விவரக் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி, இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 35,000 கோடி என்ற உச்சபட்ச இலக்கை எட்டியிருக்கிறது.

அதேபோல் குறிப்பிடப்படவேண்டிய மற்றொரு அம்சம் என்னவென்றால், மத்தியில் ஊழல் இல்லாத ஆட்சி நடைபெறுகிறது என்பதுதான். கடந்த காலங்களில் மத்திய அரசில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்ற நிலையில், ஊழல் இல்லாத நிர்வாகத்தை வழங்குவதே பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது. கடந்த கால ஆட்சிகளில் ஊழல் காரணமாக நாட்டுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனால், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு, நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கீடு ஆகியவற்றுக்கான விதிமுறைகள் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. அந்த முறைப்படி ஏலம் நடத்தப்பட்டதால், மத்திய அரசின் வருவாய் கணிசமாக உயர்ந்திருக்கிறது.

நரேந்திர மோடி தலைமையிலான அரசின் மற்றொரு முக்கிய நடவடிக்கை என்னவென்றால், மத்திய திட்டக்குழுவை கலைத்தது ஆகும். நாட்டின் வளர்ச்சிக்கு திட்டமிடுவதற்காக உருவாக்கப்பட்ட திட்டக்குழுவால், இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு புதிய வளர்ச்சி உத்திகளை வகுத்துத் தரமுடியவில்லை. சோசியலிச காலத்தின் அடையாளமாகத் திகழும் திட்ட ஆணையம், அதேபோலவே தொடர்ந்து செயல்பட்டுவந்ததன் காரணமாகவே அந்த ஆணையம் களைக்கப்பட்டது. அதற்கு பதிலாக நிதி ஆயோக் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

நிதி ஆயோக் அமைப்பு சிறந்த கொள்கை வகுப்பு அமைப்பாகத் திகழும். நவீன இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்றவாறு புதிய வளர்ச்சிஉத்திகளை அந்த அமைப்பு வகுத்து வழங்கும். சமூகப் பொருளாதார சிக்கல்கள் குறித்து மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதுடன், மாநில அரசுகளுடனும் கலந்துபேசி பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்துறை பேராசிரியராக பணியாற்றி வந்த முனைவர் அர்விந்த் பனகரியாவை இந்த அமைப்பின் துணைத் தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது. இவர்களைத் தவிர, மேலும் பல உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். உண்மையான கூட்டாட்சித் தத்துவத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் நோக்குடன், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் வரிவருவாயில், மாநிலங்களுக்கு வழங்கப்படும் பங்கின் அளவை 32 விழுக்காட்டிலிருந்து 42 விழுக்காடாக உயர்த்தலாம் என்ற புரட்சிகரமான பரிந்துரையை 14–வது நிதி ஆணையம் வழங்கியுள்ளது. இந்தப் பரிந்துரையை பிரதமரும், நிதியமைச்சரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பரிந்துரையை ஏற்றதன் காரணமாக, 2015–16 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு வழக்கத்தைவிட ரூ.1.78 கோடி ரூபாய் கூடுதல் நிதியுதவி வழங்க வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மாநிலங்களுக்கான நிதி பகிர்வு 42 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டிருப்பது இதுவரை மேற்கொள்ளப்படாத மிகப்பெரிய அதிகார பரவலாக்கல் என்று மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி கூறியிருக்கிறார். நிதி ஆணையத்தின் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருப்பதன் மூலம், ஒத்துழைப்பு கூட்டாட்சித் தத்துவத்தைக் கடைபிடிக்க மத்திய அரசு உறுதியாக இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

## கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஊக்குவிப்பு

இந்தியா இனி வரும் ஆண்டுகளில் அதிக பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகளை எட்டவேண்டுமானால், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவேண்டும். இந்தியாவில் பெருமளவில் முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கு பெரும் உறுத்தலாக இருப்பது இந்தியாவில் போதிய அளவில் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் இருப்பதுதான். இந்த நிலையை மாற்றி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தமது அரசு முன்னுரிமை அளிக்கும் என்று தொழில் துறையினருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாக்குறுதி அளித்துள்ளார். அதன் காரணமாகவே உட்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக கண்காணித்து வருகிறார், அதுமட்டுமின்றி, நிலக்கரித்துறை, மின்துறை, நெடுஞ்சாலைகள் துறை, தொடர் வண்டித்துறை, துறைமுகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வசதியாக கடுமையான இலக்குகளை பிரதமர் நரேந்திர மோடி நிர்ணயித்துள்ளார்.

அதேபோல், மின்உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் பிரதமர் அலுவலகம் கடுமையான இலக்குகளை நிர்ணயித்துள்ளது. இந்த இலக்குகள் எட்டப்பட்டதன் காரணமாக, இந்தியாவில் மின்பற்றாக்குறை குறையத் தொடங்கியிருக்கிறது. கடந்த ஆண்டில் இந்தியாவின் மின் பற்றாக்குறை 10 விழுக்காட்டில் இருந்து 3.6 ஆக குறைந்துள்ளது. தில்லியில் தொடங்கி தேசிய தலைநகரப் பகுதிகள் ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில் 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்வதில், அரசு தீவிரம் காட்டி வருகிறது 12–வது திட்டக்காலத்திற்கான மின்உற்பத்தி இலக்குகளை விஞ்சவேண்டும் என்பதில், தமது அமைச்சகம் தீவிரமாக உள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் பியூஷ் சாவ்லா கூறியிருக்கிறார்.

அதேபோல், கடந்த 10 ஆண்டுகால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் முடங்கிக் கிடந்த தேசிய நெடுஞ் சாலை துறை கட்டுமானப் பணிகளுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், அனைத்து அமைச்சகங்களுக்கும், அமைச்சர்களுக்கும் காலக்கெடுவுடன் கூடிய இலக்குகள் நிர்ண யிக்கப்பட்டுள்ளன. எனவே, நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள எந்த அமைச்சரும் இலக்குகளை எட்ட உழைக்காமல், வெறுமனே இருக்க முடியாது.

## சாதனை படைப்பதற்கான புரட்சிகரத் திட்டங்கள்

உள்நாட்டை எடுத்துக்கொண்டால், தூய்மை பாரதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சார இயக்கங்கள் தொடங்கப்பட் டுள்ளன. இவற்றில் தூய்மை பாரதம் இயக்கம், மகாத்மாகாந்தியடிகளின் பிறந்த நாளன்று தொடங்கப்பட்டது. இந்தியாவில் உள்ள 70 விழுக்காடு வீடுகளில் கழிப்பறைகள் இல்லை என்பதையும், இதனால் அந்த வீடுகளில் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் கண்ணியத்திற்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை பொதுவெளியில் விவாதிக்க

பிரதமர் நரேந்திர மோடி ஒருபோதும் தயங்கியதில்லை. நாடு முழுவதும் கழிப்பறைகளைக் கட்டும் திட்டத்திற்கு புது உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. ஏழைக்குடும்பங்களும் கழிப்பறைகளை கட்டவேண்டும் என்பதற்காக இத்திட்டத் திற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருகிறது. மொத்தம் 6 கோடி கழிப்பறைகளை கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நரேந்திர மோதி தலைமையிலான ஆட்சியில் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ள மற்றொரு திட்டம் பிரதம மந்தியினி ஜன்கன் யோஜனா திட்டமாகும். ஏழைக்குடும்பங்களுக்கு வங்கிக் கணக்குத் தொடங்கி, அதன் மூலம் நிதி சேவை பெறும் உரிமையை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம், ஏழை மக்களும், வங்கி அமைப்பின் ஓர் அங்கமாக தங்களை மாற்றிக்கொள்ள முடிந்திருக்கிறது. இதுவரை வங்கி அமைப்பு என்பது ஏழைகளுக்கு எட்டாத ஒன்றாகவே இருந்து வந்த நிலையில், இப்போது அது மாற்றப்பட்டிருக்கிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட சில மாதங்களிலேயே இந்தியாவில் உள்ள 15 கோடி ஏழைக் குழந்தைகளுக்கு புதிய வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குகளில் ஏழை மக்கள் 15,800 கோடியை முதலீடு செய்துள்ளனர். இந்தக் கணக்குத் தொடங்கிய அனைவருக்கும் ரூபே பற்று அட்டை வழங்கப்படுவதுடன் ஒரு லட்சம் ரூபாய்க்கு இலவச விபத்துக் காப்பீட்டு சலுகையும் வழங்கப்படுகிறது. 6 மாதங்களுக்கு இந்தக் கணக்கை திருப்திகரமாக பராமரிக்கும் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் மிகை நிதி பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

ஜன்தன் திட்டம் வெற்றிபெற்றிருப் பதையடுத்து, ஏழை மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், மேலும் 3 திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. பிரதமமந்திரியின் தொழிலாளர்கள் விபத்துக் காப்பீடு திட்டம், பிரதம மந்திரியின் வாழ்நாள் காப்பீட்டுத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் ஆகியவைதான் அந்த 3 திட்டங்களாகும். பிரதம மந்திரியின் தொழிலாளர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்படி, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 2 லட்சம் ரூபாய் விபத்துக்காப்பீடு வழங்கப்படுகிறது. இதற்காக, சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் ஆண்டுக்கு 12 ரூபாய் ப்ரீமியம் செலுத்தினால் போதுமானது. பிரதம மந்திரியின் வாழ்நாள் காப்பீட்டுத் திட்டத்தின்படி, ஆண்டுக்கு 330 ரூபாய் ப்ரீமியம் செலுத்தும் தொழிலாளர்களுக்கு 2 லட்சம் ரூபாய் காப்பீடு வழங்கப்படுகிறது. அடல் ஓய்வூதியத் திட்டத்தின்படி, தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்தில் செலுத்தும் ப்ரீமியத் தொகைக்கு ஏற்ப அவர்கள் 60 வயதைக் கடந்தபின் மாதத்திற்கு 1000 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை ஓய்வூதியம் வழங்கப்படும். இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யவும், திறன் இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய இரு திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி செயல்படுத்தி வருகிறார். பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்த விரும்பும் மற்றொரு விஷயம் என்னவென்றால், ‘சிறிய அரசு, அதிக நிர்வாகம்’ என்பதாகும். அரசு நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், அரசுத்திட்டங்களை செயல்படுத்துவதில் முழுமையான வெளிப்படைத் தன்மையை

உறுதி செய்தல், அதிகாரிகளிடையே பொறுப்புடைமையை ஏற்படுத்துதல் ஆகியவைதான் இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.

### மத்திய அமைச்சரவை சில மாற்றங்கள்

மத்திய அமைச்சரவையில் சில மாதங்களுக்கு முன் சில திருத்தங்கள் செய்யப்பட்டு, தொடர் வண்டித்துறை அமைச்சராக சுரேஷ் பிரபுவும், பாதுகாப்புத் துறை அமைச்சராக மனோகர் பாரிக்கரும் சேர்க்கப்பட்டனர். தமது முதல் தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய சுரேஷ் பிரபு, வழக்கமான நடைமுறையில் இருந்து வித்தியாசமான அணுகுமுறையைக் கடைபிடித்தார். அலங்காரத்திற்காக சில திட்டங்களை அறிவித்துவிட்டு, அவற்றை செயல்படுத்தாமல் விடுவதைவிட, தொடர் வண்டித்துறையின் நிதிநிலை எவ்வாறு உள்ளது என்பதை முழுமையாக ஆராய்ந்து, அதற்கு ஏற்ற வகையில் திட்டங்களை செயல்படுத்தப் போவதாக அறிவித்தார். சுரேஷ் பிரபுவின் இந்த அறிவிப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

### நிறைவுரை

நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஓராண்டுகால செயல்பாடுகளில் இருந்து நம்மால் சில முடிவுகளுக்கு வர இயலும். பிரதமர் நரேந்திர மோடி தமது அதிரடியான செயல்பாடுகளால், தமது ஆதரவாளர்களையும், விமர்சகர்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறார். முந்தைய ஆட்சியில் கடைபிடிக்கப்பட்ட அனைத்து அம்சங்களையும் களைத்துவிட்டு, அதிரடியான அணுகுமுறையை கடைபிடித்து வருவதன் மூலம், தமது விமர்சகர்களை அவர் குழப்பமடைய வைத்துள்ளார். பிரதமர் மோடியின் இந்த அணுகுமுறை அரசு நிர்வாகத்தை நிலையானதாகவும், பொறுப்புள்ளதாகவும் மாற்றியுள்ளது. முற்றிலும் புதுமையான இந்த அணுகுமுறை, அரசு நிர்வாகத்திலும், தேசியப் பாதுகாப்பிலும் வெளியுறவுத்துறை கொள்கைகளிலும் சிறந்த பயன்களை வழங்கியுள்ளது.

ஆனால், நரேந்திர மோடியின் ஆதரவாளர்களை திருப்திபடுத்த இவை போதுமானதாக இல்லை. ஓராண்டு ஆட்சியின் முடிவில் மோடியின் அரசு பெரிய அளவில் சாதிக்கவில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். அனைத்தையும் விரைவாக சாதிக்க இது 20–20 கிரிக்கெட் போட்டி அல்ல என்பதை அவர்கள் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றிபெற்று, தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி 5 நாள் டெஸ்ட் போட்டியில் விளையாடிக் கொண்டிருக்கிறார். நரேந்திர மோடி அரசின் முதலாம் ஆண்டு ஆட்சி என்பது, 5 நாள் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தைப் போன்றதாகும். 5 நாள் போட்டிகளின் முடிவு 4–வது அல்லது 5–வது நாள் ஆட்டத்தில்தான் தெரியும். அதேபோல், நரேந்திர மோடி அவரது வாக்குறுதிகளை நிறைவேற்ற 5 ஆண்டுகள் உள்ளன. இந்தியாவின் எதிர்காலம் குறித்து அனைவரும் நம்பிக்கை இழந்திருந்த நிலையில், இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி, அதற்கான பயணத்தில் இளைஞர்களை இணைய வைத்த தலைவரை இந்தியா பெற்றுள்ளது. இந்தகைய சாதனையை பிரதமர் நரேந்திர மோடி படைத்துள்ள நிலையில், அவரது ஓராண்டு ஆட்சியின் முடிவில் சில குறைகள் இருந்தால், அவற்றை பெரிதாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ●

# இயற்கை மருத்துவம்: இந்தியாவின் மருத்துவ சவால்களுக்கான தீர்வு

– மருத்துவர் ஆர்.எம். நாயர்

ஒரு நாட்டில் மருத்துவ சேவை வழங்குவதற்கான வசதிகளும், அமைப்புகளும் எந்த அளவுக்கு உள்ளன என்பதை அறிந்து கொள்வதற்கான மிக முக்கிய காரணி மருத்துவ கட்டமைப்புகள் தான். நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட, உயர்தர மருத்துவ சேவை மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றால், அதற்கு ஆதரவாக மருத்துவக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## தேசிய மக்கள் தொகை மற்றும் மருத்துவ சேவை வழங்கும் திறன்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை 121.019 கோடியாகும். இவர்களில் ஆண்களின் எண்ணிக்கை 62.37 கோடி; பெண்களின் எண்ணிக்கை 58.64 கோடியாகும். இந்தியாவில் 60 விழுக்காட்டைத் தாண்டிய மக்களின் எண்ணிக்கை 7.4 விழுக்காடு ஆகும். இந்த பிரிவினர் எளிதில் நோயால் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதால் இவர்களுக்கு கூடுதல் மருத்துவ கவனிப்புத் தேவைப்படுகிறது. இயற்கை வைத்தியம் எளிதில் கிடைப்பதாகவும், செலவு குறைவானதாகவும் இருப்பதால் இந்த பிரிவினரின் மருத்துவ கவனிப்பில் இயற்கை மருத்துவம் முக்கியப் பங்காற்றக் கூடும். அதுமட்டுமின்றி, இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை ஊரகப்பகுதிகளில் 33.80% ஆகவும், நகர்ப்புறங்களில் 20.90% ஆகவும் உள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்தியாவில் மொத்தம் 35.46% மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்றனர். இவர்களும் குறைந்த செலவில் மருத்துவம் தேவைப்படும் நலிவடைந்த பிரிவினர் ஆவர்.

2013 ஆண்டின் தேசிய சுகாதார நிலைமை குறித்த அறிக்கையில் இந்தியா முழுவதும் 19,817 மருத்துவமனைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 15,398 மருத்துவமனைகள் ஊரகப்பகுதிகளிலும், 4419 மருத்துவமனைகள் நகரப்பகுதிகளிலும் உள்ளன. இவைதவிர மொத்தம் 1,51,684 துணை மருத்துவ நிலையங்களும், 24,448 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 5187 சமுதாய சுகாதார நிலையங்களும் உள்ளன. அவை மட்டுமின்றி, ஆயுஷ் துறையின் கீழ் 3167 மருத்துவமனைகளும், 26,107 மருந்தகங்களும் இந்தியாவில் உள்ளன.

மேலும் இந்தியாவில் இயற்கை மருத்துவமனை மற்றும் மருந்தகங்களும் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

| வ. எண் | இயற்கை மருத்துவ வசதிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மருத்துவமனைகள் | 107 |
| 2. | மருந்தகங்கள் | 97 |
| 3. | பதிவு பெற்ற மருத்துவர்கள் | 1401 |
| 4. | இயற்கை மருத்துவ கல்லூரிகள் | 17 |

இந்தியாவில் இந்த அளவுக்கு மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கும்

போதிலும் ஒவ்வொரு மருத்துவரும், ஒவ்வொரு செவிலியரும், பிற துணை மருத்துவப் பணியாளர்களும் எத்தனை பேருக்கு மருத்துவ சேவை வழங்க வேண்டும் என்பதில் மிகப்பெரிய இடைவெளி நிலவுகிறது. அதன் தன்மையை புள்ளிவிவரங்கள் விளக்கும்.

## இயற்கை மருத்துவமுறை – ஒரு விளக்கம்

இயற்கை மருத்துவமுறை என்பது உடல், மனம், தார்மீகம், தெய்வீகம் ஆகியவற்றை இயற்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் இணைத்து நல்லிணக்கமான சூழலை தட்டி எழுப்பும் முறை ஆகும். இயற்கை மருத்துவமுறைக்கு இயற்கையால் குணமடைதல், இயற்கை சிகிச்சை முறை ஆகிய பெயர்களும் உண்டு. இந்த

| வ. எண் | தேசிய குழுக்களால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் | ஒவ்வொரு பணியாளரும் சேவை செய்ய வேண்டிய மக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அலோபதி மற்றும் ஆயுஷ் மருத்துவர்கள் | 1217.84 |
| 2. | அலோபதி மருத்துவர்கள் | 1384.43 |
| 3. | ஆயுஷ் மருத்துவர்கள் | 1783.21 |
| 4. | பல் மருத்துவர்கள் | 10,120.85 |
| 5. | செவிலியர்கள் | 531.79 |
| 6. | மருந்தாளுனர்கள் | 1986.94 |

முறையில் உடல் நலம் பாதிக்கப்பட்டவரை குணப்படுத்துவதற்காக வானம், காற்று, நெருப்பு, நீர், பூமி, உணவுக்கட்டுப்பாடு, ராம் நாம் (Ram Naam) ஆகிய சக்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஏழு சக்திகளை பயன்படுத்தி சிகிச்சை அளிப்பது இப்போதுள்ள மருத்துவ முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது ஆகும். இயற்கை மருத்துவமுறை என்பது நோய் தீர்க்கும் நடைமுறை மட்டுமே என்று எவரேனும் கருதினால் அவர்களின் எண்ணம் தவறு என்று பொருளாகும். யதார்த்தம் என்னவென்றால் இயற்கை மருத்துவமுறை தான் சரியான வாழ்க்கை முறை ஆகும். இது நீண்ட, ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை அடையும் கலையாகும்.

தவறான உணவு முறை மற்றும் வாழ்க்கை முறைகளால் மனித உடலில் தேவையில்லாத நச்சுக்களும், கழிவுகளும் சேர்வது தான் நோய்கள் உண்டாவதற்குக் காரணம் என்று இயற்கை மருத்துவமுறை நம்புகிறது. இயற்கையே மருத்துவர் என்ற தத்துவத்தின் அடிப்படையில், நோயாளிகளின் உடலில் சேர்ந்துள்ள நச்சுக்களை இயற்கை சக்திகளைப் பயன்படுத்தி வெளியேற்றுவதன் மூலம் அவர்களின் உடல்நலனை பழைய நிலைக்குக் கொண்டு வருவது தான் இயற்கை மருத்துவத்தின் அடிப்படை ஆகும்.

இந்தியாவின் தந்தை என்று போற்றப்படும் மகாத்மா காந்தி இயற்கை மருத்துவ முறையில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். உடல்நலனைப் பாதுகாக்க இயற்கையுடன் இணைந்து வாழ வேண்டுங் எவரேனும் உடல் நலம் பாதிக்கப்பட்டால் அவரை குணப்படுத்த இயற்கை மருத்துவ முறையை பயன்படுத்த வேண்டும் என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார். மகாத்மா காந்தி, தம்மை காண வருபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான தமது தேடல் மற்றும் நீண்ட நெடிய அனுபவத்தின் காரணமாகவே இயற்கை மருத்துவ முறையை பரிந்துரைத்தார். இயற்கை மருத்துவம் நோய்களைக் குணப்படுத்தும் விதம் மிகவும் எளிதானதும், எளிமையானதும் ஆகும். ஒரு நோயாளி ஒரு முறை இயற்கை மருத்துவ முறையைப் நம்பி வந்து விட்டால், அவர் தனது வாழ்நாள் முழுவதும் இயற்கை

மருத்துவ முறையின் தீவிர ரசிகர்களாகி விடுவார்கள். மற்ற மருத்துவமுறைகளுடன் ஒப்பிடும்போது இயற்கை மருத்துவமுறையில் செலவு மிகவும் குறைவு ஆகும். எனவே, இந்தியா போன்ற ஏழை நாடுகளில் இந்த மருத்துவமுறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் இந்த முறையை மிகவும் எளிதாக பின்பற்ற முடியுங் அதனால் வாழ்நாள் முழுவதும் மருத்துவர்களோ அல்லது மருந்துகளோ இல்லாமல் வாழமுடியும்.

இயற்கை மருத்துவ முறையின் முக்கியமான வலிமை என்பது, நோய்த் தடுப்பு மருத்துவமாக மட்டும் அல்லாமல் நோயை குணப்படுத்தும் மருத்துவமாகவும், உடல் நலத்தை மேம்படுத்தும் மருத்துவ மாகவும் திகழ்வது தான். பல்வேறு வகையான கொடிய நோய்களுக்கு, அதிலும் குறிப்பாக 60 வயதைக் கடந்த மூத்தக் குமேக்களுக்கு சிறந்த சிகிச்சை முறையாக இயற்கை மருத்துவ முறை திகழ்வது குறிப்பிடத்தக்கது.

## இயற்கை மருத்துவ முறையின் பயன்கள் என்ன?

இயற்கை மருத்துவமுறை அனைத்து நோய்களையும் தீர்க்கும் திறன் படைத்ததாகும். அலோபதி மருத்துவமுறையால் முழுமையாக குணப்படுத்த முடியாத நோய்களைக் கூட இயற்கை மருத்துவமுறை குணப்படுத்திவிடும் என்பது குறிப்பிடத் தக்கது. இயற்கை மருத்துவமுறை நோயாளிகளின் உடல் முழுவதிலும் கவனம் செலுத்துகிறது; மற்ற நோய்களைப் போல ஒரே ஒரு பகுதியில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உடலுக்கு வலிமை சேர்க்கும் நுண்ணூட்டச்சத்துக்கள் அடங்கிய இயற்கை உணவின் முக்கியத்துவம் குறித்தும், ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் நோயாளிகளுக்கு இயற்கை மருத்துவர்கள் விளக்குவார்கள்.

இயற்கை உணவுகள் மட்டுமின்றி, இயற்கையான சிகிச்சைகள் குறித்தும் இயற்கை மருத்துவர்கள் விளக்குவார்கள். இயற்கை சிகிச்சையால் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்திருக்கின்றனர்.

**சில முக்கியமான இயற்கை சிகிச்சைகள் குறித்த விவரங்கள் வருமாறு:**

***நீர்சிகிச்சை:*** நீர் சிகிச்சை என்பது புகழ்பெற்ற பழங்கால சிகிச்சை முறையாகும். இந்த சிகிச்சை முறையில் குளிர்ந்த நீர் குளியல், சுடுநீர் குளியல், நீராவிக்குளியல், அறை நீராவிக்குளியல், அழுத்தம் மற்றும் மாவு ஒத்தடக்குளியல், நீர்மூழ்கிக் குளியல் என பலவிதமான முறைகள் உள்ளன. எந்தளவு வெப்பநிலையில், எவ்வளவு நேரம் இந்த குளியல் சிகிச்சையை மேற்கொள்கிறோம் என்பதைப் ,பொறுத்து இதன் பயன்கள் மாறுபடும்.

***மண் சிகிச்சை:*** நமது உடலில் உள்ள நச்சுப் பொருட்களை ஈர்த்தும் கலைத்தும், வெளியேற்றியும் நமது உடலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் சக்தி மண்ணுக்கு உண்டு. மண் குளியல், மண் ஒத்தடம் ஆகியவற்றின் மூலம் மண் சிகிச்சை செய்யப்படுகிறது. சொரியாசிஸ், கொப்புளங்கள், கட்கெள், படை போன்ற தோல்வியாதிகளை மண் சிகிச்சை மூலம் எளிதில் குணப்படுத்த முடியும். அதிக ரத்த அழுத்தம், நீரிழிவு, ஒற்றைத்தலைவலி, ஆர்த்ரைடிஸ், மலச்சிக்கல், வாயுத்தோல்லை, டிஸ்பெப்சியா, அனொரெக்சியா, பெப்டிக்–டியோடெனல் அல்சர், மாதவிடாய் கோளாறுகள் ஆகியவற்றை மண் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

***மசாஜ் சிகிச்சை:*** உடலுக்கு வலிமை சேர்த்தல், உடலில் உள்ள சக்திகளைத்

தூண்டுதல், உடல் வலியை போக்கி, ஓய்வு தரும் மயக்க நிலையை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காகவே மசாஜ் சிகிச்சை செய்யப்படுகிறது. உடலில் ரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும், உடல் சோர்விலிருந்து விடுபடவும் இந்த சிகிச்சை மிகவும் பயனுள்ளதாகும். நமது உடலில் சேரும் கழிவுப் பொருட்கள் வியர்வையுடன் வெளியேற வேண்டியது அவசியமாகும். ஆனால், நமது தோலில் உள்ள துளைகள் அடைபடுவதால் இந்த கழிவுகள் வெளியேற முடிவதில்லை. இதற்கு காரணமான துளை அடைப்புகளை நீக்கி கழிவுகளை வெளியேற்ற இந்த சிகிச்சை முறை பெரிதும் உதவுகிறது. ரூமேட்டாய்டு ஆர்த்ரைடிஸ், ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ், மூட்டு விலகல், தோள்பட்டை வலி, பக்கவாதம், வாயு சார்ந்த பிரச்சினைகள் (மலச்சிக்கல், வாயுத்தோல்லை, டிஸ்பெப்சியா, அனொரெக்சியா), மேட்டபாலிக் பிரச்சினைகள், ஹார்மோன் பிரச்சினைகள், நரம்பு பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்க்க மசாஜ் சிகிச்சை பயனுள்ளதாக உள்ளது.

வண்ணஒளி சிகிச்சை: சூரிய ஒளி மொத்தம் 7 வண்ணங்களைக் கொண்டிருக்கிறது. சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, பச்சை, நீலம், கருநீலம், ஊதா ஆகியவையே அந்த வண்னங்கள் ஆகும். நமது உடலில் எண்ணெய் மற்றும் சக்தி ஏற்றப்பட்ட தண்ணீரை தேய்ப்பதன் மூலம் அதன்வழியே சூரியக் கதிர்களை ஊடுருவச் செய்து இந்த வண்ணங்கள் நமது உடலில் சேர்க்கப்படுகின்றன. வாழை இலை சூரியக்குளியல், அடுப்பு சூரியக்குளியல், திறந்தவெளி சூரியக்குளியல் ஆகியவை தான் போதுவாக செய்யப்படும் சூரியக்குளியல்கள் ஆகும். ஆர்த்ரைடிஸ், ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ், ஆஸ்டியோ போரோசிஸ், சொரியாசிஸ், எக்சிமா, மெல் சுவாச அமைப்பு பிரச்சினைகள், உடல் இளைப்பு, பக்கவாதம், அதிகரத்த அழுத்தம், செரிமான பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

காந்த சிகிச்சை: மனிதர்களின் உடல்நிலையில் காந்தம் பலவகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு வகையான, பல்வேறு திறன் கொண்ட காந்தங்களின் வடக்கு மற்றும் தெற்கு துருவங்களை பயன்படுத்தி இந்த சிகிச்சை வழங்கப்படுகிறது. இந்த சிகிச்சையின் போது இந்த காந்தங்கள் நேரடியாகவே அல்லது திறன் ஏற்றப்பட்ட தண்ணீர் அல்லது எண்ணெயின் மூலமாகவோ நமது உடலில் வைக்கப்பட்டு நோய் குணமாக்கப்படுகிறது.

மேற்கண்ட சிகிச்சை முறைகள் தவிர யோகா, உணவுக்கட்டுப்பாடு, உண்ணாவிரதம், அக்குபிரசர், அக்குபஞ்சர், முத்ரா சிகிச்சைமுறை, பிரமீடு சிகிச்சை முறை ஆகியவை புகழ் பெற்றவையாகும். மன அழுத்தம், பதற்றம், தசைப் பிடிப்பு, தலைவலி, உடல் சோர்வு, போன்ற நரம்புமண்டல பிரச்சினைகளுக்கு இவை சிறப்பான சிகிச்சை முறையாகும். மாதவிடாய் பிரச்சினைகள், மாதவிடாய்க்கு முந்தைய பிரச்சினைகள், குடிந்தையின்மை ஆகியவற்றையும், வாயுத்தோல்லை, மலச்சிக்கல், குடல் வலி பிரச்சினை போன்றவற்றையும் இந்த சிகிச்சை முறைகளின் மூலம் குணப்படுத்த முடியும். நோய் எதிர்ப்புக் குறைபாடு, ஒவ்வாமை, எடை குறைவு, இருமல், ஜலதோஷம் மற்றும் காய்ச்சல், தூக்கமின்மை, புரோஸ்டேட் பிரச்சினைகள், ஆர்த்ரைடிஸ், அதிக கொழுப்பு ஆகிய பிரச்சினைகளை இதன் மூலம் தீர்க்க முடியும்.

குறைந்த செலவு: இந்தியாவில் இயற்கை மருத்துவமுறை கடைபிடிக்கப்பட்டால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவத்தில் எந்த சமரசமும் செய்து கொள்ளாமல், மிகக் குறைந்த செலவில்

தரமான மருத்துவம் அளிக்க முடியும். இதன்மூலம் நாட்டுக்கு பெரும் தொகையை சேமிக்க முடியும். வழக்கமான மருத்துவமுறைகளை விட இயற்கை மருத்துவமுறை குறைந்த செலவு பிடிக்கக் கூடியது ஆகும். ஆனால், கடுமையான நோய்களையும் குணப்படுத்தும் சக்தி கொண்டதாகும். இதனால் அலோபதி மருத்துவத்தில் சிகிச்சைக்கான கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் கூட இயற்கை மருத்துவமுறையில் குறைந்த செலவில் சிகிச்சை பெற்று குணமடைய முடியும். இந்த மருத்துவ முறையை அனைவரிடமும் கொண்டு சேர்ப்பதற்கான சுகாதார சேவை வழங்கும் முறையை உருவாக்கி பயன்படுத்துவது தான் மருத்துவ செலவுகளை குறைப்பதற்கும், சுகாதார சேவையின் தரத்தை அதிகரிப்பதற்கும் சிறந்த வழியாகும்.

## தேசிய சுகாதாரக் கொள்கை

தேசிய சுகாதாரக் கொள்கை 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. சுகாதாரத் துறையில் படைக்கப்பட்டுள்ள சாதனைகளை அங்கீகரித்துள்ள இக்கொள்கை சுகாதார சேவை வழங்குவதில் சமநிலையற்றத் தன்மை நிலவுவதையும், நலிவடைந்த மக்களால் தரமான சிகிச்சை பெற முடியாத நிலை காணப்படுவதையும் அதை மனதில் கொண்டு சரி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. மருத்துவ சேவை வழங்குவதில் நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் இடைவெளி காணப்படுவதுடன், ஒட்டுமொத்த நாட்டிலும் பாகுபாடுகள் காணப்படுவதை கருத்தில் கொள்ள வேண்டும். ஏராளமான மாவட்டங்களில், குறிப்பாக பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் மருத்துவ சேவை வழங்கல் மிகவும் மோசமாக உள்ளது. மருத்துவ சேவை வழங்குவதில் முன்னேற்றமடைந்து வரும் மாநிலங்களில் கூட இந்த நிலை தான் காணப்படுகிறது. ஒதுக்கப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மக்களும், பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய மக்களும் தான் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

ஆயுஷ் சேவைகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் தேசிய சுகாதாரக் கொள்கை வலியுறுத்தியுள்ளது. போதுத்துறை மூலம் ஆயுஷ் கட்ட மைப்புகளை ஒட்டுமொத்தமாக வலுப் படுத்துதல், பிற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் மேம்பாடு செய்தல், சமுதாயம் சார்ந்த நோய்த்தடுப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை மேற் கொள்ளும்படி அக்கொள்கை வலியுறுத்தி யுள்ளது. ஆயுஷ் சேவை வழங்குவதில் தனியார் நிறுவனங்களும், லாப நோக் கில்லாத தொண்டு நிறுவனங்களும் பங்களிப்பு செய்திருப்பதையும் இந்தக் கொள்கை அங்கீகரித்துள்ளது.

**பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமத்தில் வழங்கப்படும் சேவைகள் என்ன?**

இந்தியாவிலுள்ள முன்னணி இயற்கை வைத்திய மருத்துவமனைகளில் பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமமும் ஒன்றாகும். உடல் நிலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள விரும்புபவர்கள், நோயாளிகள், மருத்துவர்கள், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட பிரிவினருக்கு சிறந்த முறையில் இம்மருத்துவமனை சேவை செய்து வருகிறது. இயற்கை வைத்தியம் மற்றும் யோகா அறக்கட்டளை என்ற அமைப்பிம் கீழ் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மருந்து இல்லாமல் சிறந்த ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறையான இயற்கை மருத்துவம் மற்றும்

யோகாசனக் கலையை பரப்புதல் மற்றும் மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் இந்த மருத்துவ நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இயற்கை மருத்துவம், ஆயுர்வேதம், யோகா, உடல் இயக்கவியல் உள்ளிட்ட மருத்துவ சேவைகளை அனைத்து வயதுப் பிரிவினருக்கும் சிறப்பு கவனத்துடன் போற்றத்தக்க வகையில் குறைந்த கட்டணத்தில் நாங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம். இந்த மருத்துவமனைகளின் நோக்கங்கள், " விலை உயர்ந்த மருந்துகளை வாங்க வசதியில்லாத ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்களுக்கு நியாயமான கட்டணத்தில், சிக்கல் இல்லாத சிறப்பான மருத்துவ முறையாக இயற்கை மருத்துவம் மற்றும் யோகா விளங்குகிறது" என்ற மகாத்மா காந்தியகௌின் கருத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமத்திற்கு தில்லியில் அதிநவீன வசதிகளுடன் கூடிய முழுமையான இயற்கை வைத்தியசாலை உள்ளது. அந்த இயற்கை வைத்தியசாலை 1984 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 2 ஏக்கர் பரப்பளவில் இயற்கை வைத்தியம் அளிப்பதற்கு ஏற்ற பசுமையான சூழலில் இந்த மருத்துவமனையின் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. உடல் இயக்கவியல், அக்குபஞ்சர், அக்குபிரஷர் உள்ளிட்ட அனைத்து வகையான இயற்கை மருத்துவ சேவை வழங்குவதற்கான பிரிவுகளுடன் உள்நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் பிரிவுகள் இம்மருத்துவமனையில் உள்ளன. இவைதவிர ஆர்கானிக்/ ஆயுர்வேத மருந்தகங்களும் உள்ளன.

இம்மருத்துவமனையைப் பற்றி இன்னும் குறிப்பாக கூற வேண்டுமானால் போதுமான அளவுக்கு இயற்கை மருத்துவமுறை மருத்துவர்கள், ஆயுர்வேதம் மற்றும் உடல் இயக்கவியல் மருத்துவர்கள் உள்ளன; 50 உள்நோயாளிகளுக்கான படுக்கைகள், 200 புறநோயாளிகளுக்கான வசதிகள்,யோகா அரங்கம், சிறிய உணவு அரங்கம் ஆகியவையும் இம்மருத்துவமனையில் உள்ளன.

மருத்துவசேவை வழங்குவது மட்டுமின்றி, மருத்துவமனை வளாகத்திலும், பல்வேறு அரசு/ அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் அவற்றின் ஊழியர்கள் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா சிகிச்சை முறைகளின் பயன்கள் குறித்து அறிந்து கொள்வதற்கு வசதியாக கருத்தரங்குகள், பயிலரங்குகள் போன்றவற்றையும் பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமம் நடத்தி வருகிறது.

மேலும், மத்திய அரசு, தில்லி அரசு மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்கள்/ போதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்காக அந்த அமைப்புகளால் பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இயற்கை மருத்துவ முறைக்கான மனித வளத்தை பெருக்கும் நோக்குடன் இயற்கை மருத்துவ முறை/ ஆயுர்வேதம்/ யோகா சிகிச்சை முறைகள் உள்ளிட்டவை குறித்த குறுகியக் கால திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகளையும் பாபு இயற்கை வைத்திய மருத்துவமனை மற்றும் யோகாஸ்ரமம் நடத்துகிறது. இந்த வகுப்புகளால் பயனடைபவர்களில் பெரும்பாலானவர்கள் வட கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட இளைஞர்கள் ஆவர். இப்பயிற்சியின் பயனாக அவர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.